# சுதந்திரமா

# பாகிஸ்தானு?

ஸி. எஸ். பிள்ளை

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

# சுதந்திரமா, பாகிஸ்தானா ?

ஸி. எஸ். பிள்ளை

"………பிரச்னை அறிவுக்குகந்த தர்க்க வாதங்களுடன் விளக்கப்பட்டுள்ளது"

—ஸர் ஸி. பி. ராமசுவாமி ஐயர்
திருவாங்கூர் திவான்

வெளியிட்டோர் :

தாம்ஸன் அண்டு கோ., லிமிடெட்.

முழு விற்பனை உரிமையாளர் :

தமிழ்நாடு வெளியீடு

33, பிராட்வே, சென்னை.

உரிமை பெற்றது

விலை ரூ. 2

செப்டம்பர் 1946

# முன்னுரை

1940-ல் லாகூரிலே பாகிஸ்தான் தீர்மானத்தை முஸ்லிம் லீக் நிறைவேற்றியபோது நான் லண்டனில் இருந்தேன். அத் தீர்மானம் அங்குள்ள அரசியல் வட்டாரங்களில் உண்டாக்கிய எழுச்சியும் பரபரப்பும் இப்போதும், நான் நேரில் கண்டது போலவே எனக்கு ஞாபகமிருக்கிறது.

இந்தியாவைக் கூறு போடுவதென்னும் ஆபத்தைத் தவிர்க்கக் கூடிய ஆலோசனை எதுவாகிலும் ஜின்னாவிடமிருந்து வருமென்று இந்தியா லீகினரும் இதர தேசீய வட்டாரத்தினரும் எண்ணாதும் எண்ணிக் கொண்டிருக்க, அதிகாரத்தில் இருந்தவர்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தார்கள். காங்கிரஸைப் பற்றியும் காந்திஜியைப் பற்றியும் அவர்கள் இது வரையில் அடக்கி வைத்துக் கொண்டிருந்த மனக்கசப்பு திடீரென பீறிட்டுக்கொண்டு வெளிப்பட்டது. அது ஜின்னாவுக்கும் முஸ்லிம் லீகுக்கும் வரையறையில்லாத புகழ்மாலையாக உருவடைந்தது.

பிளாஸ்ஸி யுத்தத்துக்குப் பிறகு இந்தியாவிலிருந்து கிடைத்த மகத்தான செய்தியாக பிரிட்டிஷார் அதை வரவேற்றார்கள். ஆட்சி புரியும் பிரிட்டிஷ் வர்க்கத்தினர் காந்தி, காங்கிரஸ் ஆகிய எதிரிகளை வேருடன் களைந்தெறிவதில் ஜின்னாவுடனும் முஸ்லிம்களுடனும் சினேக பாவத்துடன் பகிரங்கமாகப் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்தது எல்லாம் காதிலும் விழுந்தது. இது ஜின்னாவை நிலை கொள்ளும்படிச்செய்து, பிரிட்டிஷாரிடம் மனப்பூர்வமாகச் சரணாகதி யடையும்படியும் செய்து விட்டது.

முஸ்லிம் லீக் பாகிஸ்தான் தீர்மானத்தை நிறைவேற்றியதிலிருந்து, இந்தியாவிலும் அதற்கு வெளியிலும் பாகிஸ்தானிகளும் அவர்களை ஆதரிப்பவர்களும் மிக்க தீவிரமாகவும் இடைவிடாமலும் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். இப்பிரசாரம், பாகிஸ்தான் என்பது தவிர்க்க முடியாததென்று உலகத்தார் நினைக்கும்படிச் செய்யும் ஆபத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. சர்வ நாசத்திற்கு ஏதுவான இக்கருத்து உலக ராஜதந்திரிகளின் மனத்தில் வேரூன்றுவதற்கு முன், இவ்விபத்தைத் தவிர்ப்பதற்குச் செய்யவேண்டிய எல்லாவற்றையும் நாம் செய்யவேண்டும்.

ஜின்னா தமது இஷ்டபூர்த்தி அடைவதற்குப் பிரசாரத்தைத் தான் நம்பி யிருக்கிறார். அவருடைய கோரிக்கை நிறை வேற்றப் படும்வரையில் எதை வேண்டுமானாலும் எதிர்ப்பதில்தான் அவர் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறார். அவருடைய எதிரிகள்

ஏமாற்றமடைந்து, உதவியற்றுப்போய், அவரிடம் சரணுகதி அடைகிறவரையில் ஒரு பச்சை சந்தர்ப்பவாதிக்குள்ள முழுத் திறமையையுங் கொண்டு இந்த அரசியல் விளையாட்டை வெற்றிகரமாய் விளையாடுவாரென்றும், சகலவிதமான அரசியல் முன்னேற்றத்தையும் தடுப்பாரென்றும் நாம் எதிர்பார்க்கலாம்.

இத்தகைய சூழ்ச்சிகளால் ஜின்னு வெற்றியடைவாரா? அரசியலில் சந்தர்ப்பவாதியாக இருந்தால் கொஞ்ச காலத்துக்குத் தான் என்ருலும்—நல்ல பலன் கிடைக்குமென்று சரித்திரம் ஏராளமான சான்று தருகிறது.

முஸ்லிம் லீக் நிறைவேற்றிய 'நேரடியான நடவடிக்கை'த் தீர்மானம் ஜின்னுவுக்கும் அவரை ஆதரிப்பவர்களுக்கும் உண்மையிலேயே துர்ப்பாக்கியமானது. ஏனென்ருல், பரம்பரையையும் சுபாவத்தையும் வைத்துக்கொண்டு பார்க்கும்போது, அது லீகும் ஜின்னுவும் தாங்கமுடியாத ஒரு கடுஞ் சோதனையாகும்.

பாகிஸ்தானின் விளைவுகள் எவை யென்பதைப் பற்றிப்பொது ஜனங்களுக்கு விளக்கிச் சொல்வது மூலமாக, நமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ளவும் தீர்க்கமான எச்சரிக்கை செய்யவும் நாம் தெய்வ சாட்சியாகக் கடமைப்பட்டிருக்கிருேம். இந்தியாவிலே ஒரு பகிரங்கமான உள்நாட்டுக் கலகத்தைக் கொண்டுவந்து புகுத்தி அதனுல் பலனடையத் தங்களாலானதை யெல்லாம் ஜின்னுவும் முஸ்லிம் லீகும் செய்வது காரணமாக, நமது மேற்சொன்ன கடமையின் அவசியம் இன்னும் அதிகமாகிறது. அதைப் பூர்த்திசெய்யவே, இந்நூல் எழுதப்பட்டது.

33, பிராட்வே
14—8—46

ஸி. எஸ். பி.

# பொருள் அடக்கம்


பக்கம்.

முதல் அத்தியாயம் ... 1

[ஒரு பயங்கர எதிர்ப்பு—மதக் கொள்கையாம்—ஹிமாலயத் தவறு—கண்கூடான ஆபத்து—காந்திஜியின் நாசக் கொள்கை—ஏன் இந்த அவசரம்?—சிக்கலிலிருந்து வெளியேற]

இரண்டாம் அத்தியாயம் ... 9

[சுய நிர்ணயக் குழப்பம்—தனிப்பட்ட "பிரிவுகள்" அல்ல—பிரிட்டிஷ் ஆட்சி ஒரு வரப்பிரஸாதம்!]

மூன்றாம் அத்தியாயம் ... 15

[எங்கும் காண முடியாத சிறுபான்மைக் கட்சி தான்!—பாகிஸ்தான்-கூப்பாடு ஒரு முட்டுக் கட்டை—இந்தியா ஓர் அகண்டமான தனிப் பொருள்—இந்தியாவின் உடனடியான பிரசினை—முஸல்மான்கள் அன்னியர்களா? வேதாளத்தை எதிர்த்துப் போரிடுங்கள்—பாகிஸ்தான் விஷயமாய் பிரிட்டிஷார் அனுசரிக்கும் கொள்கை]

நான்காம் அத்தியாயம் ... 26

[அடுத்தபடி என்ன செய்யவேண்டும்?—தனித் தொகுதியாகிய பீடை—ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியார் பங்கு—ஜின்னுவின் முட்டுக்கட்டை—தைரிய மூட்டும் விஷயம்]

ஐந்தாம் அத்தியாயம் ... 38

[காங்கிரஸின் லட்சியம் என்ன?—மொழி, பண்பாடு சம்பந்தமான சுதந்திரம் மறுக்கமுடியாது—ஜின்னுவின் தலைநோய்]

ஆரும் அத்தியாயம் ... 44

[ஜின்னுவினுடைய நோயின் கூறுபாடு—திகைக்க வைக்கும் தந்திரங்கள்—ஈடும் எடுப்பும் அற்ற சந்தர்ப்பவாதி]

ஏழாம் அத்தியாயம் ... 49

[சர்வதேச அரங்கில் சுதந்திர அகண்ட இந்தியா—நோயிலும் கொடியமருந்து]

எட்டாம் அத்தியாயம் ... 54

[ஏகாதிபத்தியத்திற்கு வெற்றி—இரண்டு தீமைகளில்—பூதத்திற்குப் பலி—இருப்பதா, இறப்பதா?—பாகிஸ்தான் நியாயமா, அநியாயமா?—ஜனநாயகத்திலோ தேசீயத்திலோ நம்பிக்கையில்லை—அரசியல் சூதாட்டம்—எப்போதுமே ஒரு நாடாக இருந்ததில்லையா?]

ஒன்பதாம் அத்தியாயம் ... 61

[விச்வ-இஸ்லாம்]

# சுதந்திரமா, பாகிஸ்தானா?

## முதல் அத்தியாயம்

இன்று இந்திய மக்கள் முன்புள்ள பிரசினை "விடுதலையா, பாகிஸ்தானா?" என்பதாகும். இவையிரண்டில் ஒன்றுதான் முடிவாக இருக்க முடியும்; இரண்டுமே இருக்க முடியாது. அது பாகிஸ்தானாகத்தான் இருக்க வேண்டுமென்றால், விடுதலை, சுதந்திரம் என்னும் பேச்சையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, என்றென்றும் நம்மை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் விசுவ இஸ்லாமியமாகிய காரிருளில் எல்லையற்ற குழப்பத்துக்கும் இரத்த வெள்ளத்துக்கும், அதன் பலனாகச் "சட்டத்தையும் ஒழுங்கையும்" நிலை நிறுத்துவது என்பதைச் சாக்கிட்டுக் கொண்டு அன்னிய நாடுகள் தலையிடுவதற்கும், நிரந்தரமான அடிமைத்தனத்துக்கும், உங்களைச் சித்தப் படுத்திக் கொள்ளுங்கள்.

### ஒரு பயங்கர எதிர்ப்பு

தலைமுறை தலைமுறையாக வந்த இந்தியர்களின் பண்பாட்டில் என்னென்ன மகத்தானவையாகவும், சிறந்தவையாகவும் இருக்கின்றனவோ, அவைகட்கெல்லாம் ஒரு பயங்கர எதிர்ப்பு என்னும் முறையில் பாகிஸ்தான் கோரிக்கையிலுள்ள உண்மையான அபாயத்தை நாம் உடனே தெரிந்து கொள்வது நல்லது.

நாம் நிமிர்ந்து நின்று உறுதியுடன் மேற்படி எதிர்ப்பை நோக்கிப் போராடத் தவறிவிடுவோமாகில், இந்தியாவின் மிக நெருக்கடியான சோதனைக் காலத்தில் தங்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்ட மக்களாக வருங்காலச் சரித்திரத்தில் நாம் பொறிக்கப்படுவோம். எதிர்காலச் சரித்திர ஆசிரியன் நமது வீழ்ச்சிக்குக் காரணம் சொல்லுமிடத்து, ரோம் நகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது பிடில் வாசித்துக்கொண்டிருந்த நீரோ மன்னனோடு நம்மை ஒப்பிட வேண்டியிருக்கும்!

பாகிஸ்தான் அபாயம் வெறும் பிரமையல்ல, மிக உண்மையானது. இந்த உட்பகையைக் களைந்தெறிவதற்கு ஹிந்துக்களும், இதர சமூகங்களிலே தேசப்பற்றும் முன்னேற்ற நோக்கமும் கொண்ட பெரியார்களும், தங்களுக்குள்ள தேசப்பற்று, ஒற்றுமையுணர்ச்சி, தீர்மானமான உறுதி ஆகிய இவை அவ்வளவையும்

கொண்டு செயலாற்ற வேண்டும். அது ஓர் உட்பகையாய் இருப்பதனாலேயே, பயங்கரமானதும், அச்சுறுத்துவதுமான வடிவத்தைக் கொண்டிருக்கிறது. எப்படியென்றால்,இந்நாட்டு மக்கள் விடுதலைபெறத் தகுதியற்றவர்கள் என்றும், சிறுபான்மையான முஸ்லீம்கள் பெரும்பான்மையான ஹிந்துக்களால் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள் என்றும், அதனால் அவர்கள் விஷயத்தில் அனுதாபமும் ஆதரவும் காட்டக் கூடாதென்றும் வெளி உலகத்துக்குத் தோன்றும். ஓர் அன்னிய நாட்டின் படையெடுப்பை விட அது அதிக அபாயகரமானதாகும். ஏனென்றால், கோடிக்கணக்கான மக்கள் ஒருமனசாக ஒற்றுமைப்பட்டு, தங்களுடைய ஒற்றுமைப் பலத்தோடும் உருவாக்கப்பட்ட மன உறுதியோடும் அப்படையெடுப்பை எதிர்த்துப் போராடினால், எந்தப் படையெடுப்புத்தான் என்ன செய்ய முடியும்?

## மதக் கொள்கையாம்

பாகிஸ்தான் என்பது தமக்கும் தமது லீகுக்கும் உரிய ஒரு மதக் கொள்கையென்று ஜனாப் ஜின்னா அடிக்கடி பகிரங்கமாய்ச் சொல்லியிருக்கிறார். அகண்ட இந்தியாவே தமது மதக் கொள்கையென்று காந்தி மகாத்மா வெளிப்படையாய்ச் சொல்லியிருந்தபோதிலும்,அவரும் ஜின்னாவின் கோரிக்கைகளுக்குஒருவாறு இணங்கத் தயாராயிருந்தார். முஸ்லிம்களுக்கு அது வேண்டுவதாயிருந்தால் அவர்கள் அதை அடையட்டும் என்று காந்திஜி சொல்லியிருக்கிறார்.*

## ஹிமாலயத் தவறு

இதுதான் ஹிமாலயத் தவறாக முடிந்தது. இது பெரிய ஆபத்துக்கு ஏதுவாயிருந்ததென்றும் சொல்லலாம். முஸ்லிம்கள் பாகிஸ்தான் கேட்கிறார்கள் என்னும் காரணத்தினாலேயே அது அவர்களுக்கு எடுத்துக் கொடுத்து விடப்படுமா? நாட்டைத் துண்டு போடவேண்டுமென்று சொல்ல இது அவர்களைப் பகிரங்கமாய் வருந்தி அழைப்பது போல் இருக்கிறதல்லவா! அகண்ட இந்தியா இந்துக்களின் மதக் கொள்கையாயிருக்குமானால், நாட்டைத் துண்டுபோட வேண்டுமென்று முஸ்லிம்கள் கேட்டபோதிலும் ஹிந்துக்கள் அதை எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்? இந்தத் தாராளமான வாக்கைக் கொடுத்ததோடல்லாமல், முஸ்லிம் சமூகத்துக்குரிய சுயநிர்ணய பாத்ய

* காந்திஜி சொன்னதாவது: "இந்தியாவின் மற்றப் பகுதியில் உள்ளவர்களுக்கு இருக்கும் சுய நிர்ணய பாத்யதை முஸ்லிம்களுக்கும் உண்டு. நாம் இப்பொழுது ஒரு அவிபக்த குடும்பத்தினர்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எவரும் தமக்குப் பாகம் பிரித்துக் கொடுக்கும்படி கேட்கலாம்."

தையை ஒப்புக்கொள்ளும்படி காந்திஜி காங்கிரசுக்கு 'ஆலோசனை' சொல்லியிருக்கிறார்; அன்றியும், இந்தியாவை ஹிந்து இந்தியா, முஸ்லிம் இந்தியா என்று பிரிப்பதற்கு இடங் கொடுக்கும் "ஸி. ஆர். சூத்திர"த்துக்கு காந்திஜி தமது "ஆத்மார்த்த உடன்பாட்டை" அளித்திருக்கிறார். என்ன குழப்பம்! எவ்வளவு முரண்பாடு!

## கண்கூடான ஆபத்து

ஜின்னாவின் கோரிக்கைகள் நாளுக்கு நாள் வளரவே அவருடைய இறுமாப்பும் பிடிவாதமும் கட்டுக் கடங்காமல் பெருகுகின்றன.

ஹிந்துக்களுடைய உடன்பட்டாலொழிய, பாகிஸ்தான் பெறமுடியாதென்று இன்று அவருக்குத் தெரியும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அவருக்குப் பாகிஸ்தான் கொடுக்கலாம். ஆனால் அதனால் நேரிடவிருக்கும் ஆபத்துக்கு அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். தமக்கென்று ஒரு தனிப்பட்ட ராஜ்யத்தை வெட்டியெடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் அவருடைய கோரிக்கையை ஆதரிப்பதற்கு வேறு எந்த அன்னிய நாட்டுக்கும்—ஒரு முஸ்லிம் நாட்டுக்குக்கூட- அக்கரை இல்லை. காங்கிரஸ் ஹிந்துக்களின் ஸ்தாபனம் என்று சொல்ல அவர் ஆவலாய் இருப்பதற்குக் காரணம் இதுதான். பாகிஸ்தான் கோரிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து காங்கிரஸில் ஒரு பிரிவார் காட்டிக் கொண்ட பயந்த மனப்பான்மையையும் தோல்வி-மனப்பான்மையையும் ஜின்னா கூர்ந்து கவனித்தார். தாம் மட்டும் உறுதியாகவும் பிடிவாதமாகவும் நிற்பாரானால், காங்கிரஸ் முடிவாகப் பாகிஸ்தானை ஒப்புக்கொள்ளுமென்று அவர் நினைக்கிறார். தமது பிளவுக் கொள்கையைக் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளும்படிச் செய்வதில் அவர் வெற்றிபெற்று விடுவாரானால், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பாகிஸ்தானுக்கு உடன்படுகிறார்களென்றும், இது விஷயத்தில் தலையிட வேறு யாருக்கும் உரிமையில்லையென்றும் அவர் உலகத்துக்குச் சொல்லலாமல்லவா?

## காந்திஜியின் நாசக் கொள்கை

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில்லாமல் சுயராஜ்யம் அடைய முடியாதென்று காந்திஜி வற்புறுத்துவது நாசகரமானதென்று பற்பல சம்பவங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. முன்னதாக ஏற்படவேண்டுமென்று கருதப்படும் இந்த நிபந்தனையை எல்லாக் காலங்களிலும் மீண்டும் மீண்டும் சொல்வதனால், ஹிந்துக்கள் நம்பிக்கை இழந்துவருவதோடல்லாமல், "இஸ்லாமுக்கு

ஆபத்து—பாகிஸ்தானே பரிகாரம்" என்னும் ஜின்னாவின் போர்ப் பிரசாரத்தை முழக்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் சமூக வாதிகளின் பிடிவாதமும், இறுமாப்பும் அதே அளவுக்கு வளர்ந்து வருகின்றன. "ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில்லாமல் சுயராஜ்யம் இருக்க முடியாது" என்னும் கோஷத்தின் நேரடியான விளைவு என்னவென்றால், நாட்டின் எதிர்காலத்தைக் கெடுப்பதற் குரிய முடிவான அதிகாரத்தை முஸ்லிம் லீக் தலைவருக்குக் கொடுத்துவிட்டதேயாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு தராசு நமது மனக்கண் முன் தோன்றுகிறது. அதன் ஒரு தட்டில் ஜின்னா இருக்கிறார். முஸ்லிம் லீகைச் சமாதானப்படுத்துவது தான் காங்கிரசின் முக்கியமான திட்டமாயிருக்க வேண்டும் என்னும் கொள்கையைப் புகுத்துவதற்கான முயற்சி மற்றொரு தட்டில் இருக்கிறது.

பயன் விளையாத காந்தி-ஜின்னா பேச்சுக்களினாலும், இந்தியா விலும் பிரிட்டனிலும் அது உண்டாக்கிய பரபரப்பினாலும் ஜின்னா வுக்கு ஒரு விஷயம் நிச்சயமாகப் புரிந்து விட்டது. அதாவது, தம்முடைய கூட்டுறவின்றி அரசியல் முன்னேற்றம் எதுவும் சாத்தியமாகாது. இப்போதோ பின்னரோ, தாம் சொல்லும் திட்டங்களின்படி முடிவு செய்து கொள்ள, காங்கிரஸ் அவரிடம் சென்று மண்டியிட வேண்டியிருக்கும்.

காங்கிரஸின் ஆகஸ்ட் தீர்மானம் இன்னும் அமுலிலிருந்து வருகிறது என்றும், "இந்தியாவைவிட்டு வெளியேறு" என்னும் நிலைமை எவ்விதமாகவும் மாற்றப்படப்போவதில்லை என்றும், காந்திஜி வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். ஆனால், ஜின்னாவோடும், முஸ்லிம் லீகோடும் ஓர் ஏற்பாட்டிற்கு வரக் காந்திஜி செய்த முயற்சிகளினால் மேற்படித் தீர்மானம் தானாகவே ரத்தாய்விட்டிருக் கிறது. பிரிட்டிஷார் சர்வ சக்தியுள்ள மூன்றாவது கட்சியாக இருக்கிற வரையில்—இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றுவதற் குரிய நிபந்தனையாக ஒற்றுமையை வற்புறுத்திக்கொண்டே, "பிரித் தாளும்" ஏகாதிபத்யக் கொள்கையை நிலைநிறுத்தும் பொருட்டுப் பற்பல சமூகங்களைத் தூண்டிவிட ஆவலுடையவர்களாயிருக்கிற வரையில்-ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் எவ்வித உடன்பாடும் சாத்தியமில்லை என்பதே மேற்படித் தீர்மானத்தின் அடிப்படைக் கருத்தாகும். ஆகவே, இந்தியக் கட்சிகள் தங்களுக் குள் ஒரு முடிவுக்கு வருவது சாத்தியமாகும் பொருட்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை விட்டுப் போய்விட வேண்டுமென்று அந்தத் தீர்மானம் கட்டளையிட்டது.

இதற்குமுன் முஸ்லிம்களோடு ஒரு முடிவுக்கு வரச் செய்த முயற்சிகளெல்லாம் பயனற்றவையாய்ப் போய் விட்டபடியால், அடுத்தபடியாகச் செய்யவேண்டிய ஒரே ஒரு காரியம் என்ன வென்ருல், பிளவு-மனப்பான்மையை ஆதரிப்பதில் தீவிரமாய் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் ஆட்சி போய்விடும்படிக் கேட்பதேயாகும். இதை மேற்படித் தீர்மானம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது. பிரிட்டிஷார் இங்கே இருக்கிறவரையில், சமூகங்களின் ஒற்றுமைக் காகச் செய்யப்படும் ஒவ்வொரு பிரயத்தனமும், எரியும் கொள்ளி யில் எண்ணெய் வார்ப்பது போல், பெரும்பான்மை-சமூகங்களுக் கிடையில் பகைமையைத்தான் வளர்க்கும் என்பதைக்கூட மேற்படித் தீர்மானம் தெளிவாக்கிற்று.

எனவே, அடிப்படைத் திட்டமாகிய "பிரிட்டிஷார் மூட்டை கட்டுவது" நிறைவேறுவதற்குமுன் காங்கிரஸ், முஸ்லிம் லீகினிடம் மண்டியிட்டு ஒரு முடிவுக்கு வரும்படிக் கெஞ்சுவதானது, மேற்படித் தீர்மானத்தில் கண்டிருக்கும் கொள்கையி லிருந்தும் பின்வாங்கிச் செல்வதேயன்றி வேறல்ல. ஆகையால், அது அத்தீர்மானத்தையே ரத்து செய்வதாக முடிகிறது.

அது மட்டுமா? முஸ்லிம் லீகுக்கும், பிரிட்டிஷ் கவர்ன் மெண்டுக்கும் அதிக திருப்தி ஏற்படும்படியாக, மேற்படி 'எழுச் சியே' தோற்றுப்போய்விட்டதென்று ஒப்புக்கொண்டதாகவும் ஏற்படுகிறது. அவ்விருதிறத்தாரும் அந்த இயக்கத்தைப்பற்றி ஒரே விதமான கருத்து உடையவர்களாய் இருந்தார்கள். இப்படி அவமானப்பட்டுப் பின்வாங்கிச் சென்றதன் முடிவான பலன்கள் இரண்டு. முதலாவது, ஜயம் பெற்றவனுடைய வெற்றி-மனப் பான்மை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு ஏற்பட்டதாகும். இன்னென்று, ஜனப் ஜின்னுவுக்கும், முஸ்லிம் லீகுக்கும் இல்லாத ஒரு முக்கியத்துவம் தங்களுக்கு இருக்கிறதென்னும் உணர்ச்சி ஏற்பட்டதாகும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட், முஸ்லிம் லீக்ஆகிய இந்த அபூர்வத் தோழர்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்துக்குரிய மற்ருெரு பொதுக் காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிருர்கள்.

## ஏன் இந்த அவசரம்?

காங்கரஸ்-லீக் ஒற்றுமையைப்பற்றி எதற்காக இந்த வெட்கங்கெட்ட அவசரமோ தெரியவில்லை? எப்படிப் பார்த் தாலும், உலகத்திலுள்ள எந்த நாடும், அதன் ஜனங்களுக்குள் முழுக்க முழுக்க ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்னும் கஷ்ட சாத்தியமான நிபந்தனையை முழுதும் நிறைவேற்றிய பிறகுதான் சுதந்திரம் அடைந்திருக்கிற தென்று சொல்லமுடியாது.

ஜனநாயகத்தை முன்னிட்டுப் பார்த்தாலுங் கூட அப்படிபட்ட ஒற்றுமை விரும்பத்தக்கதல்ல. ஏனென்ருல், கருத்து-வேற்றுமையே ஜனநாயக ஆட்சியின் அடிப்படைக் கொள்கையாகும். அதிகாரத்தைப் பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியர்களுக்கு மாற்றுவதற்குமுன் நிறைவேற வேண்டிய திட்டமாகக் காங்கிரஸ்-லீக் ஒற்றுமை என்னும் விஷயத்தைப்பற்றிப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பல்லவி பாடிக்கொண்டிருக்கிருர்கள். இது எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வற்புறுத்தப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த ஒற்றுமை கைகூடுவதற்குச் சந்தர்ப்பங்கள் குறைந்து விடும் என்பதை யறிந்தே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அப்படிப் பல்லவி பாடிக் கொண்டிருக்கிருர்கள்.

இந்த ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக் கோரிக்கையானது காங்கிரஸ்-லீக் ஒற்றுமைக்கான (எந்த முறையிலோ, தெய்வத்துக்குத்தான் வெளிச்சம்!) கோஷமாக இப்போது உருப்பெற்றிருக்கிறது. இதன் உடனடியான விளைவு என்ன வென்ருல், காங்கிரஸும் முஸ்லிம் லீகும் முறையே ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்வ ஸ்தாபனங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை யில்லாமல் (அதாவது, காங்கிரஸ்-லீக் ஒற்றுமை யில்லாமல்) சுயராஜ்யம் சாத்திய மில்லை* யென்பதை ஒப்புக்கொண்ட பிறகு, காங்கிரஸ் ஹிந்துக்களின் ஸ்தாபனம் என்று சொல்வதற்காகவும், இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் சார்பாகப் பேசக்கூடியவர் தாம் ஒருவரே யென்று சொல்லிக்கொள்வதற்காகவும், ஜின்னுவிடம் தோஷம் கண்டு பிடிப்பது நியாயமாகாது.

அமெரிக்காவுக்கு ரிபப்ளிகன்-டெமொக்ராடிக் ஒற்றுமையும், கிரேட் பிரட்டனுக்கு லேபர்-கன்ஸர்வெடிவ் ஒற்றுமையும், கானடா அல்லது அயர்லாந்துக்கு கத்தோலிக்-புரோடெஸ்டண்ட் ஒற்றுமையும் எப்படி அவசியம் இல்லையோ, அது போலவே இந்தியாவுக்குக் காங்கிரஸ்-லீக் ஒற்றுமையும் அவசியமில்லை. அது ஒவ்வொரு நாட்டிலும் எப்போதாகிலும் ஒரு காலத்தில் எழுவதைப்போன்ற ஒரு உள் நாட்டுப்பிரசினையே யன்றி வேறல்ல.

*1940-ம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கை யொன்றில் காந்திஜி தமது இந்தக் கொள்கையை மீண்டும் வற்புறுத்தியிருக்கிருர் "ஆகவே, நான் சம்பந்தப்பட்ட வரையில், சமூக ஒற்றுமையில்லாமல் சுயராஜ்யம் சாத்தியமில்லை என்னும் எனது கொள்கையை நான் முதலில் 1919-ல் வெளியிட்டபோது நிலைமை எப்படியிருந்ததோ, அதே நிலைமைதான் இன்றும் இருந்து வருகிறது."

ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை கைகூடுகிறவரையில் நாம் சுதந்திரத்துக்காகக் காத்துக்கொண்டிருப்பதானால், யுகாந்த காலம்வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். பேராற்றல் படைத்த மூன்றும் கட்சியொன்று இதை ஒரு நிபந்தனையாக நம் மீது விதிப்பதனாலேயே மேற்சொன்ன விஷயம் மிக மிக உண்மையாகி விடுகிறது. சுதந்திரம் கைகூடிய பிறகே ஒற்றுமை நிலவும்.

1921-ல் டிவாலரா லாயிட் ஜார்ஜுக்கு எழுதிய ஒரு கடிதத்திலிருந்து ஒரு பாகம் கீழே எடுத்தெழுதப்பட்டிருக்கிறது. சுதந்திரத்துக்கு நிபந்தனை ஒற்றுமை என்னும் விஷயத்துடன் அது நேரடியான சம்பந்த முடையதாயிருத்தலால் அது இங்கே பொருத்தமுடையதாகும்.

> "அயர்லாந்து தன் குறிக்கோளை எய்துவதற்குக் கடைப்பிடிக்கவேண்டிய நெறியை அதுவே தெரிந்தெடுத்துக்கொள்ள அதற்குள்ள உரிமையை மறுக்காமல் ஒப்புக்கொண்டாக வேண்டும்...............ஐரிஷ் மக்களுள் அரசியல் - சிறுபான்மையோருக்கும், மகத்தான பெரும்பான்மையோருக்கும் இடையே விவாதத்திலுள்ள பிரசினை சம்பந்தபட்ட வரையில், அது ஐரிஷ் மக்களே தங்களுக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு பிரசினையாகும். எங்கள் நாட்டின் சொந்த நன்மையை முன்னிட்டோ எங்கள் ஜனங்களில் ஒரு பிரிவார் கேட்டுக்கொள்வதின் மேலோ, எங்கள் நாட்டைச்சிதைக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குள்ள உரிமையை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. நாங்கள் பலவந்தத்தைப் பிரயோகிக்க உத்தேசிக்கவில்லை. உங்கள் கவர்ன்மெண்ட் ஒதுங்கி நின்று விட்டால், நாங்கள் முழு ஒற்றுமையைச் சாதித்து விடுவோம். பலவந்தத்தினால் எந்தப் பொதுக் காரியத்தையும் செய்துவிட முடியாதென்று நாங்கள் உங்களோடு ஒப்புகிறோம்...........ஆக்கிரமிப்பிலிருந்து எங்களை விடுவிக்க வேண்டு மென்பதைத் தவிர வேறு எந்த நிபந்தனைகளையும் நாங்கள் விதிக்கவுமில்லை, வேறு எந்தச் சுதந்திரங்களையும் நாங்கள் கொண்டாடவுமில்லை."

பிரிட்டனுடைய பாசாங்குகளின் போலித்தனத்தைப்பற்றி யாராகிலும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அவர் அயர்லாந்தில் பிரிட்டன் செய்த காரியங்களைப் பார்த்தலே போதுமானது. மேற்கண்ட கடிதத்தின் பகுதியானது அக்காரியங்களை அறிவதற்கு ஒரு சூசகமாய் இருக்கிறது.

## சிக்கலிலிருந்து வெளியேற

பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் கண்டும் காணாதது போலத் தீவிரமாய் ஆதரிக்கும் பாகிஸ்தான் கோரிக்கையினால் உண்டான அபாயகரமான நிலைமையிலிருந்து வெளியேற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது, தேச பக்தியுள்ள சகல இந்தியர்களுக்கும் அகண்ட பரிபூரண இந்தியாவே ஒரு மதக் கொள்கையாயிருப்பதனால், இந்தியாவைக் கூறு போட உத்தேசிக்கும் எந்த இயக்கத்தையும் தான் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்று காங்கிரஸ் ஐயந்திரிபுக்கு இடமின்றி வெளிப்படையாய்ச் சொல்லிவிடுவதாகும். முஸ்லிம்களுக்கோ, வேறு எந்தச் சமூகத்தாருக்கோ சுயநிர்ணய உரிமையே இல்லையென்றும், அதை நோக்கமாகக் கொண்டுள்ள எந்த இயக்கமும் தேசத் துரோகமானதெனவும், நாட்டு நலனுக்கு உகந்ததல்லவெனவும், காங்கிரஸால் எதிர்க்கப்படுமென்றுங்கூடக் காங்கிரஸ் வெளிப்படையாய்ச் சொல்லிவிட வேண்டும்.

## இரண்டாம் அத்தியாயம்

### சுய நிர்ணயக் குழப்பம்

சுய நிர்ணய உரிமை முஸ்லிம்களுக்கு ஏற்கெனவே கொடுத்துவிடப்பட்டிருக்கிறதென்று காங்கிரஸ் தலைவர் சொல்லியிருப்பது துர்ப்பாக்கியமானது. ஏனென்றால் முஸ்லிம் லீக் சம்பந்தப்பட்டவரையில் பாகிஸ்தான் என்பதும், சுய நிர்ணயம் என்பதும் ஒரே பொருளைக் குறிப்பன. விசுவ-இஸ்லாமியப் பேராசை கொண்ட ஒரு சமூகத்தாருக்கு இந்தச் சுய நிர்ணய பாத்தியதை வழங்குவதானது இந்தக் கோட்பாட்டையே மிகக் கேவலமாகத் துர்விநியோகப் படுத்துவதாகும்.

ஒரு நெறியில்லாமல் எல்லோருக்குமே சுய நிர்ணய பாத்தியதை கொடுத்துவிடமுடியாது. அப்படிக் கொடுப்பதாய் இருந்தால் ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவார்கள். ஒரு சமூகத்தார் அந்த உரிமையைக் கொண்டாடினால் வேறொரு சமூகத்தார் அதைக் கேட்கக் கூடாதென்பதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. பாகிஸ்தான் வழங்கப்பட்டால் தங்களுக்கு சீகிஸ்தான் அல்லது காலிஸ்தான் வேண்டுமென்று சீக்கியர்கள் கேட்பார்கள். அப்படிக் கேட்க அவர்களுக்கு முழு உரிமை உண்டு. இதன் விளைவு இந்தியாவைத் துண்டு துண்டாக வெட்டுவதே ஆகும். பாகிஸ்தான் கோரிக்கையை நன்கு பரிசிலனை செய்தால் அல்லது நுட்பமாக அலசி ஆராய்ந்தால், அது நிற்காதென்று ஜின்னாவுக்குத் தெரியும். அதனால்தான் அவர் வேண்டுமென்றே அதை நன்கு வரையறுக்காமல் குழப்பமாகவே விட்டிருக்கிறார். அந்தக் கோரிக்கைக்கு ஆதாரமாய் இருக்கும் ஒரே ஒரு விஷயம் என்னவென்றால், தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் வருங்காலத்திலெல்லாம் இந்திய சுதந்திரத்தின் முன்னேற்றத்தைக் கெடுக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரோடு அதிகமாக ஒத்துழைப்போமென்று அவர் எப்போதும் பயமுறுத்திக்கொண்டிருப்பதேயாகும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையோராய் உள்ள மாகாணங்களிலிருக்கும் மக்களின் சர்வஜன வாக்கெடுத்து, சுய நிர்ணய பாத்தியதையை நிர்ணயிக்கலாமென்று சொல்லப் படுகிறது. இது இந்தியா முழுவதையும் ஒரு பேராபத்துக்கு உள்ளாக்கக் கூடிய ஒரு தீர்ப்பை வருந்தி அழைப்பதாகுமே யன்றி வேறல்ல. மனித இயற்கை சற்று விபரீதமானதுதான். மாறுதல் என்றால் அதற்குப் பிடித்திருக்கிறது. அந்த மாறுதல் கெடுதியை

விளைவிக்கக் கூடியதாய் இருந்தாலும் மனிதர்கள் அதைக் கவனிப்பதில்லை. முஸ்லிம்கள் பெரும்பான்மையோராய் உள்ள மாகாணங்களில் பாகிஸ்தான் வேண்டுமா என்று அவர்களைக் கேட்டால், இந்த ஏற்பாட்டின் புதுமையை உத்தேசித்தேனும் அவர்கள் 'வேண்டும்' என்று சொல்வார்களென்பது நிச்சயம். சுயநிர்ணயக் கோரிக்கையானது இப்போது உருவாகி யிருக்கும் பாகிஸ்தான் கோரிக்கையே ஆனபடியால், அதைப்பற்றி விவாதிக்கக்கூடாது. அது தேசத் துரோகமாகும். நாட்டை உயிரோடு வெட்டுவது ஒரு தேச பக்தர் பேசக்கூடிய பேச்சல்ல.

சற்று விரிவாகவே இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்வது அவசியமாகும். முதலாவது உலக யுத்தத்துக்குப் பிறகு, அந்த யுத்தத்தினால் சின்னபின்னமாக்கப்பட்ட எல்லைகளை மீண்டும் நிர்ணயிக்கும் பிரசினையைப் பற்றியும், அந்த யுத்தத்தினால் கலைந்து போன மக்களை மறுபடியும் நிலைநிறுத்தும் பிரசினையைப்பற்றியும் தீர்மானிக்கவேண்டியிருந்தபோது, இனமும் பிறந்த நாடும் கலைப் பண்பாடும் மற்றப் பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் கண்டறிய முடியாத லட்சக்கணக்கான ஜனங்களின் தலையெழுத்தைத் தங்கள் இஷ்டம் போல் நிச்சயிப்பதாகிய திகைக்கவைக்கும் நிலைமைக்கு வெற்றிநாடுகள் உள்ளாயின. வெளியேற வழிகாண முடியாத இந்த மோசமான குழப்பத்திலிருந்து தப்பிக்கொள்வதற்காக 'சுயநிர்ணயம்,'* என்னும் இந்தப் பரிசுத்தமான சொற்றொடரை ஜனாதிபதி வுட்ரோ வில்ஸன் கண்டு பிடித்தார். அத்தகைய கண் மூடித்தனமாயுள்ள அவசரமான கோட்பாட்டை, தாங்கள் பிறந்து வளர்ந்து ஜீவித்திருக்கும் நாட்டின் பண்பாட்டில் ஊறிப்போய் இருக்கும் ஒரு சமூகத்தின் மக்களிடம் பிரயோகித்து, அதற்குக் காரணமாக அவர்களுடைய முன்னோர்கள் அன்னியர்களென்றும், அன்னிய மதத்தைச் சேர்ந்தவர்களென்றும் வாதிப்பது விபரீதமானதாகும்.

---

* ஜனாதிபதி வில்ஸன் அடியிற்கண்ட நான்கு நிபந்தனைகளினால் இக் கோட்பாட்டின் பிரயோகத்தை வரையறுத்தார்:

(1) ஒரு நாட்டு மக்கள் சொல்வதைச் சிறிதும் கேட்காமல் தட்டுமுட்டுச் சாமான்கள் அல்லது சதுரங்கக் காய்களைப் போல் அவர்களிடமிருந்து ஜனசுதந்திரத்தைப் பிடுங்கி அடிமைத்தனத்திற்கு அவர்களை விற்று விடக்கூடாது;

(2) அந்த நாட்டின் மக்கள் அனைவருடைய நன்மையையும் கவனிக்க வேண்டும்;

(3) புதிய மனஸ்தாபங்கள் தோன்றக்கூடாது, பழைய மனஸ்தாபங்களை வளர்த்துக்கொண்டு போகக்கூடாது;

(4) இந்தச் சுயநிர்ணயக் கோட்பாட்டைக் கையாள்வதினால் அந்த நாட்டின் ஒற்றுமையும், பாதுகாப்பும், பொருளாதார மேம்பாடும் கெட்டுப் போவதாய் இருந்தால் இக்கோட்பாட்டைக் கையாளக்கூடாது.

இனத்தையும் சுயநிர்ணயத்தையும் பற்றிய இக்கோட்பாட்டைக் கையாள்வதாய் இருந்தால், இங்கிலாந்திலே கத்தோலிக்கர், ப்ராடெஸ்டண்டுகள், யூதர்கள், ஸ்காட்லண்டுக்காரர்கள், வேல்ஸ்நாட்டினர் ஆகிய இவர்களுக்கெல்லாம் தனித்தனி நாடுகள் இருக்க வேண்டும்; அமெரிக்காவில் நீக்ரோக்கள், டச்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், இத்தாலியர்கள் முதலியவர்களுக்குத் தனித்தனி நாடுகள் இருக்கவேண்டும். அதாவது இப்போது இருக்கிறபடி இங்கிலாந்தோ, அமெரிக்க ஐக்கியநாடுகளோ அப்போது இருக்க முடியாது. சோவியத் யூனியன் என்பது பல இனத்தார்களும் ஜாதியார்களும் கலந்த ஒரு கதம்பமாகும். தற்கால அரசியல் நூலார் விரும்பி மேற்கொள்வது பல இனங்கள் அடங்கிய ஒரு நாடு என்பதேயல்லாமல், ஒரு இனத்துக்கு ஒரு நாடு என்பதல்ல. பின்சொன்ன நிலைமை இடைக்காலக் கொள்கையாகும். இது தற்போதைய நிலைமையில் தகுதியற்றதும் கஷ்டசாத்தியமானதுமாகும். முஸ்லிம்கள் ஒரு தனி இனத்தார் என்று சொல்லப்படுகிறது; இது உண்மையல்ல. ஏனென்றால் இந்திய முஸ்லிம்களில் நூற்றுக்கு எண்பத்தேழு பேர் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிட்ட ஹிந்துக்களின் சந்ததியாராவார்கள். ஒரு வேளை வாதத்திற்காக முஸ்லிம்கள் ஒரு தனி இனம் என்று வைத்துக்கொண்டாலும், மேற்படிக் கோட்பாட்டை அவர்கள் விஷயத்தில் கையாள்வது, மேலே காட்டியபடி, தகுதியற்றதும் கஷ்டசாத்தியமானதுமாகும். ஒருவர் தமது மதத்தை மாற்றிக்கொண்டதனாலேயே அவர் தமது முன்னோர்களின் வம்ச பரம்பரையைச் சேர்ந்தவராய் இருப்பது அற்றுப் போய்விடமாட்டாது.

## தனிப்பட்ட "பிரிவுகள்" அல்ல

ஆகவே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சுயநிர்ணயத்தைக் கேட்பதற்குரிய தனிப்பட்ட "பிரிவினர்" அல்லர். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவது பெரும்பான்மையோரைச் செயலற்றுப் போகும்படி செய்ய சிறுபான்மையோருக்குப் பகிரங்கமாய் அனுமதி கொடுப்பதேயாகும்; இதனால் பெரும்பான்மையோர் சிறுபான்மையோராக மாறிவிடுவார்கள்!

முஸ்லிம்கள் தங்களுடைய சுயநிர்ணய பாத்தியதையைச் செலுத்தும் முறையில் இந்தியாவின் மேல் படையெடுக்க ஓர் அன்னிய அரசினரைக் கூப்பிடுகிறார்களென்று வைத்துக்கொள்வோம். நாம் அதை அனுமதிப்பதா? அன்றியும் இந்தியாவின் பகைவர்களோடு-அல்லது இனிமேல் பகைவர்களாகக் கூடியவர்களோடு முஸ்லிம்கள் நட்புரிமை, உடன்படிக்கைகளையும் பரஸ்பர

உதவி ஒப்பந்தங்களையும் செய்து கொள்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். அதை நாம் சாந்தமாகப் பார்த்துக்கொண்டிருப்பதா? முடியவே முடியாது. நான் வெறும் சொற்களைக் கொண்டு அம்மானை ஆடவில்லை. முஸ்லிம் சமூகத்தாருக்குப் பாகிஸ்தான் அல்லது சுயநிர்ணய பாத்தியதை கொடுக்கப்படும் பக்ஷத்தில் மேற்சொன்ன சம்பவங்கள் நேரிடக் கூடுமென்று நம்புவதற்கு நிச்சயமான ஆதாரம் இருக்கிறது. எந்த முஸ்லிம் நாடாவது இந்தியாவின் மேல் படையெடுத்துவந்தால் அவர்களை எதிர்த்துப் போராட முஸ்லிம்கள் இந்துக்களுக்கு உதவியாகப் போகமாட்டார்களென்றும், இதற்குக் காரணம் அவர்கள் தங்களுடைய சமயத்தைச் சேர்ந்தவர்களென்றும், இரண்டாவது யுத்தத்தின் ஆரம்பத்தில் வைஸ்ராய் லின்லித்கோ பிரபுவிடம் ஜின்னா சொன்னார் என்னும் வதந்தியை நான் இங்கே குறிப்பிடக்கூடும். (இந்த வதந்தி இதுவரையில் மறுக்கப்படவில்லை.) விசுவ இஸ்லாமியம் என்னும் நாகஸர்ப்பம் படம் எடுப்பதை நீங்கள் இங்கே காணலாம்! ஜின்னாவின் 'எண்ணங்கள்' எவை என்பதைப் பற்றி இன்னுமா உங்களுக்கு ருசு வேண்டும்? நல்ல வேளையாக, ஹிந்துக்கள் பாகிஸ்தானுக்கு உடன்படப்போவதில்லை; அதனால் மகத்தான தியாகங்கள் செய்ய வேண்டியிருந்தாலும் செய்வோம்.

## பிரிட்டிஷ் ஆட்சி ஒரு வரப்பிரஸாதம்!

பாகிஸ்தான் கோரிக்கைக்கு உடன்படாவிட்டால், ஹிந்துஸ்தானம், பாகிஸ்தானம் ஆகிய இவ்விரண்டுக்கும் நஷ்டமுண்டாகும்படி பிரிட்டிஷ் ஆட்சி தொடர்ந்து இருந்து வரும் என்று ஜின்னா நமக்கு எச்சரிக்கை செய்கிறார். அவருக்கு நமது பதில் இதுதான்: "பிரிட்டிஷ் ஆட்சி இருந்தால் இருந்து விட்டுப் போகிறது; பாகிஸ்தானில் நமக்கு நேர இருப்பதோடு ஒப்பிட்டுப்பார்க்குபோது பிரிட்டிஷ் ஆட்சி ஒரு வரப்பிரஸாதமாகும்." எப்படியென்றால் பிரிட்டிஷாரின் கீழ் நாம் என்றைக் காயினும் ஒரு நாள் சுதந்திரமடையத்தான் போகிறோம். ஆனால் பாகிஸ்தானிலோ சுதந்திரம் ஒரு பகற்கனவாகத்தான் இருந்துவரும். காலப்போக்கிலே உலக அபிப்பிராயம், இந்திய சுதந்திர இயக்கதில் கவனம் செலுத்தியே தீரும். இதனால் இந்தியாவைத் தனியே விட்டுப் போய் விடும்படி பிரிட்டிஷாரை வற்புறுத்தும் நிலைமை ஏற்பட்டுத்தான் தீரும். பிரிட்டிஷ் மந்திரி-கோஷ்டி விஜயமும் ஒரு முடிவு செய்துகொள்ள அவர்களுக்கு இருக்கும் விருப்பமும் இதை ருசுப்படுத்துகின்றன.

ஆனல் அப்படிப்பட்ட சௌஜன்யமான ஒரு முடிவு இந்திய தேசியத்திற்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் போராட்டம் நடக்கிறவரையில்தான் சாத்தியமாகும். இந்தப் போராட்டம்




சூழ்ச்சியும் சமாதானமும்

நடக்கும்போது, பாகிஸ்தான் போன்ற கூப்பாடுகளே, அரசாள்வதற்காக ஜனங்களிடம் பிளவு உண்டாக்கி அதிகாரத்தை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்க ஆவலாய் இருக்கும் மூன்ருவது கட்சியினல் இடையூறு ஏற்படாமல், சுதந்திர

இந்தியாவினுல் சுயேச்சையாகத் தீர்க்கப்பட வேண்டிய குடும்பப் பிரசினைகள் என்று பின் அணிக்கு ஒதுக்கித் தள்ளிவிட வேண் டும். இந்தியாவானது பிரிட்டனுடைய ஒரு குடும்பப் பிரசினை யாகுமென்று வெட்கமில்லாமல் உலகத்துக்குச் சொன்ன பிரிட் டிஷார், சுதந்திர இந்தியா தனது இச்சைப்படி விவகரித்துத் தீர்த்துக்கொள்ளவேண்டிய ஒரு குடும்பப் பிரசினையே பாகிஸ் தானமாகும் என்று உலக அபிப்பிராயத்தினுல் உணரும்படி செய்யப்படுவார்கள். இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சி முடிவு பெற்றதிலிருந்து 24 மணி நேரத்திற்குள் பாகிஸ்தான் கோரிக்கை கடலுக்கடியில் அமிழ்த்திவிடப்படும் என்பதையும் இங்கே குறிப்பிடுவது அவசியமாகும்.

## மூன்றும் அத்தியாயம்

### எங்கும் காண முடியாத சிறுபான்மைக் கட்சிதான்!

முஸ்லிம் சிறுபான்மையோர் இனிச் சிறுபான்மையோராக இருக்க விரும்பவில்லை யாதலால், சிறுபான்மைப் பிரசினையைத் தீர்ப்பதற்காகவே பாகிஸ்தான் கோரிக்கை வற்புறுத்தப் படுகிறது என்று ஜின்னு சொல்லுகிருர். இது விசித்திரமேயாகும். பெரும்பான்மையான ஹிந்துக்களைச் சக்தியற்றவர்களாக்குவதும், மகம்மது நபியோ இயேசு கிறிஸ்துவோ பிறப்பதற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்பே ஈடும் எடுப்பும் இல்லாத பண்பாடும் நாகரிகமும் வாய்க்கப்பெற்றிருந்த இந்தப் புராதன நாட்டின் தெய்விகத்தையும் கௌரவத்தையும் மானத்தையும் குலைப்பதற்கான வேறுபல காரியங்களை ஜின்னுவின் தலைமையின் கீழ் முஸ்லிம் சிறு பான்மையோர் செய்ய விரும்பக்கூடும். இந்தப் புராதன நாட்டில் வசிப்பவர்களும் அதைத் தெய்விகத்தாய் என்று கருதுபவர்களும், அதனுடைய கோயிலில் அத்தியந்த பயபக்தியோடு வணங்குகிறவர்களுமான மக்கள், அதனுடைய கௌரவமும் மானமும் குலைக்கப்படுவதைப்பார்த்துக்கொண்டிருப்பார்களா என்பதே இப்போதைய கேள்வி. அப்படிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று தான் ஜின்னுவும், அவரைப் பின்பற்றுகிறவர்களும் நினைக்கிருர்கள் போலும். நாம் நிமிர்ந்து நின்று "எட்டி நில்லுங்கள், மேலும் அடி எடுத்து வைக்க வேண்டாம், எச்சரிக்கை" என்று சொல்ல வேண்டிய காலம் வந்து விட்டது. தங்களுடைய நாட்டின் கௌரவமும் சுதந்திரமும் காப்பாற்றப் படும்படியாகப் பார்த்துக் கொள்ளும் மகத்தான பொறுப்பு வாய்ந்துள்ள சிலர், பல்லாண்டுகள் அன்னிய ஆட்சியின் கீழ் இருந்ததன் பயனுக ஏற்பட்ட இழிவு-உணர்ச்சி காரணமாக ஒருவிதத் தோல்வி-மனப்பான்மை காட்டுவது துர்ப்பாக்கியமேயாகும். தங்களுடைய தாய் நாட்டைப் பாதுகாப்பதற்கு ஒரு மனதாக ஒன்றுபட்டு அபாயகரமான உட்பகையினின்றும் அதைக் காப்பதற்கு முப்பது கோடி ஹிந்துக்களுக்குள்ள ஆத்ம பலத்தைத் தெரிந்துகொள்ள அந்தச் சிலருக்கு முடியாவிட்டால், அவர்கள் நாட்டின் எதிர்காலத்தைப் பணயம் வைத்துச் சூதாடுவதற்குப் பதிலாக, மேலே கண்டபடி நாட்டைப் பாதுகாக்கக்கூடிய மற்றவர்களிடம் அவ்வேலையை விட்டு விடுவதே, ஆண்மையும் தேச பக்தியுமாகும்.

பாகிஸ்தான் என்பது என்ன? எல்லோருக்கும் புரியும்படி அதற்கு அர்த்தம் சொல்ல யாருமே அக்கறை கொள்ளவில்லை. அது "பரிசுத்தர்களின் நாடு" என்று சொல்லப்படுகிறது. (மற்ற நாடுகள் பாவிகளின் நாடுகள் போலும்!) ஒரு வேளை, உத்தேசிக்கப் பட்ட திட்டத்தில் அடங்கிய பாகங்கள் என்று சொல்லப்படும் பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீரம் என்பவற்றின் முதல் எழுத்துக் கள் பாகிஸ்தான் என்பதில் அடங்கியிருக்கின்றனவோ? பாகிஸ்தான் ஏற்பாடு, "பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குக் கேடானது, ஹிந்து சமூகத்துக்குக் கேடானது, முஸ்லிம் சமூகத் துக்குக் கேடானது" என்று தாம் நினைப்பதாகக் காலஞ் சென்ற ஸர். முகம்மது இக்பால் கூறியபோதிலும், இந்தப் பாகிஸ்தான்-கருத்திற்கு அவர் தான் காரணகர்த்தா என்று சொல்லப்படு கிறது. "ஆனால், நான் முஸ்லிம் லீகுக்குத் தலைவன். ஆகவே, நான் அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சர் முகம்மத் சொன்னார். *

## பாகிஸ்தான்-கூப்பாடு ஒரு முட்டுக்கட்டை

காங்கிரஸிடமிருந்தும் ஹிந்துக்களிடமிருந்தும் எவ்வளவு அரசியற் சலுகைகளைப் பறிக்கலாமோ, அவ்வளவையும் பறிப்பதற்கு ஒரு கோஷமாகவும், முட்டுக்கட்டையாகவும், பாகிஸ்தான்-கூப்பாடு எழுப்பப்பட்டது. காங்கிரஸ் ஆரம்பத்தி லிருந்தே உறுதியாக நின்றிருந்தால், காந்திஜி பல தடவைகளில் செய்திருப்பது போல, ஜின்னா தமது கோரிக்கை ஓர் இமாலயத் தவறு என்று எல்லாருக்கும் எதிரில் ஒப்புக்கொண்டு, தமக் குரிய அரசியல்-அஞ்ஞாத வாசத்துக்குப் போய்விட்டிருப்பார். ஆனால், கற்பனையிலடங்காத தமது கோரிக்கைகள் பூர்த்தி செய் யப்படாவிட்டால், இதற்கு முன் எப்போதும் கண்டிராத ஒரு நிலைமையை உண்டாக்கிவிடுவேன் என்று பயமுறுத்திக்கொண்டு ஜின்னா கக்கிய நெருப்புக்கும் இடியோசைக்கும் முன்பு காந்திஜி வசப்பட்ட காங்கிரஸ் சபல சித்தத்தையும் பணிவு-மனப்பான்மை யையும் காட்டிற்று. திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார் முதல் பலியானார். அவர் எல்லோருக்கும் முன்னதாகக் காங்கிரஸைக் கைவிட்டுப் பாகிஸ்தான் கிளர்ச்சியைப் பகிரங்கமாக நடத்தி வந்தார். காங்கிரஸின் சபல சித்தத்தையும், அதன் தூண்கள் என்று கருதப்படும் சிலர் அதைவிட்டு ஒவ்வொருவராகப் போ வதையும் கண்டவுடன் ஜின்னா பயமுறுத்தல்களையும் பீதி யுண்டாக்குவதையும் வசை மொழிகளையும் பிரயோகித்து,

* "சுதந்திரத்திற்கு இந்தியாவின் துணையைத் தேடுங்கள்"—எட்வர்ட் தாம்ஸன். பக்கம்—58.

திகைக்க வைக்கும் தந்திரங்களினால் வெற்றியடையும் முயற்சியைப் பகிரங்கமாக மேற்கொண்டார். உண்மையிலேயே, நாகரீகமற்ற அவதூறான அரசியல் பரிபாஷைக்கு அவருடைய பெயர் ஓர் எடுத்துக்காட்டாக ஆகிவிட்டிருக்கிறது. அப்படியிருந்தும், காந்திஜியின் வசப்பட்ட காங்கிரஸ், திரு. ஸி. ராஜகோபாலாச்சாரி யார் அளித்த ஆதரவுடன் ஜின்னாவையும் முஸ்லிம் லீகையும் சமாதானப்படுத்தும் வழியையே கடைப்பிடித்து வருவதால் இவ்விரு திறத்தாரும் சண்டையை விலைக்கு வாங்குகிறவர் களாகவும் பிடிவாதக்காரர்களாகவும் ஆகிவிட்டார்கள். தமது துருப்புச் சீட்டு எதுவென்று ஜின்னாவுக்குத் தெரியும். தமது பிளவுக் கொள்கைக்குப் பிரிட்டிஷாரின் ஆதரவு, தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தாம் இந்தியாவின் சுதந்திரத்தைக் கெடுப்பதற்குப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடன் வரவர அதிக மாக ஒத்துழைப்பதாக எந்நேரமும் அச்சுறுத்திக்கொண்டிருப்பது ஆகிய இவை இரண்டுமே அவருடைய துருப்புச் சீட்டாகும்.

பாகிஸ்தானை அடையப்போகிறோமென்று ஜின்னா பெரிதும் நம்பிக்கை கொண்டிருக்கிறாரென்பது, அவருடைய சமீப காலப் பேச்சுக்களிலிருந்து தெரியவருகிறது. மத்திய அஸெம்ப்ளியிலே, எதிர்கால இந்திய சேனைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் சொன்னதாவது :

> "பாகிஸ்தானத்திலே எனது சேனை தனது கௌரவத்தை யும் ராஜ பக்தியையும் காப்பாற்றிக்கொள்ளும். அதில் யாராகிலும் ஒருவர் அப்படிச் செய்யாவிட்டால், அவர் ஒரு படைவீரராயிருந்தாலும் சரி, உத்தியோகஸ் தராயிருந்தாலும் சரி, வில்லியம் ஜாய்ஸ் சென்ற கதிக்குச் செல்வார்."

ஒரு சமயம் கல்கத்தாவில் பேசும்போது அவர் சொன்னதாவது:

> "முஸ்லிம்கள் சம்பூர்ண ஒழுங்கைக் கடைப்பிடிப்பார் களானால், பாகிஸ்தான் அடைவதற்கு நமக்கிருக்கும் உரிமையை உலகத்தில் யாராலுமே மறுக்க முடியாது... பாகிஸ்தான் இல்லாவிட்டால் முஸ்லிம்களுக்குச் சாவுதான்."

சம்பூர்ண ஒழுங்கைக் கடைப்பிடிக்கும்படி தமது பரிவாரத் தினரை அவர் கேட்டுக்கொள்ளும்போது, தமது எதிரிகளின் ஒழுங்கீனத்தை அவர் பெரிதும் நம்புகிறார். ஜின்னாவின் இந்த உபதேசத்தைக் காங்கிரஸ் பின்பற்றுவதாயிருந்தால், அவருடைய சொற்களைக்கொண்டே அவருக்குப் பதிலளிக்கக் காங்கிரஸ் தவறி விடக்கூடாது. அதாவது :

"பாகிஸ்தான் வந்தால் இந்திய தேசீயத்திற்குச் சாவு தான். காங்கிரஸும், ஹிந்துக்களும் சம்பூரண ஒழுங்கைக் கடைப்பிடிப்பார்களானல், நம்மீது பாகிஸ்தானைத் திணிக்க உலகத்தில் யாராலுமே முடியாது."

## இந்தியா ஓர் அகண்டமான தனிப்பொருள்

இந்தியா ஓர் அகண்டமான நாடு என்பது ஏற்கனவே தீர்மானமான விஷயமாகும். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலும், சிந்து நதியிலிருந்து கடல் வரையிலும், பூகோள நூல் ரீதியாகவோ, மற்றப்படியோ, இந்தியா ஓர் அகண்ட நாடு என்று ஒவ்வொரு பிரிட்டிஷ் வைசிராயும் சொல்லி நாம் தெரிந்து கொள்ளவேண்டியதில்லை. ஒரு சமூகத்தின் தலைவர் அச்சமூகத்தை ஒரு நாடு என்றும், ஆகையால் அது சுய நிர்ணய பாத்யதை உள்ள தென்றும், தம் மனம் போனவாறு செர்ல்லிக் கொள்வதனாலேயே, இந்தியாவைத் துண்டுபோட முடியாது. ஒரு சமூகம் தன்னை எப்படி அழைத்துக்கொண்டபோதிலும், அதற்காகச் சுய நிர்ணய பாத்யதை கொண்டாடுவது கேலிக்கிடமான விஷயமாகும். இந்தியா முழுவதும் இந்திய மக்கள் சேர்ந்துதான் சுய நிர்ணய பாத்யதையைச் செலுத்தவேண்டும். அதிலும், முழு இந்தியாவின் எதிர்கால அந்தஸ்தையும், பாதுகாப்பையும் பாதிக்கும் பிரசினைகளில்தான் அந்தப் பாத்யதையைச் செலுத்த வேண்டும்.

ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒற்றுமைப்பட்ட இந்திய சர்க்காரைப் பற்றிய எந்த திட்டத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையோரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிரார் என்று சொல்வது வாதத்துக்கு நிற்காது. எனென்றால், அரசியலமைப்பின் அங்கங்களாயுள்ள சிறு பான்மையோரின் மதம், பண்பாடு முதலியவை பற்றிய உரிமைகளின் பாதுகாப்புக் காக மேற்படி அரசியலமைப்பிலே போதுமானவையும், சித்திகர மானவையும் அதிகார பூர்வமானவையுமான பாது காப்புக்களைத் திட்டமாய்க் குறிப்பிட்டு ஏற்படுத்த வேண்டுமென்னும் விலக்கு நிபந்தனைக்கு ஹிந்து மகா சபை உட்பட எல்லாக் கட்சிகளும் உடன்பட்டிருக்கிறார்கள்.

## இந்தியாவின் உடனடியான பிரசினை

பிரிட்டிஷார் ஜின்னவைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ள மாட்டார்களென்று கருதுவது, பிரிட்டிஷ் ராஜதந்திரத் தின் ஆற்றலைத் தப்பாக மதிப்பிடுவதாகும். லீகின் பிளவுக் கொள்கை இந்தியாவின் சுதந்திரப் பிரசினையை நிச்சயமாக வேறு

வழியில் திருப்பிவிடும் என்பதை அறிந்திருப்பதனுல், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் அக்கொள்கையை நன்கு பயன் படுத்திக் கொண்டு வந்திருக்கிருர்கள். இனியும் பயன்படுத்திக் கொண்டு வருவார்கள். இப்போதுள்ள நிலைமையில் ஏற்பட்டுள்ள முக்கியமான விஷயம் என்னவென்ருல், பிரஸ்தாப விவாதம் சமூக அரசியலைப் பற்றியதாயிருக்கிற வரையில் இந்தியாவிலே பிரிட்டிஷ் ஏகாதிபத்யக் கோட்டைக்கு நேரடியான பயமுறுத்தல் அல்லது ஒன்றுபட்ட எதிர்ப்புக் கிடையாது. இந்தியாவின் உடனடியான பிரசினை, சுதந்திரத்தை அடைவதென்னும் அப்பட்டமான அரசியற் பிரசினையேயாகும். பிறர் காட்ட உத்தேசிப்பது போல், அது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பிரசினையுமல்ல, காங்கிரஸ் - லீக் ஒற்றுமைப் பிரசினையுமல்ல. இவ் விஷயத்தை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

## முஸல்மான்கள் அன்னியர்களா ?

முஸ்லிம்களுடைய நன்மையும், இந்தியாவினுடைய நன்மையும் எப்போதும் முரண்படக்கூடிய வகையில் பகைவர்களாக, முஸ்லிம் சகோதரர்களே, ஹிந்துக்கள் எப்போதுமே கருதவில்லை. ஹிந்துக்களைப் போலவே அவர்களும் இந்திய மண்ணில் பிறந்தவர்கள் தான். ஆனல், சரித்திரம் கூறும் உண்மைகளை முஸ்லிம்கள் மறந்து விட்டு, இந்தியா ஓர் அன்னிய நாடு என்றும், இந்தியாவின் பூர்வீகக் குடிகளாகிய ஹிந்துக்கள் அன்னியர்களென்றும், அவர்களுக்கும், தங்களுக்கு மிடையே எவ்விதத் தொடர்பும் இல்லையென்றும், அவர்களுக்கு நன்மை உண்டாக்குவது முஸ்லிம்களுக்குக் கேடு உண்டாக்குவதாகத்தான் இருக்கவேண்டு மென்றும், வேண்டுமென்றே சொல்வார்களானல், அவர்களுக்கு இவ்வளவு காலம் வரையில் சோறும் கூரையும் தந்து அன்புடன் ஆதரித்த நாட்டின் கௌரவத்தையும் தெய்வீகத்தையும் அழித்து நாசமாக்குவதற்குப் பதிலாக, மூட்டை முடிச்சைக் கட்டிக்கொண்டு தாங்கள் பிறந்த புண்ணிய பூமிக்குத் தாராளமாய்ப் போய்விடலாமே!

## வேதாளத்தை எதிர்த்துப் போரிடுங்கள்

ஜின்னவை அலட்சியம் செய்துவிட வேண்டுமென்றும் லீகை ஒதுக்கிச் சென்றுவிடவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. ஆரம்பத்தில் இப்படித்தான் செய்திருக்கவேண்டும். ஜின்னவை ஒரு வேதாளத்தின் வடிவத்துக்கு எழுப்பி முருங்கை மரத்தின் மேல் ஏற்றிவிட்ட பிறகு, இப்போது அவரை அலட்சியம் செய்வதோ ஒதுக்கிச் செல்வதோ சுலபமல்ல வென்பதை ஒப்புக்

கொண்டாகவேண்டும். இந்திய சுதந்திரத்துக்கு ஒரு மகத்தான பகைவராக நினைத்து அவரை எதிர்த்துப் போராடுவது தான் இப்போது செய்யத் தக்கது. நாட்டு முன்னேற்றத்தைக் கெடுக்கும் அதிகாரம் அவரிடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர் அதைத் தமது சொந்த நன்மைக்குப் பயன் படுத்திக்கொண்டு வருகிறார். அந்த அதிகாரத்தை அவர் விட்டுவிட இஷ்டப்பட மாட்டார். தேசபக்தர்களெல்லாம் ஒன்றுபட்ட உறுதிப்பாட்டுடன் அந்த அதிகாரத்தை அவருடைய கைகளிலிருந்து பிடுங்கியாக வேண்டும். இது நிறைவேற வேண்டுமானல், அவருடைய பிளவுக் கொள்கையை உறுதியுடனும் எதற்கும் விட்டுக் கொடுக்காமலும் எதிர்க்கவேண்டும்.

இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தினல் ஏற்பட்ட கேடு என்னவென்றல், சமஷ்டிப் போர்வைக்குள் புகுந்து கொண்டு பிளவுண்டாக்க நினைக்கும் பிரிவினருக்கு அதிகார பூர்வமான அங்கிகாரம் அளித்ததே யாகும். மேற்படி சட்டப் பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட சமஷ்டியானது, ஏதேனுமோர் பிரதேசத்திலுள்ள எந்தத் தொகுதியினராகிலும் தங்கள் விருப்பம் போல் மேற்படி சமஷ்டிக்குள் வரவோ அதைவிட்டுப்போய்விடவோ உள்ள உரிமையுடன் அவர்களுக்கிருக்கும் சுய நிர்ணய பாத்தியதையை ஒப்புக்கொண்டதேயாகும். பிளவுக்கொள்கைக்கு இது தான் வித்து. இதுதான் பாகிஸ்தான் கோரிக்கையாக வெளிப்பட்டது. இதைப் பின்பற்றி இதே மாதிரியான வேறு பல கோரிக்கைகளும் உண்டாகி இந்தியாவைத் துண்டு துண்டாகவே கிழித்துவிட உத்தேசிக்கின்றன. இது எவ்வகைக் கொள்கையுடைய தேச பக்தியுள்ள இந்தியருக்கும் அருவருப்பானதும், சகிக்க முடியாததுமான கருத்தாகும்.

ஒரு பொய்யை இடைவிடாமல் வற்புறுத்திக் கொண்டேயிருந்தால், அது உண்மையின் ரூபத்தைப் பெற்றுவிடுவதோடல்லாமல், மக்களும் வரவர அதில் நம்பிக்கை வைக்கிறார்கள் என்னும் வழக்குஒன்றுண்டு. இதுபொருள் பொதிந்ததாகும். ஏதோ சொல்லிப் பார்க்கலாம் என்ற நிச்சயமில்லாத மனத்துடன் தான் ஜின்ன முதலில் தமது பாகிஸ்தான் கோரிக்கையை வெளியிட்டார். ஆனல், பொறுப்புள்ள மனிதர்கள் அதைப்பற்றிப் பிரமாதமாக ஆலோசிப்பதையும், வெகு அக்கரையாக கவனிப்பதையும் பார்த்த உடனே, தமது கோரிக்கை நியாயமானதும் சரியானதுமாகும் என்று அவர் உணர ஆரம்பித்தார்.

திரு ஸி. ராஜகோபாலாச்சாரியார் பாகிஸ்தானைப் பகிரங்கமாய் ஆதரித்ததும், அதற்காகக் கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்ததும் தமது கோரிக்கை சரியானதென்ற ஜின்னுவின் உணர்ச்சியைப் பலப்படுத்தின. உண்மையாகவே பாகிஸ்தான் கொடுக்கப்பட்டு விட்டால், அதை முக்கியமாகக் கேட்கிறவர்கள்கூட அதை விரும்பமாட்டார்கள் என்று ராஜகோபாலாச்சாரியார் சொல்வது விபரீதமான தர்க்கமாகும். இரும்புப்பெட்டியின் சாவி திருடனிடம் போய்விட்டால் அவன் ஆபரணங்களை எடுத்துக் கொள்ளமாட்டான் என்று சொல்பவனை எவ்வளவு வெள்ளைப் புத்தியுடையவன் என்று நாம் கருதுவோமோ, அப்படியேதான் ஆசாரியாருடைய மேற்படி வாதத்தையும் நாம் கருதவேண்டும். பாகிஸ்தான் பேயின் தாடியைப் பிடித்து ஆட்டுவதாக அவர் சொன்னுர். ஆனுல் வாஸ்தவத்திலே அந்தப் பேய்க்கு உயிரும், உருவமும் கொடுக்க அவர் தம்மால் ஆனதையெல்லாம் செய்தார். ஒரு முறை இந்தியா பிளக்கப்பட்டு விட்டால், அது மறுபடியும் எப்போதுமே ஒன்று சேராது. இதை மெய்ப்பிப்பதற்கு அயர்லாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின், பர்மா, இலங்கை முதலியவைகள் உதாரணங்களாய் இருக்கின்றன.

பேயோடு கூடி வாழ்வதனுல் தமது பாகிஸ்தானுக்கு ஆதரவு கிடைக்கக்கூடுமானுல், அப்படி வாழ்வதற்குக்கூட ஜின்னு தயாராயிருக்கிறுர். முஸ்லிம் லீகுக்கு அடுத்தாற்போல், கம்யூனிஸ்டுகள் பாகிஸ்தானை அதி தீவிரமாக ஆதரிக்கிறுர்கள். சிறிது காலமாகத், தமது பாகிஸ்தானுக்கு மன்னர்களின் ஆதரவை வேண்டிப் பெறும் முயற்சியில், மன்னர்களுக்காக வகாலத்து வாங்கிக் கொண்டு பேசவும் ஜின்னு ஆரம்பித்திருக்கிறுர். இந்திய சமஸ்தானங்களைப்பற்றி அவர் சொன்னதாவது: “இந்தியா ஒன்று அல்ல, எப்போதுமே ஒன்ருயிருந்ததில்லை, இனி எப்போதும் ஒன்ருயிருக்கப்போவதில்லை என்பது அநேகருக்குத் தெரியவில்லை போலும்.” தமது பாகிஸ்தான் கோரிக்கைக்குப் பக்கபலம் தேடிக் கொள்ளும் பொருட்டுச் சமஸ்தானங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவர் சொன்னதாவது:

> “அரசியலமைப்பின்படி பார்த்தாலும் சட்டரீதியாகப் பார்த்தாலும் ஏற்கெனவே எத்தனையோ பாகிஸ்தான்கள் இருக்கின்றன. ஒருவர் அதிகாரத்திற்கும் உட்படாத சமஸ்தானங்களாகவே இந்திய சமஸ்தானங்கள் இருக்கின்றன. பிரிட்டிஷாருடன் அவர்களுக்குள்ள சம்பந்தங்கள், மாட்சிமை தங்கிய மன்னர்பிரானுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளினுலும், ஒப்பந்தங்களினுலும் முறைப்படுத்தப்படுகின்றன. இந்த உடன்

படிக்கைகளில் கண்ட ஷரத்துக்களின் பிரகாரம், அவர்கள் மன்னர் பிரானின் முதன்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர, அவர்கள் சுதந்திரமுள்ளவர்கள்; அந்த சமஸ்தானங்களின் உள்நாட்டுப் பரிபாலன விஷயமாய் பிரிட்டிஷ் பார்லிமெண்டால் சட்ட மியற்றவும் முடியாது, தலையிடவும் முடியாது. ஒவ்வொரு சமஸ்தானத்திலும் அதன் மன்னரே முடிவான மேல் அதிகாரியாவார்."

இந்தப் புகழுரையால் மன்னர்கள் பூரித்துப் போவார்களோ மாட்டார்களோ, தெரியாது. ஆனால் சமஸ்தானங்களின் நிலைமையைப் பற்றியும் மன்னர்கள் விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் சதா தலையிட்டுக் கொண்டிருப்பதையும் அவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிப்பதைப் பற்றியும் ஜின்னா இவ்வளவு அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கிறார் என்பது மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயமே யாகும். இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுக்குப் பிடிக்காத மன்னர்களை அரசர் பதவிகளிருந்து நீக்கிவிட்டு மற்றவர்களை அப்பதவிகளில் அமர்த்துவது பலதடவை நடந்திருக்கிறது என்னும் விஷயம், ஜின்னாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இன்னும் எத்தனையோ விஷயங்களில், அரசைத் துறக்கும்படி மன்னர்கள் கட்டாயப்படுத்தப்பட்ட பிறகு, சமஸ்தானங்களைப் பரிபாலிப்பதற்காக வெள்ளையர்கள் திணிக்கப்பட்டிருக்கிறார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து நிஜாம் மன்னர்கள் இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்த அரசியல் இலாக்காவின் வெறும் கைப் பொம்மைகளே யாவார்கள். எந்த மன்னராகிலும் மேற்படி அரசியல் இலாக்காவின் விருப்பத்துக்கு விரோதமாகத் தமது 'அதிமேன்மையான' உரிமைகளைச் செலுத்த இஷ்டப்பட்டால், ரீவா மஹாராஜாவுக்கு நேர்ந்த கதிதான் அவருக்கும் நேரிடும். அவருக்கு அப்படி என்ன நேர்ந்து விட்டது என்பீர்களோ? அவர் தமது பிரஜைகளுக்கு ஓரளவு பொறுப்பாட்சியைக் கொடுத்ததன் மூலம், தமது முன்னேற்றக் கருத்துக்களை வலியுறுத்தினார். அவ்வளவுதான்! அரசப்பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். மன்னர்களுக்கென்று அன்னிய அரசியற்கொள்கைகள் எதுவும் கிடையாது. உள்நாட்டு அமைதியைப் பாதுகாப்பதற்காக, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் அனுமதிக்கப் பெற்ற சேனைகளைத் தவிர வேறு எந்த சேனைகளும் அவர்களுக்கு இல்லை. இந்தியா கவர்ன்மெண்டாரின் வெளிப்படையான அனுமதியின்றி அவர்கள் தங்களுடைய சொந்த மந்திரிகள் அல்லது திவான்களைக் கூட நியமிக்க முடியாது. மன்னர்களின் நடத்தையை ஒழுங்கு படுத்துவதற்காக, சமஸ்தானங்களில் ரெஸிடெண்டாவது, அரசியல் ஏஜண்டாவது வைக்கப்படுகிறார்கள். அவர்

களுடைய சொற்கள்தான் மன்னர்களுக்குச் சட்டமாகும். மற்றவர்களைப் போலவே மன்னர்களும், பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைக்கு உள்ளானவர்கள்தான். அவர்கள் ராஜபோகத்தில் நிலைத்திருப்பதாக வெளித்தோற்றத்துக்குக் காணப்பட்ட



காங்கிரஸ்-லீக் கூட்டுறவுக்கு அரசாங்கத்தின் உதவி!

போதிலும், தங்களுடைய திக்கற்ற நிலைமை அவர்களில் பலருக்குத் தெரிந்து தான் இருக்கிறது. இந்தியா சுதந்திரமடைய வேண்டுமென்று அவர்கள் மனப்பூர்வமாய் விரும்பத்தான் செய்கிறார்கள். ஆனால், இதே சமயத்தில், சுதந்திர இந்தியாவில் தங்களுடைய

எதிர்காலத்தைப் பற்றி அவர்களுடைய மனத்தில் அச்சங்களும் தோன்றாமலில்லை.

இதை முன் மாதிரியாகக்கொண்டு, ஜின்னு பாகிஸ்தான் கேட்பது முற்றிலும் நியாயமானதாயிருக்கும். இதை அவருக்கு வழங்குவதில் யாருக்குமே, சவர்க்காருக்கும் கூட, தடையிராது. அப்போது பாகிஸ்தான் சார்பில் கேட்கப்படும் சிரேஷ்டத்துவமானது இந்திய சமஸ்தானங்களின் சிரேஷ்டத்துவத்தைப் போல போலியேயாகும். ஏனென்றால், சிரேஷ்டத்துவம் வேறொரு அதிகாரத்துக்கு உட்படாத காரணத்தினால், அது ஒரு மத்தியநிர்வாக ஸ்தாபனத்தினிடமே இருக்க முடியும்.

ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் மக்களின் இதரப் பிரிவினர்களையும் கொண்டதும், மக்களுக்குப் பொறுப்புள்ளதாயிருப்பதுமான ஒரு மத்திய கவர்ன்மெண்ட் கூடாதென்று முஸ்லிம் லீக் ஆட்சேபிப்பதை முக்கிய ஆதாரமாகக்கொண்டு, சமஸ்தானங்களின் மாதிரியிலமைந்த ஒரு பாகிஸ்தானை முஸ்லிம் லீக் கேட்பதாயிருந்தால், இந்தியா முழுமைக்குமான ஒரு மத்திய கவர்ன்மெண்டு கூடாதென்று தான் ஆட்சேபிப்பதை அது அடியோடு விட்டுவிட வேண்டும். அப்படி விட்டுவிட்டு, "பாகிஸ்தான் தீர்மானம்" என்று சொல்லப்படும் முஸ்லிம் லீகின் லாஹூர் தீர்மானத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

## பாகிஸ்தான் விஷயமாய் பிரிட்டிஷார் அனுசரிக்கும் கொள்கை

எந்தக் கட்சியையும் மேலோங்க விடாதிருக்கும் விளையாட்டை நடத்திக்கொண்டு போவதற்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரிப்பது, பிரிட்டிஷாரின் கொள்கையாயிருந்து வந்திருக்கிறது. எந்த ஒரு கட்சியும் சர்வ சக்தி உள்ளதாகவும் ஆதிக்கம் நிறைந்ததாகவும் ஆகிவிட முடியாமல் செய்யப்படுகிற வரையில், பிறச் சந்தர்ப்பங்கள் எவ்விதமாக ஒன்று சேர்ந்தாலும் இந்தியாவை விட்டுப் போக அவைகளால் பிரிட்டிஷாரை பலவந்தப் படுத்த முடியாது. பிரஸ்தாப நிலைமையின் அவசியங்களை அனுசரித்து, கட்சிகளுக்குள்ளே மித்திர பேதம் காட்டப்படுகிறது. இதன் கருத்து என்னவென்றால், அடிப்படையான சுதந்திரப் பிரசினையாகிய மார்க்கத்தில் செல்லும் முயற்சியைத் தடுத்துச் சமூக—அரசியல் பிளவுகளில் அதைச் செலுத்துவதேயாகும். இதனால் சுதந்திரம் எய்துவதற்குத் தடை ஏற்படுகிறது. இதற்கு இந்தியர்களே பொறுப்பாளிகளாக்கப் படுகிறார்கள். ஆகவே, "இந்தியாவை விட்டு வெளியேறு" என்னும் இயக்கத்துக்குக் காங்கிரஸ் அனுமதியளித்தபோது காங்கிரஸின் செல்வாக்கை நிர்மூலம் செய்வதற்காகப் பிரசாரக் காரியங்களுக்காகவும், லீக் தலைவர்களைப்பயன்

படுத்திக்கொள்ளும் காரியங்களுக்காகவும், பிரிட்டிஷார் முஸ்லிம் லீகுக்கு உதவி செய்ய விரைந்து ஓடினார்கள். முஸ்லிம்கள் பெரும் பான்மையோராயுள்ள மாகாணங்களின் கவர்னர்கள், தங்களைப் பதவியில் நிலைநிறுத்திக்கொள்வதற்காக, லீக்மந்திரிசபைகள் நிச்சயமாய்த் தோல்வியுறும் என்று தெரிந்தபோது, வரையறையில்லாத காலத்திற்குச் சட்டசபைகளைத் தள்ளிவைப்பது போன்ற ஆட்சேபகரமானவையும் சந்தேகத்துக்கிடமானவையுமான முறைகளால் அம்மந்திரிசபைகளை ஆதரித்தார்கள். மந்திரிகள் அதிகாரத்திலிருக்கும்படி செய்யும் பொருட்டு, சட்டசபைகளிலுள்ள எதிர்க்கட்சிக்காரர்களைச் சிறையில் வைப்பதும் சகஜமாயிருந்தது. "இந்தியாவை விட்டு வெளியேறு" என்னும் இயக்கம் நடந்துகொண்டிருந்தபோது, கிராமங்களில் கூட்டு அபராதம் விதிக்கப்பட்ட போதெல்லாம், அவ்வபராதங்களைச் செலுத்தவேண்டியதில்லையென்று முஸ்லிம்களுக்கு விசேஷச் சலுகை அளிக்கப்பட்டமை, நிர்வாகப்போக்கின் ஒரு தனிப்பட்ட அம்சமாயிருந்தது. "இந்தியாவை விட்டு வெளியேறு" என்னும் இயக்கம் பிரிட்டிஷாருக்கு எப்படி எதிரிடையோ, அப்படியே முஸ்லிம்களுக்கும் எதிரிடை என்ற ஜின்னாவினுடைய கேலிக்கிடமான கருத்தைப் பாராட்டுவதாக நடத்திக்காட்டும் ஒரு நடிப்பாக மேற்படி சம்பவத்தைக் கொள்ள வேண்டுமேயல்லாமல் வேறல்ல.

ஆயினும், பானுக்குக் காவலாகவும், பூனைக்குத் தோழனாகவும் ஜின்னா காட்டும் விளையாட்டினால் ஏமாந்து போக முடியாத அளவுக்கு பிரிட்டிஷார் மிகவும் புத்திசாலிகளாவார்கள். முஸ்லிம் லீக் தங்களையே எதிர்க்கக் கூடிய அளவுக்குப் பலம்பெற்றுவிடாமல் பார்த்துக்கொள்வதற்கு பிரிட்டிஷார் ஜாக்கிரதையாகவே யிருப்பார்கள். உண்மையிலேயே, பிரிட்டிஷார் நிஜமான நட்பை ஆதாரமாகக்கொண்டு காங்கிரஸுடன் மனப்பூர்வமான உடன்பாட்டுக்கு வந்துவிடும் பட்சத்தில் முஸ்லிம் லீக், தான் ஒரு பயங்கரமான நிலைமையிலிருப்பதாகத் தெரிந்துகொள்ளும். இது 1940-மார்ச்சில் லாகூரில் பாகிஸ்தான் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதிலிருந்து ஜின்னாவின் தலைமையின்கீழ் முஸ்லிம் லீக் மேற்கொண்ட தயை தாக்ஷிண்ய மில்லாத நடத்தையின் விளைவேயாகும். அப்படியின்றி, பிரிட்டிஷார் தாங்கள் சமாளிக்க வேண்டியிருக்கும் எதிர்ப்புக்கு ஈடுகொடுக்கமுடியாமல், 'பிரித்து விட்டு வெளியேறு' என்னும் ஜின்னாவின் வாய்ப்பாட்டை ஒப்புக்கொண்டும், பாகிஸ்தான் நாட்டுடன் நட்புரிமை-உடன்படிக்கை செய்துகொண்டும், பாகிஸ்தானின் உதவியைக்கொண்டு ஹிந்துஸ்தான் நாட்டின்மேல் பாய்வதற்கு ஒரு வாய்ப்பைத் தேடிக்கொண்டிருக்கும் ஆபத்தும் இருக்கத்தான் செய்கிறது.

# நான்காம் அத்தியாயம்.

"பெரும்பான்மையோருக்கு ஆதிக்கம்" என்பது ஜன நாயக விதியாகும். சிறுபான்மையோர் பலவீனமான கட்சியாயிருக் கிறபடியால், அவர்களின் உரிமைகளை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டியிருக்கிறது. சிறுபான்மையோருக்கு ஏதாகிலும் உரிமை இருந்தால், அது அனுதாபத்தால் பெரும்பான்மையோர் மனம் விரும்பிக் கொடுத்த உரிமையேயாகும். எந்தச் சிறுபான்மை யோருக்கும் பயமுறுத்தல் மூலமாக அதைப் பெரும்பான்மை யோரிடமிருந்து கட்டாயப்படுத்தி வாங்க பாத்யதை இல்லை. அப்படி வாங்கினார்களேயானால், அந்தச் சிறுபான்மையோர் சிறுபான்மையோராய் இருக்கமாட்டார்கள். அவர்கள் சண் டைக்கு நிற்பவர்களாக ஆய்விடுகிறார்கள். அந்த க்ஷணமே, சிறுபான்மையோர் என்னும் முறையில் தமக்குள்ள சகல சுதந் திரங்களையும் அவர்கள் இழந்துவிடுகிறார்கள். பெரும்பான்மை யோரின் அனுதாபத்துக்கும் ஆதரவுக்கும் ஆளாவதையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

அதிகப் பிரதிநிதித்துவம் தனித்தொகுதி போன்ற சில உரிமை களை முஸ்லிம்-சிறுபான்மையோர் அனுபவிக்கிறார்கள். ஜன நாயகக் கருத்தை முன்னிட்டுப் பார்க்கும்போது இவை இரண்டும் கேடு பயக்கும் கொள்கைகளாகும். ஆயினும் பெரும்பான்மை யோராயுள்ள ஹிந்துக்கள் இவ்வுரிமைகளைத் தங்கள் முஸ்லிம் சகோதரர்களுக்குக் கொடுக்கத் தயங்குவதில்லை. ஆனால் ஒரு நிபந்தனை உண்டு. அதாவது, ஒரு நல்ல ஜனநாயக சுதந்திர நாடாக விருத்தியடைவதை முஸ்லிம்கள் தடுக்கக்கூடாது. இப்படி அவர்கள் இடையூறாக நிற்பதற்காக முஸ்லிம் சமூகத்தின் சார்பாகக் கேட்கப்படும் விலை, இந்தியாவை உயிரோடு வெட்டு வதாகும். இது ஹிந்துக்கள் தங்கள் இனத்தையே தற்கொலை செய்துகொள்ளச் செய்வதேயன்றி வேறில்லை. உலகத்தில் மற்ற இடங்களிலெல்லாம், கருணையும் பெருந்தன்மையும் காட்டும் படி சிறுபான்மையோர் பெரும்பான்மையோரைக் கேட்டுக்கொள் கிறார்கள். ஆனால், அந்தோ! இங்கே மாத்திரம், அந்தப்பாடம் திருப்பிப் படிக்கப்படுகிறது. பெரும்பான்மையோர் வாழ உரிமை யில்லாதவர்கள்போல், சிறுபான்மையோர் பெரும்பான்மை யோரை விழுங்கிவிடுவதாக அச்சுறுத்துகிறார்கள். பெரும்பான் மையோரான ஹிந்துக்கள் எண்ணிக்கையில்தான் பெரும்பான் மையோர் என்று பாகிஸ்தானிகள் சொல்லுகிறார்கள். "இது தவிர வேறு எந்த விதமான பெரும்பான்மையோராவது இருப்ப துண்டா?" என்று கேட்கத்தான் தோன்றுகிறது.

இந்தியாவில் 27 கோடி ஹிந்துக்களும் 9 கோடி முஸ்லிம் களும் இருக்கிறார்கள். இதற்கு எப்படிப் பொருள் செய்து பார்த்தாலும், இந்தியாவிலே ஹிந்துக்கள் மிகப் பெரும்பான்மை யோராவர்; முஸ்லிம்கள் சிறுபான்மையோரே. எவ்வித ஜன-நாயகக் கொள்கையின்படிப் பார்த்தாலும், 9 கோடி மக்களின் கருத்தைவிட 27 கோடி மக்களின் கருத்தே செல்லவேண்டும். ஏனென்றால், 9 கோடி மக்களின் க்ஷேமத்தையும் பாதுகாப்பையும் விட 27 கோடிமக்களின் க்ஷேமமும் பாதுகாப்புமே நாட்டுக்குஅதிக முக்கியமானது. பெரும்பான்மையோருக்கில்லாத சில திட்டமான அனுகூலங்களைப் பெறுவதற்காக, சிறுபான்மையோர் தங்கள் இழிந்த நிலையைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டிருக் கிறார்கள். அப்படியின்றி, சிறுபான்மையோர் மட்டும் இஷ்டப் பட்டால், அவர்கள் பெரும்பான்மையோருடைய நன்மைகளுக்கும் க்ஷேமத்துக்கும் பாதுகாப்புக்கும் தங்களையும் உட்படுத்திக் கொண்டு, சிறுபான்மையோரா யிருப்பதை ஒழித்துவிட்டுப் படிப் படியாகப் பெரும்பான்மையாரோடு கலந்துபோய், நாட்டுமக்களின் பிரிக்கமுடியாத பாகமாய்விடலாம். காங்கிரஸின் மீது ஜின்னு சுமத்தும் மிகப்பெரிய குற்றச்சாட்டு, அது ஒரு ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயல்கிறது என்பதேயாகும். ஆனால், இந்தியாவிலே ஹிந்து ராஜ்யம் ஏற்படுவதை அவரால் தடுக்கமுடியுமா? டாக்டர் அம்பேத்கார் பதில்சொல்லட்டும்:

> "ஹிந்துஸ்தானத்தில் இருக்கும் முஸ்லிம் சிறு பான்மையோர் மீது மத்திய அரசியலில் ஹிந்து ராஜ்யம் ஏற்படுவதைப் பாகிஸ்தானால் தடுக்கமுடியுமா? முடியாதென்பது வெளிப்படை. அப்படியானால், பாகிஸ் தானின் பிரயோஜனந்தான் என்ன? முஸ்லிம்கள் பெரும்பான்மையோரா யிருப்பதும் ஹிந்து ராஜ்யம் எப்-போதுமே ஏற்படாததுமான மாகாணங்களில் ஹிந்து ராஜ்யம் ஏற்படுவதைத்தடுப்பதுதான்!! இதையே வேறு விதமாகச் சொல்வதாயிருந்தால், முஸ்லிம்கள் பெரும் பான்மையோராய் இருக்கும் இடங்களில் முஸ்லிம் களுக்குப் பாகிஸ்தான் அனாவசியமாகும். ஏனென்றால், ஹிந்து ராஜ்யம் ஏற்படப் போகிறதென்னும் அச்சம் அவர்களுக்கில்லை. முஸ்லிம்கள் சிறுபான்மையோராய் இருக்கும் இடங்களில் ஏற்படும் பாகிஸ்தான் ஒரு கால் காசுக்குக் கூட உதவாது. ஏனென்றால், பாகிஸ்தான் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும், அவர்கள் ஒரு ஹிந்து ராஜ்யத்தை எதிர்த்துப் போராடவேண்டி யிருக்கும். அரசியல் விவகாரங்கள், மேற்படி முஸ்லிம் லீக் அரசியல் விவகாரங்களை விட மோசமாய் இருக்க

முடியுமா? சிறுபான்மையோராயுள்ள முஸ்லிம்களுக்கு உதவி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் லீக் பெரும்பான்மையோராயுள்ள முஸ்லிம்களின் நன்மையை நாடுவதாக முடிந்துவிட்டது. முஸ்லிம் லீகின் பிரதம நோக்கத்துக்கு இது எவ்வளவு முரணானது! உன்னத நோக்கத்திலிருந்து கேலிக்கிடமான நிலைமைக்கு எத்தகைய வீழ்ச்சி! ஹிந்து 'ராஜ்யத்தினல் உண்டாகும் தீமைகளினின்றும் பாதுகாப்பளிக்கும் பரிகாரமாக நாட்டைப் பிரிப்பது சுத்த உபயோகமற்றதாகும்." *

இந்தச் சிறுபான்மைப் பிரசினையைப்பற்றி நாம் விவாதிக்கும் போது, இதன் சமீபகாலத் தோற்றம் கட்டாயம் நமது நினைவுக்கு வரத்தான் செய்கிறது. ஸுடேடன்லாந்து ஒன்றில் ஜெர்மன் சிறுபான்மையோர் சம்பந்தமாக, சிறுபான்மையோர் பிரசினையைச் சர்வதேசப் பிரசினையாக முதன் முதல் கிளப்பியவர் ஹிட்லர் தான். செக்கோஸ்லோவோக்கியா, ஆஸ்ட்ரியா, போலந்து முதலியவைகளில் ஜெர்மன் சிறுபான்மையோர் கொடுமைப் படுத்தப்படுகிறார்களென்னும் புரளியே குற்றச் சாட்டாக ஆரம்பமாயிற்று. பிறகு சில பிரதேசங்கள் கேட்கப்பட்டன. ராணுவ நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத பூர்வாங்க நிகழ்ச்சிகளாகிய தொந்தரவு,கலவரம், குழப்பம் முதலியவற்றை அதிகமாக உண்டாக்கும்படி சிறுபான்மையோர் தூண்டிவிடப்பட்டார்கள். ஜின்னு பாகிஸ்தான் பிரதேசம் கேட்பதும், காங்கிரஸ் மாகாணங்களில் முஸ்லிம் சிறுபான்மையோர் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று அவர் மனம் போனபடி குற்றம் சாட்டியதும், ஏறக்குறைய அதே சமயத்தில் ஹிட்லர் கையாண்ட உபாயங்களை அனேகமாய் ஒத்திருந்தன என்பது விசித்திரமானது.

பாகிஸ்தான் கோரிக்கையின் தொடக்கத்துக்குப் போக வேண்டுமானல், நாம் 1907-ம் வருஷத்துக்குப் பின்னேக்கிச் செல்லவேண்டும். அப்போது, ஆகாகான் தலைமையில் சென்ற ஒரு தூது கோஷ்டிக்குப் பதிலளிக்கு முறையில், தனித் தொகுதியென்னும் வகுப்புவாதக் கோட்பாட்டை மிண்டோ பிரபு ஒப்புக்கொண்டார். காலஞ்சென்ற மௌலானு முகம்மது அலி மேற்படி தூது கோஷ்டியை 'உத்தரவுப்படி நடந்தது' என்றது முற்றிலும் சரியாகும். ஏனென்றால் அதைத் தவிர அது வேறொன்றுமில்லை. அது சாமர்த்தியமாக நடிக்கப்பட்ட ஒரு நாடகமே யாகும். "ராஜத்துரோகமுள்ள எதிர்க்கட்சியைச்

* 'பாகிஸ்தான் அல்லது இந்தியாவின் பிரிவினை, பக்கம் 358

சேரவொட்டாமல்" முஸ்லிம்களைப் பிரித்துவிடுவது மூலமாக இந்திய தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியைத் தடுப்பதே மேற்படி நாடகத்தின் கருத்தாகும்.

1913-ம் வருஷத்திய பூனு ஒப்பந்தமானது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைச் சகாப்தம் தோன்றுவதற்கு ஒரு முன்-நிகழ்ச்சியாக அப்போது கருதப்பட்டது. 1919-ம் வருஷத்து மாண்டேகு-செம்ஸ்போர்ட் அரசியலமைப்பில் தனித் தொகுதிகளின் உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனுல் அதன் நேரடியான விளைவு என்னவென்றுல் ராம்ஸே மெக்டனுல்டின் சமூக சம்பந்தமான தீர்ப்பேயாகும். பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளிலிருந்து பார்த்தால் மேற்படித் தீர்ப்பானது இந்திய-பிரிட்டிஷ் உறவின் வரலாற்றில் சோகம் மிக்க ஓர் அத்தியாயம் என்று தெரியும். அத்தீர்ப்பு, நாட்டின் எதிர்கால நன்மையைக் கெடுத்துவிடும் அதிகாரத்தை வாஸ்தவத்தில் முஸ்லிம் சமூகவாதிகளுக்குக் கொடுத்துவிட்டது. 1935-ம் வருஷத்து இந்திய துரைத்தனச் சட்டமும் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் கொண்டுவந்த மசோதாப் பிரகடனமும் முஸ்லிம் லீக் நிலைமையை முடிவாகப் பலப்படுத்தியது மல்லாமல், பாகிஸ்தான் அடிப்படையின் பேரில் தனது நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் அதற்கு உதவி செய்தன. பாகிஸ்தான் அனுபவ சாத்திய மானதென்று, மாட்சிமைதங்கிய மன்னர்பிரானின் அரசாங்கத்தினரால் வெளியிடப்பட்ட ஒரு தஸ்தாவேஜில் அங்கீகரிக்கப்பட்டது இது தான் முதல் தடவையாகும். அதன் அமைப்பே மிகக் கேடான மார்க்கத்தில் நாட்டின் பிற்போக்கை உண்டாக்கிவிடும் என்பது தெளிவு. இந்தப் பிற்போக்கு இன்னும் முடியவில்லை. கிலாபத் கிளர்ச்சியை மகாத்மா காந்தி தலைமை வகித்து நடத்தியது, இந்தியாவின் எதிர்காலத்திற்குத் தங்களுடைய முக்கியத்துவத்தைப் பற்றியும் இன்றியமையாமையைப் பற்றியும் பெரிதும் மிகைப்படுத்தப்பட்ட ஓர் உணர்ச்சியை முஸ்லிம்கள் கொள்ளச்செய்தது.

பதினொரு மாகாணங்களுள் ஏழு மாகாணங்களிலே மக்களின் பெருவாரியான வாக்குப் பலம் பெற்று காங்கிரஸ் உத்தியோகம் வகித்த காலத்தில் ஜின்னு கிளப்பிய அட்டூழியப் புரளியானது, சமூகப்பகைமைத்தீயைக்கிளறுவதற்கானமற்றொரு முயற்சியாகும். முஸ்லிம் சிறுபான்மையோர்கொடுமைப்படுத்தப்படுகிறுர்களென்று அவர் சுமத்திய குற்றச்சாட்டு வெறும் கற்பனை யென்றும், ஆதாரமற்றது என்றும் தெரியவந்தது. ஆனுல் அது ஒரு முதல் தரமான பிரசாரமாக உதவியது. காங்கிரஸ் மந்திரிசபைகள் உத்தியோகங்களை ராஜீனுமாச் செய்தபோது ஜின்னு,"விடுதலைத்தினம்"

கொண்டாடியது முற்றிலும் வெட்கப்படக் கூடிய ஒரு விஷயமாகும். அது, அவருடைய சின்னப் புத்தியும் அதிகார வேட்கையும் கால்தரியாது ஓட, அவர் மனிதர்களுக்குரிய மரியாதையையும் நிதானபுத்தியையும் மீறிச் சென்றதைக் குறித்தது.

## அடுத்தபடி என்ன செய்யவேண்டும்?

பிற்போக்கானவையும், ஒன்றுக் கொன்று ஒவ்வாதனவுமான கட்சிகளிலிருந்து முஸ்லிம் லீக் ஏராளமான ஆதரவைப் பெறுகிறது. திடீரென்று மாற்றும் ஒரு முறையைக் கையாண்டு அது எல்லாரையும் தன் வலைக்குள் இழுத்துப் போட்டுக் கொள்கிறது. இப்படி யெல்லாம் தமக்கு அநியாயமாய்க் கிடைத்த லாபங்களை இப்போது முஸ்லிம் லீக் விரைவாக ஒருங்கு திரட்டி, பலப் படுத்திக் கொண்டு வருகிறது. காங்கிரஸின் சமாதான முயற்சியினாலும், பிளவுக் கொள்கைக்கு பிரிட்டிஷார் அளிக்கும் ஆதரவினாலும், தேசிய முஸ்லிம்கள் உண்மையிலேயே அப்படியிராமல் முஸ்லிம் லீகின் இணைபிரியாத ஓர் அங்கமாகி விடலாம்.

இப்போது தேர்தல்கள் நடந்தேறிவிட்டன. முஸ்லிம்கள் பெரும்பான்மையோராய் உள்ள மாகாணங்களில் பாகிஸ்தான்-பிரசினையை அடிப்படையாக வைத்துத்தான் தேர்தல் நடத்தப் பட்டது. தேர்தல் முடிவுகளைக் கொண்டு பார்க்கும்போது, தமது கொள்கை சரியானதென்று தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு எடுத்துக்காட்ட ஆவலாய் இருக்கும் ஜின்னு, பெருவாரியான முஸ்லிம் மக்களின் வெறியையும் அறியாமையையும் நன்கு பயன் படுத்திக்கொண்டு காரியங்களைச் செய்துவருகிறார். பாகிஸ்தான் என்பது பாலும் தேனும் பாயும் ஒரு பூமியென்று படம் எழுதிக் காட்டுகிறார். கற்பனையிலுள்ள இந்தச் சுவர்க்கபூமி கைக்குவர வேண்டுமானால், அல்லாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு காயிதே-ஆஸம் ஜின்னுவுக்கு இணங்குவதன்மூலம் ஹிந்துப் பெரும் பான்மையோரின் ஆதிக்கத்தை ஒழித்துவிட்டால் போதுமென்று அவர் சொல்லுகிறார். வடமேற்கு எல்லைப் புறத்திலும் அஸாமிலும் தவிர மற்ற இடங்களில் நடந்த தேர்தல்களில் லீக் அப்படியொன்றும மோசமாகப் போய்விடவில்லை. ஆனால் அநேக விஷயங்களில், தேர்தல்களில் கையாண்ட முறைகள் பெரிதும் ஆட்சேபகரமானவையும் பித்தலாட்டமானவையும்தான் என்று சொல்ல வேண்டி யிருக்கிறது.

## தனித் தொகுதியாகிய பீடை

ஜனநாயக ரீதியில் தேர்தல் நடக்கவேண்டுமானால் தனித் தொகுதிகள் ஒழியவேண்டும். அவை ஒழியாவிட்டால் முஸ்லிம் லீகின் போக்குத்தான் பலப்படும். எப்படியென்றால் எந்த

முஸ்லிமும் ஒரு ஹிந்துவுக்கு ஓட்டுக்கொடுக்கமாட்டார்; அப்படியே எந்த ஹிந்துவும் ஒரு முஸ்லிமுக்கு ஓட்டுக் கொடுக்கமாட்டார். முஸ்லிம் ஒருவர் ஒரு முஸ்லிமுக்குத்தான் ஓட்டுகொடுக்கமுடியும், இன்றேல் அவர் தமது ஓட்டுரிமையை இழந்துவிட வேண்டும். இது ஒரு பகிரங்கமான சமூக ஏற்பாடாகையால், கலப்பற்ற சமூகவாதத்திற்காக நிற்கும் முஸ்லிம் லீகர் ஒருவருக்கு அவர் 'ஓட்டு' கொடுக்கக் கடமைப்பட்டவராவார்.

இது விஷயமாய் ஜின்னு கொண்டுள்ள கருத்துக்களைத் தெரிந்துகொள்வது சுவாரஸ்யமாய் இருக்கும். இந்திய அரசியல் சீர்திருத்த மசோதா சம்பந்தமாகப் பார்லிமெண்டால் நியமிக்கப் பட்ட கூட்டுப்பொறுக்குக் கமிட்டியின் முன்பு சாட்சி சொல்லு-கையில் 1919-ம் வருஷத்தில் ஜின்னு சொன்னது இதுதான்:

கேள்வி-3810—இந்தியாவைக் கருத்தில் கொண்டு பேசுவதாக நீர் சொன்னீர். உண்மையிலே ஒரு இந்திய தேசீய வாதியாக நீர் பேசுகிறீரா?—அப்படித்தான் பேசுகிறேன்.

கேள்வி 3811—அக் கருத்தை நீர் கொண்டிருப்பதனுல், முஸ்லிம் சமூகத்தாருக்குத்தனிப்பட்ட பிரதிநிதித்துவம் விரைவிலேயே அவசியமில்லாமல் போய்விடும் என்று நீர் எதிர்பார்க்கிறீரா?—நான் அப்படித்தான் நினைக்கிறேன்.

கேள்வி 3812—அதாவது, கூடிய சீக்கிரத்திலேயே அரசியல்-வாழ்க்கையில் முகம்மதியர்களுக்கும் இந்தியர்களுக்கும் எவ்வித வேற்றுமையும் இல்லாமற்செய்துவிடவேண்டுமென்று நீர் விரும்புகிறீரா?--ஆம்; அந்த நாள் வரும்போது வேறு எதுவும்எனக்கு அத்துணை மகிழ்ச்சியைக் கொடுக்காது.

இக் காலத்திலோவென்றுல் தனித்தொகுதிகளை ஆட்சேபிக்கும் எவரையும் ஜின்னு சிறிதும் மன்னிப்பதில்லை. ஏனென்றுல் பாகிஸ்தான் அடிப்படையின் பேரில் முஸ்லிம் லீகின் நிலைமையைப் பலப்படுத்திக்கொள்வதற்குத் தனித்தொகுதிகளும் சமூகத் திட்டமும்தான் அவருக்கு உதவிசெய்தன. ஆகவே அவர் தமது பாகிஸ்தானை எவ்வளவு விடாப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறுரோ, அவ்வளவுக்கு இந்தத் தேச விரோதக் கருத்துக்களையும் விடாமல் பிடித்துக் கொண்டிருப்பது இயற்கையே யாகும்.

பிரிட்டிஷார் இந்தியாவை முஸ்லிம் மன்னர்களிடமிருந்து எடுத்துக்கொண்டார்களென்றும், அது காரணமாக பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப் போகும்போது, இந்தியாவிலே முஸ்லிம்கள் விரும்பும் பாகங்களை அவர்களிடம் கொடுத்துவிட்டுப் போக வேண்டுமென்றும், ஜின்னு சொல்லியிருக்கிறுர். ஒரு நாட்டைக்

கைப்பற்றுகிறவர்கள் இப்படித்தான் சொல்வது வழக்கம். அதாவது, அதைக் கைப்பற்றினவன் அதன் பயனைத் தானே பெறும்படி, அந்த நாட்டை விடுதலை செய்பவன் விட்டுவிடவேண்டுமென்பதே யாகும். பிரிட்டிஷார் இந்தியாவில் கால் வைப்பதற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே இந்தியாவில் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி அற்றுப் போய்விட்டது. ஆகவே, பிரிட்டிஷார் இந்தியாவை முஸ்லிம்களிடமிருந்து எடுத்துக் கொண்டார்களென்பது உண்மையல்ல. அதோடுகூட, முஸ்லிம்கள் இப்படிக் கேட்பதை ஒப்புக்கொள்வதாய் இருந்தால், அச்சு-நாட்டினர் கைப்பற்றின நாடுகளை ஒருங்கு திரட்டுவதற்காகவே ஐக்கியநாடுகள் கிளம்பி யிருக்கின்றன என்று அர்த்தமாகும். இது நேசநாடுகளின் யுத்த நோக்கங்களுக் கெல்லாம் மாறுபட்டதாகும்; அவர்கள் மனப்பூர்வமாய் அளித்த வாக்குறுதிகளுக்குப் பெரும் துரோகம் செய்வதாகும்; இதை லட்சக் கணக்கானபேர் எதிர்ப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

பொது உடைமைக்காரர்கள் பாகிஸ்தான் பிரசாரம் செய்வதில் மிகுந்த ஊக்கம் உடையவர்களாய் இருக்கிறார்கள். இந்தியாவை உயிரோடு துண்டாடவேண்டுமென்று ஜின்னா கேட்பதை அவர்கள் ஆர்வத்துடன் ஆதரிக்கிறார்கள். பொதுவுடைமைக்காரர்களைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றிவிட்டது காரணமாக, லீகுக்கு மறைமுகமாகவும் நுட்பமாகவும் ஆதரவளித்ததற்குப் பதிலாக பாகிஸ்தானுக்காகத் தீவிரப் பிரசாரம் செய்யும்படி அவர்கள் தூண்டப்பட்டனர். முஸ்லிம்கள் முதலில் பாகிஸ்தானை வெறும் கோஷம் என்று தான் கருதினார்கள். ஆனால் காங்கிரஸின் சமாதான முயற்சியையும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் லீகை ஆதரிப்பதையும் கண்டு இவைகளைக் கொண்டு லீகை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாமென்று கருதினார்கள். பாகிஸ்தான் வரப்போகிற தென்று தெரிந்துகொண்ட பிறகு அவர்கள் லீகை ஆதரிப்பதற்குத் தடை என்ன? உண்மையிலேயே லீக் வட்டாரத்திற்கு வெளியேயுள்ள முஸ்லிம்களின் நிலைமை பரிதாபகரமானதாய்விடலாம். முஸ்லிம்களின் நன்மைக்குத் துரோகிகள் என்றும், ஐந்தாம் படைக்காரர்களென்றும் அவர்களுக்குப் பட்டஞ் சூட்டப்படும். பிற்போக்கான மதவெறி கொண்டு நாட்டைப் பிற்போக்குத் துறையில் செலுத்த அவர்கள் மறுப்பதே அவர்கள் செய்த குற்றமாகும். இஸ்லாம் சர்வ சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதென்பது அவர்களுக்குத் தெரியும். இந்தச் சகோதரத்துவமானது ஜாதி மத வேற்றுமையில்லாமல் மனித சமுதாயத்திற்கெல்லாம் வியாபிக்க வேண்டுமல்லவா? ஆனால் அவர்களையும் ஹிந்துக்களையும் பிடித்திருக்கும் தீவினையின் பயனாக, முஸ்லிம் லீகின் இஸ்லாம் ஒரு

விசித்திர வகையைச் சேர்ந்ததாய் இருக்கிறது. அது முகம்மது நபி அவர்களுடைய கொள்கைகளிலிருந்து வெகு தூரத்தி லிருக்கிறது. அரசியல் நோக்கங்களுக்காக இஸ்லாமின் பெயரால் பிரசாரம் செய்யப்படும் விஷயங்களுள் எதற்கும் அவருடைய யோசனைகளில் இடம் இருக்க முடியாது.

## ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியார் பங்கு

நியாயத்திற்கோ தர்க்கத்திற்கோ செவி சாய்க்க முற்றிலும் மறுக்கும் ஜின்னுவிடம், நாட்டின் முன்னேற்றத்தைத் தடுப் பதற்கான அதிகாரத்தைக் கொடுத்து விஷயங்களை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்த பாதகச் செயலானது, ஸ்ரீ ராஜ கோபாலாச்சாரியார் போன்றவர்களின் பேச்சைக்கேட்டு அவர்கள் தலைமையை மேற்கொண்ட காங்கிரஸ்-தலைவர்களைச் சேர்ந்த தாகும். ஜின்னுவைத் தம் பக்கம் திருப்பி முட்டுக்கட்டையை உடைக்க வேண்டுமென்று ராஜகோபாலாச்சாரியார் கொண்ட ஆவல், நாட்டின் சுதந்திரத்தையே பணயமாக வைக்க அவரைத் தூண்டியது. இந்தியாவை உயிரோடு துண்டாட வேண்டு மென்னும் லீகின் கோரிக்கையைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளாத தற்காக அவர் அடங்காப்பிடாரித்தனமாக அதை விட்டுக் கிளம் பியதும், அவருடைய திட்டமும், அதை காந்திஜி ஒப்புக்கொண்ட தும், காந்திஜி ஜின்னுவோடு பேச்சு வார்த்தைகள் நடத்தியதும், வேறு எதுவும் செய்ய முடியாத அளவுக்கு இந்தியாவின் கௌர வத்தையும் சுதந்திரத்தையும் கெடுத்துவிட்டன. அதோடுகூட ஜின்னுவைப் பின்பற்றுகிறவர்கள் அவரை ஒரு தெய்வமாகவே பாவிக்கும்படியும் செய்துவிட்டன.

பாகிஸ்தான் கொடுக்கப்படுகிறவரையில் தர்க்கத்திற்கோ நியாயத்திற்கோ செவி சாய்க்க மாட்டேனென்று ஜின்னு கொண்டுள்ள பிடிவாதம் மிகவும், சிக்கலான ஒரு பிரசினையைக் கிளப்பி விட்டிருக்கிறது. இதைத் தீர்ப்பதற்குச் செய்யும் முயற்சி களெல்லாம் தோல்வியுறுகின்றன. ஜின்னுவின் தலைமையின் கீழ் முஸ்லிம் லீக் அதிக முக்கியத்துவத்தையும் அதிகாரத்தையும் பெற்றுவிட்டதென்பதற்காக வருத்தப்பட்டுப் பயனில்லை. ஏனென்றுல், இதற்குக் காரணங்கள் இருக்கின்றன. சென்ற சில வருஷங்களிலே காங்கிரஸும், அவருடைய பிளவுக் கொள்கைக்கு உடனுக்குடன் ஆதரவளித்த பிரிட்டிஷாருமே, அக்காரணங்களை அவருக்கு உண்டாக்கிக் கொடுத்திருக்கிறுர்கள்.

கதைகளில் வரும் வேதாளத்தைப்போல் பிரிட்டிஷார்தான் ஜின்னுவை ஒரு வேதாளமாக்கி அதை முருங்கை மரத்தின் மேல் ஏற்றிவிட்டார்கள். ஆபத்துக்கேதுவான தமது கொள்கையை

*5

இன்னும் அவர் பின்பற்றாதபடி பிரிட்டிஷார் அவரைத் தடுக்கலாம். ஆனால் அப்படித் தடுக்கும்படி கட்டாயப்படுத்தினாலொழிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அதைச் செய்யமட்டார்கள்.



என்னவானாலும் பாகிஸ்தான் வேண்டும்!

இதற்குக் காரணம் மிகத்தெளிவு. அதாவது, அப்படிச் செய்வதனால் இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சியின் அஸ்திவாரம் அசைந்து கொடுக்கும். காங்கிரஸும் காந்திஜியும் 'ஜின்னாவோடு' கண்ணாமூச்சு' ஆடுவதையும் 'கீச்சு - மூச்சு' செய்வதையும் நிறுத்தி

விட்டு அவரோடு கண்டிப்பாக மட்டும் நடந்து கொண்டிருந்தால், பிரிட்டிஷார் ஜின்னுவை ஆதரிக்கும் விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காது. தற்போதைய நிலையில், இந்திய தேசீய வாதிகள் ஜின்னுவிடமும் அவருடைய முஸ்லிம் லீகிடமும் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? ஜின்னுவும் முஸ்லிம் லீகும்தான் இந்திய சுதந்திரத்திற்கு உண்மை விரோதிகளாய் இருந்தார்களென்றும், இந்த விரோதி ஒடுக்கப்பட்டு விட்டால் இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சி காலக்கிரமத்தில் ஒழிந்துவிடுமென்றும், மேற்படி தேசீய வாதிகள் முடிவுக்கு வந்தால், அது தவருகுமா?

## ஜின்னுவின் முட்டுக்கட்டை

ஸிம்லா மாநாட்டில் ஜின்னு நடந்து கொண்டதும் அவருடைய யதேச்சாதிகாரப் போக்கும் சில விஷயங்களை முடிவாக நிரூபித்துவிட்டன. அதாவது முட்டுக் கட்டையாய் இருப்பதுதான் அவருடையவேலை. முக்கியதேசீயப் பிரசினைகளைத் தீர்ப்பது அவருடைய நோக்கமல்ல. ஜின்னுவின் போக்கு எவ்விதத்திலும் உதவியாய் இராது என்று தெரிந்திருந்தும், சிம்லா மகாநாட்டின்கதியும் வேவல்திட்டத்தின்கதியும் ஜின்னுவின்போக்கைப் பொறுத்திருக்க வேண்டுமென்று ஏற்பட்டு விட்ட பிறகு, சிம்லா மகாநாடு எப்படிக் கூட்டப்பட்டது, ஏன் கூட்டப்பட்டது என்பவை தகுந்த கேள்விகளேயாகும். ஜின்னுவை வைக்கவேண்டிய இடத்தில் வைத்து, தமக்கு முன் இருந்த வைசிராய் செய்த பெரிய வேலையை வேவல் பிரபு கெடுக்க விரும்ப வில்லைபோலும்! உண்மை யென்ன வென்ருல், காங்கிரஸ் தனது தற்போதைய சமாதானப் பேச்சைக் கைவிட்டுப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரோடு ஒத்துழையாமையை மேற்கொள்வதாய் இருந்தால் அந்தக் காலதிற்கு ஜின்னு உதவுவாரென்று கருதி அவரைச் சந்தோஷமாக வைத்திருக்க பிரிட்டிஷார் ஆவலாய் இருக்கிருர்கள். இரண்டு பெரிய அரசியல் கட்சிகளுக்கிடையே தனக்கும் நன்மையில்லாமல், பிறருக்கும் நன்மை செய்யாமலிருக்கும் கொள்கையை பிரிட்டிஷ் சர்க்கார் அனுசரிக்கிறவரையில், சகலவிதமான முன்னேற்றத்தைத் தடுப்பதற்கும், தேசீய அரசியல் அபிவிருத்தியைக் குறைப்பதற்கும், தமது பாகிஸ்தானுகிய துருப்புச் சீட்டை ஜின்னு வைத்துக்கொண்டுதான் இருப்பார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செல்லக் குழந்தையாகிய அவர், இந்தியச் சுதந்திரத்திற்குத் தீர்மானமான விரோதி யென்னும் முறையில் காங்கிரஸ் அவரை எதிர்க்கும்போதுதான், அவர் தமது கோட்டையிலிருந்து வெளியேற்றப் படுவார்.

## தைரியமூட்டும் விஷயம்

பெரிதும் கோபமூட்டப் பெற்றும், அச்சுறுத்தப் பெற்றும் கூட, காங்கிரஸ் தனது அடிப்படையான தேசீயத் தன்மையை அப்படியே வைத்துக் கொண்டிருப்பது மிகவும் தைரியமூட்டும் விஷயமாகும். அதற்கு மாறாக, ஒரு ஹிந்து ஸ்தாபனம் என்று காங்கிரஸுக்குப் பட்டம் சூட்டி, காங்கிரஸும் அதையே ஒப்புக் கொள்ள வேண்டுமென்று ஜின்னா விரும்புகிறார். இந்த ஒரே செய்கையினால்,தேசீய முஸ்லிம்களெல்லாரும் காங்கிரஸ் தங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது என்னும் அங்கலாய்ப்பில் ஜின்னாவின் பக்கம் சேர்ந்துவிடுவார்கள்; தாங்கள் ஒரு இனம் என்று பகிரங்கமாய்ச் சொல்வார்கள் ; தங்கள் இனத்திற்குரிய சுய நிர்ணய பாத்தியதையைக் கோரிப் பாகிஸ்தான் கேட்பார்கள். காங்கிரஸ் "காந்தி-ஹிந்து-காங்கிரஸ்" தான் என்று சொல்லும் ஜின்னாவின் துடுக்குப் பேச்சினால், காங்கிரஸுக்கு உள்ளிலும் வெளியிலுமிருக்கும் தேசீயவாதி துன்பப்படுவாரானால் அவரை மன்னிக்க வேண்டியதே. காங்கிரஸ் ஒரு மகத்தான தேசீய ஸ்தாபனமாகும். அதன் தியாகத்தைப் பற்றியும் தேசபக்தியைப் பற்றியும் தலைவர்களைப் பற்றியும் அது பெருமை கொள்வது மிகப் பொருத்தமே. அத்தகைய ஒரு ஸ்தாபனத்தின் மீது நாக்கில் நரம்பில்லாமல் வசைமாரி தூவும் கீழான நிலைமைக்கு முஸ்லிம் லீகின் தலைவர் தம்மைத் தாழ்த்திக் கொண்டாரென்றால், அது முஸ்லிம் லீக் - தலைமைப் பதவிக்குப் பெருமை தரக்கூடிய காரியமல்ல. காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்தே, நிரம்பப் படித்தவர்களும் முன்னேற்ற நோக்கமுள்ளவர்களுமான முஸ்லிம்களும் மற்றச் சிறு பான்மையோரும் அதைப் பெருவாரியாகப் பின்பற்றினார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பார்ஸிகளும் அதற்கு ராஷ்டிரபதிகளாக இருந்திருக்கிறார்கள். இப்போதைய காங்கிரஸ்-ராஷ்டிரபதி யார் தெரியுமா? அவர் ஒரு முஸ்லிம் மதகுரு ; பெரும் புலவர்; சிறந்த சாஸ்திர அறிஞர் ; எல்லாச் சமூகங்களும் பயபக்தியுடன் அவருக்குத் தலைவணங்குகின்றன. இப்படி யிருக்கையில் காங்கிரஸ் கலப்பற்ற ஒரு ஹிந்து ஸ்தாபனமாக இருப்பது எவ்வாறு ? இது உண்மைக்கு விரோதமல்லவா ? அது ஹிந்துக்களுக்குப் போலவே முஸ்லிம்களுக்கும் பிரதிநிதியான ஸ்தாபனமாகும்.

ஜின்னாவை மகிழ்விக்க முயற்சி செய்வதில் பயனில்லை. தேசீய சுதந்திரத்திற்கு ஆதரவளிக்குமாறு அவரை ஒருபோதும் மாற்ற முடியாது. காங்கிரஸுக்கும் இந்திய தேசீயத்துக்கும் இந்திய சுதந்திரத்துக்கும் விரோதமாக அவர்போர் தொடுத்திருக்கிறார். அதையே விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கவும்

அவர் கருதியிருக்கிறார். பாரத நாட்டின் நன்மையை நோக்கமாகக் கொண்டுள்ள காங்கிரஸாவது, வேறு எந்த ஸ்தாபனமாவது ஜின்னாவினுடைய முஸ்லிம் லீகுடன் ஓர் ஏற்பாடு செய்து கொள்ள முயற்சி செய்வது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமமாகும். இதை முன்னிட்டுப் பார்க்கும்போது, சிம்லா மகாநாடு எவ்விதப் பயனையும் கொடாமல் முறிந்துபோனது தெய்வ சங்கற்பமேயாகும். அப்படிமட்டும் நடந்திராவிட்டால் காங்கிரஸ், வலையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும். காங்கிரஸின் நோக்கத்துக்கும் முஸ்லிம் லீகின் நோக்கத்துக்கும் இடைவிடாது போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் அவ்விரண்டும் ஓர் இடைக்கால ஏற்பாட்டைத்தான் எப்படி அமல் நடத்த முடியும்? ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் காங்கிரஸ் விரும்புகிறது. பிளவையும், அதன் விளைவாகிய பாகிஸ்தானையும் முஸ்லிம்லீக் கேட்கிறது. வைஸ்ராய் யதேச்சாதிகாரம் செலுத்தக் கூடாதென்று காங்கிரஸ் கேட்கிறது. ஆனால் நிர்வாக சபையின் எந்தத் தீர்ப்பையாகிலும் அந்தச்சபையின் முஸ்லிம் அங்கத்தினர் எதிர்ப்பார்களானால், வைசிராய் தமது யதேச்சாதிகாரத்தைச் செலுத்தி அத்தீர்ப்பை ரத்து செய்து விடுவதாக வாக்குறுதி கொடுக்குமாறு வைஸ்ராயை லீக் தலைவர் கேட்டிருக்கிறார். (மேற்படி முஸ்லிம் அங்கத்தினர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? ஜின்னா கேட்டுக்கொண்டபடி அவரால் நியமனம் செய்யப்பட்டவர்களே யாகும்.) இடைக்கால சர்க்காரில் கலந்து கொள்வதற்கான ஒரு திட்டமாக, ஹிந்துக்களுடன் சம எண்ணிக்கை-அந்தஸ்தைக் கேட்பதில் முஸ்லிம் லீக் பிடிவாதமாய் இருக்கிறது. காங்கிரஸோ, இந்தியாவின் நன்மையில் கருத்துள்ள வேறு ஸ்தாபனமோ, இதற்கு ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. காங்கிரஸ்-முஸ்லிம் லீக் கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டுள்ள எந்த ஏற்பாடும் அமலுக்கு வர முடியாது. இதற்குக் காரணம் மிகவும் தெளிவு. அதாவது, ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட குறிக்கோள்களை அவை கொண்டிருக்கின்றன. **தேசீய விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம் லீகின் பங்கு என்ன வென்று சரியாகக் கண்டறிந்து, அதற்குத் தக்கவாறு அதன் விஷயத்தில் நடந்துகொண்டால்தான் இந்தியாவிற்குச் சுதந்திரம் கிட்டும்.**

## ஐந்தாம் அத்தியாயம்

### காங்கிரஸின் லட்சியம் என்ன?

நமது தேசியத் தலைவர்கள் வைசிராயின் முன்பு மண்டியிட்டு அவருடைய நிர்வாக சபையில் அங்கத்தினர் பதவிக்காகத் தங்களை ஏற்றுக்கொள்ளும்படிச் சொல்வது விரசமான காட்சியாகும். காங்கிரஸுக்குள் சமரசம் ஏற்படுத்த விரும்பும் கூட்டத்தார் சமரச தத்துவத்தை வெகுதூரம் வரையில் கொண்டு போய், சுதந்திரத்திற்காக உறுதிபாய்ப் பாடுபட்ட பெரும் தலைவர்களின் மேல் வெற்றி கொண்டார்கள் என்பதை மறுப்பதில் பிரயோஜனமில்லை. இந்தத் தலைவர்கள் அடைந்த துன்பமும் செய்த தியாகமும் இந்திய விடுதலைப் போராட்டத்தின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. நமது குறிக்கோளை அடையும் வரையில் காங்கிரஸின் விடுதலைப் போராட்டம் சிறிதும் குறையாமல் நடந்து கொண்டு போக வேண்டுமானால், மகா ஜனங்களின் தலைவர்கள் தங்களுடைய பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி, நமது தேசிய அணி வகுப்பில் புகுந்துள்ள குறையை நீக்கவேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்து என்னவென்றால், நண்பர்களுக்கும் பகைவர்களுக்கும் வேற்றுமை தெரியாமல் காங்கிரஸ் சங்கடப்படுவதுதான். முன்னேற்றச் சக்திகளை ஒடுக்கி, அடிப்படையான தேசியப் பிரசினைகளை உதாசீனம் செய்து, அற்ப விஷயங்களில் பொது மக்களுடைய கவனத்தைத் திருப்புவதற்கென்றே வெளிப்பட்டிருக்கும் கட்சிகளுக்குக் கையாளாகக் காங்கிரஸ் ஆகிவிட்டிருக்கிறது. சுதந்திரத்தை விரும்பும் ஓர் இந்தியன் காங்கிரஸ்காரனாய் இருந்தாலும் சரி, வேறு யாராய் இருந்தாலும் சரி, அவனைத் தீவிரமாய் அலட்டும் கேள்வி, "இந்தியாவின் சுதந்திரத்தைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருப்பது எது?" என்பதேயாகும். சபல சித்தத்தில் பிறந்த கொள்கைகளினால் இந்தியாவின் அரசியல்-நிலைமை உளுத்துக் கொண்டே வருகிறது; பிளவுகள் அதிகரிக்கின்றன. அடிப்படையான பிரசினைகள் குழப்பப்படுகின்றன. இவைகளுக்கிடையில் தேசியவாதி ஒருவிதமான தோல்வி - மனப் பான்மையில் சிக்குண்டு உறுதியற்ற நிலையில் இருக்கிறார். "1942-ம் வருஷத்திய கிரிப்ஸ் திட்டமானது அப்போது பிரிட்டிஷார் முகத்தில் திருப்பி எறியப்பட்டது; அதைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளமுடியவில்லை. அப்படியானால் அதை விட மிகக் குறைந்த 1945-ம் வருஷத்திய வேவல்-திட்டத்தைக் காங்கிரஸ் எப்படி ஒப்புக்கொள்ளும்?" என்று அநேகர் கேட்கிறார்கள். காங்கிரஸ்

தன் வழியை மாற்றிக்கொண்டு "நல்ல பிள்ளையாக" நடந்து பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்க நினைப்பதுதான் இதற்குக் காரணமா? அல்லது காங்கிரஸ் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, முஸ்லிம் லீக் பிரிட்டிஷாரின் சிருஷ்டி என்பதை வெட்டவெளிச்சமாக்குவதற்காக பிரிட்டிஷ் சர்க்காரின் நட்பைக் கோருவது இதற்குக் காரணமாக இருக்குமா? ஜின்னுவைத் தலைவராகக் கொண்ட முஸ்லிம் லீக் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பகை என்பதில் சந்தேகமில்லை. அதிர்ஷ்டவசமாக அவ்வுண்மை இப்போது எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. ஆனுல் பிரிட்டிஷார் தங்கள் ஆதரவைக் கொடுக்க மறுப்பதன் மூலம் லீகைப் பலவீனப்படுத்த எதையும் செய்ய இஷ்டப்படமாட்டார்கள். இதற்குக் காரணம் மிகத் தெளிவு. அதாவது, அவர்கள் அப்படிச் செய்தால் பிரிட்டிஷாரின் "பிரித்து ஆளும் கொள்கையின்" சாயம் வெளுத்துவிடும்; இந்திய தேசியத்திற்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் இடையே நேர்முகமான போர் மூண்டு விடும். மேலும் பிரிட்டிஷாரின் ஆதரவைக் கொண்டு முஸ்லிம் லீகின் தலைவர்களை வெளியேற்றி விடுவது அவ்வளவு பிரயோஜனகரமான காரியமல்ல. ஏனென்றுல், இந்தியாவில் சம அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்குப் பிரிட்டிஷார் ஆடும் சூதாட்டத்தில் காங்கிரஸ் விருப்பமுடன் ஒரு கருவியாய்விடும்.

முஸ்லிம் லீக் விஷயத்தில் காங்கிரஸின் போக்கைப் பற்றியல்லவா பேசிக் கொண்டிருந்தோம்? ஆம், அதை விட்ட இடத்திலிருந்து இப்போது ஆரம்பிப்போம். காங்கிரஸின் இடதுசாரிகளும் வலதுசாரிகளும் எதிர்த் திசைகளில் ஒருவரையொருவர் இழுத்துக் கொண்டிருக்கிறுர்களென்பதை எடுத்துக் காட்டுவது அவசியமாகும். இவ்விரு திறத்தாரும் மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தியினுல் ஒன்ருக இணைக்கப்பட்டிருக்கிறுர்கள். இந்திய சுதந்திரத்திற்கென்று தன்னை அர்ப்பணம் செய்திருக்கும் காங்கிரஸுக்கு இது நன்மையாக முடியவில்லை. பசியினுல் உக்கிரமாய் இருக்கும் புலியையும், ஒன்றும் அறியாத ஆட்டுக்குட்டியையும் ஒரு துறையில் நீர் குடிக்கும்படி பலவந்தப்படுத்துவதில் பயன் இல்லை. காங்கிரஸ் கட்டுப்பாட்டின் பலத்தையும் ஒழுங்கையும் தேசிய உணர்ச்சியையும் பலவீனப் படுத்தும் தற்போதைய நிச்சயமற்ற நிலையைவிடக் காங்கிரஸில் பிளவு ஏற்படுவதே மேலானது. மதில்மேல் பூனையாய் இருப்பவர்களையும், மனவுறுதி அற்றவர்களையும் விட்டுச் சுதந்திரம் கிடைக்கிறவரையில் ஒருவிதமான தியாக உணர்ச்சியையும் தீர்மானமான உறுதியையும் ஊட்டுவதின் மூலமாக நாடெங்கும் தீவிரப் பிரசாரம் செய்வதற்காக விரும்பத் தகாதவர்

களைக் காங்கிரஸிலிருந்து அப்புறப்படுத்துவது மிக முக்கியமாகும். தற்போதைய அரசியல் நிலைமை அநேகம் சிக்கல்கள் வாய்ந்ததாகும். இத்தகைய நிலைமையைப் பூர்த்தியாக மதிப்பிட்டு நிதானமாய் ஆராய்ந்து பார்ப்போமானல், ஜின்னுவும் அவருடைய முஸ்லிம் லீகும் இந்திய சுதந்திரத்திற்குப் பெரும் பகைவர்கள் என்பதை எல்லோரும் அறிந்துகொள்வார்கள். ஆனல் துவேஷக் கருத்து உடையவர்களும் பிடிவாதக்காரர்களும் இதை உணராவிட்டால் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஜின்னுவைப் போன்ற ஒருவரோடு ஈடு கொடுக்க வேண்டுமானல் காங்கிரஸுக்கு ஒரு புது விதமான தலைவர் அவசியமாகும். மகாத்மா காந்தி மிகவும் நல்ல மனிதர்; மிகவும் பெரிய மனிதர். காங்கிரஸ்-லீக் ஒற்றுமை யில்லாமல் சுயராஜ்யம் வராது என்னும் அவருடைய நம்பிக்கையை முற்றிலும் மாற்றியாகவேண்டும். காந்திஜி ஒற்றுமையை மிக அதிகமாக விரும்புகிறார்; தமது எதிரிகளோடு விவகரிக்கும்போது, தமது கட்சியை விட்டுக் கொடுத்தாகிலும் அவர்களைச் சமாதானம் செய்ய விரும்பும் அவருடைய பெருந்தன்மையானது நம்மை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. இத்தகைய நிலைமையை இன்னும் வளரவிட முடியாது. கிரிப்ஸ் திட்டப்படி வகுக்கப்பட்ட இந்திய யூனியனின் அல்லது சமஷ்டியில் சேரும் அங்கங்களுக்கு 'எஞ்சியுள்ள அதிகாரங்கள்' கொடுப்பதற்குக் காங்கிரஸ் ஒப்புக் கொண்டிருக்கிறது. உண்மையில், இதுதான் முஸ்லிம் சமூகத்துக்குச் சுய நிர்ணய பாத்தியதையாகும்; இதுதான் பாகிஸ்தான். இதற்குக் கூட ஜின்னு ஒப்புக்கொள்ளாதது எதைக் காட்டுகிறது என்றல், அவர் வேண்டுவது பாகிஸ்தான் மாத்திரமல்ல; தமக்கே தெளிவாயிராத ஏதோ விநோதமானதும், கேலிக்கிடமானதுமான ஒன்றை அவர் கேட்கிருர் என்பதையே காட்டுகிறது.

## மொழி, பண்பாடு சம்பந்தமான சுதந்திரம் மறுக்க முடியாது

ஒரு தனிப்பட்ட பண்பாடு அல்லது மொழிக்குரிய இனத்தார் பூரண சுதந்திரம் உடையவர்களாய் இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனல் அவர்கள் யாருக்கும் உட்படாத ஓர் உன்னத அதிகாரத்தைக் கேட்கவும் முடியாது, கேட்கவும் கூடாது. அப்படிப்பட்ட அதிகாரம் நாடு முழுவதிலுமுள்ள மக்களுக்குச் சொந்தமானது. அவர்களுடைய சட்ட சபைகள் மூலம் அவர்கள் வெளியிடும் ஒன்றுபட்ட எண்ணத்தினல் மாத்திரமே அந்த அதிகாரம் செலுத்தப் படக் கூடும். குடியரசுக் கோட்பாடுகளை அனுசரித்துத் தேர்தல்கள் நடத்தப்பட்ட பிறகு அந்தச் சட்டசபைகள் தோன்றும்

இந்திய ஐக்கிய அரசியல் அல்லது சமஷ்டி - அரசியல் பற்றிய திட்டத்திலே பாதுகாப்பு, அந்நிய நாட்டு விவகாரங்கள், வரி விதிக்கும் கொள்கை முதலியவைகளைப்போல் இந்திய மக்களின் பாதுகாப்புக்கும் க்ஷேமத்திற்கும் அடிப்படையாயுள்ள விஷயங்கள் மத்திய கவர்ன்மெண்டாரின் தனிப்பட்ட பொறுப்பில்தான் இருந்து தீரவேண்டும். இந்த மத்திய கவர்ன்மெண்டில் பற்பல யூனிட்டுகள் அல்லது மண்டலங்கள் அல்லது மாகாணங்கள் (அல்லது அதை நாம் வேறு எந்தப் பெயரால் அழைக்க விரும்பினுலும் சரி) தங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும்.

சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பு தயாரிக்கப்படும்போது, எஞ்சி நிற்கும் அதிகாரங்கள் மத்திய சர்க்காரிடம் இருக்க வேண்டுமேயல்லாமல் மாகாண சர்க்கார்களிடமல்ல. அப்படியில்லாவிட்டால் பிற்போக்காளர்களையும் ஜனநாயக விரோதிகளையும் தங்களுக்குப் பாதுகாப்பும் மேலான பதவியும் கேட்குமாறு தூண்டுவதாக முடியும். இத்தகைய ஸ்திரமில்லாத நிலைமையில் உலகத்தில் எந்த நாடும் நீண்ட நாள் இருக்க முடியாது. சமஷ்டி அரசியலைச் சேர்ந்த வெவ்வேறு அங்கங்களுக்குப் பிரிந்துபோகும் உரிமையை வழங்கியது மூலமாகக் காங்கிரஸ் மகத்தான தவறு செய்தது. இது அரசியல் நிர்ணய சபையால் அங்கீகரிக்கப்பட்டு விடுமானுல், பிளவுக்கான விதையை நன்ருக நட்டு விட்டதாகவே முடியும்.

'இந்தியாவை விட்டு வெளியேறு' என்று சொல்வது பிரிட்டிஷாருக்கு எப்படிச் சவாலாக இருக்கிறதோ, அப்படியே முஸ்லிம்களுக்கும் சவால் ஆகுமென்று 'க்விட் இந்தியா' தீர்மானத்தின்மேல் முஸ்லிம் லீக் நிறைவேற்றிய தீர்மானத்தில் சொல்லியிருக்கிறது. இவ்விரு திறத்தாரும் எப்படி இத்தகைய ஒற்றுமையை வளர்த்துக் கொண்டார்களென்பது விசித்திரமாகத்தான் தோன்றுகிறது. பிரிட்டிஷ் துப்பாக்கிகள், ஜின்னுவுக்கும் பாகிஸ்தான் கொடுத்த பிறகுதான் போக வேண்டுமென்று ஜின்னு தெளிவாகச் சொல்லுகிருர். இதனுல்தான் 'பிரித்துக் கொடுத்துவிட்டு வெளியேறு' என்று முட்டாள்தனமாகக் கேட்கப்படுகிறது.

## ஜின்னுவின் தலைநோய்

ஹிந்துக்கள் இந்தியாவில் மிகப் பெரும்பான்மையோராவர். இதுதான் உண்மையில் ஜின்னுவுக்குத் தலைவலியாய் இருக்கிறது. முஸ்லிம் - சிறுபான்மையோரை ஒருமிக்க அப்படியே வைத்துக்கொண்டு, பெரும்பான்மையோரைப் பற்பல சிறு

பான்மையோராக எப்படியாவது ஆக்கிவிடுவதே ஜின்னுவின்நோக்க மாகும். இம்மாறுதல் சுலபமானதல்ல என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தியாவிலே எதுவும் சாத்தியமாகும் என்று அவர் நினைக்கிறார். அசாதாரணமான ஒரு சம்பவம்கூடத் தடுக்கப்படுவ தில்லை. பார்க்கப்போனால் பாகிஸ்தான் போன்ற ஒரு கோரிக்கையை இந்தியாவில்தான் கேட்க முடியும்; யாதொரு தடங்கலுமில்லாமல் அக்கோரிக்கையை இந்தியாவில்தான் பரப்ப முடியும்.

இந்தியாவிலே பெரிய மாறுதல்கள் ஏற்பட இருக்கின்றன. அன்னிய ஆதிக்கத்திலிருந்து அது சுதந்திரம் அடையப்போவதனால் மிக்க ஆற்றலுள்ள தத்துவங்கள் விடுதலை பெற்று, சர்வதேச வட்டாரத்தில் புதுப்புது அம்சங்களைத் தோற்றுவிக்கும். எல்லாச் சமூகங்களிலுமுள்ள முன்னேற்றப் பிரிவினரைத் தன் பக்கத் துக்கு இழுத்துக்கொண்டு, லீகானது சமுதாய—சுயநல உரிமை களுக்காகக் கிளர்ச்சி செய்யும் ஒரு கட்சிதான் என்பதைக் காங் கிரஸ் காட்டி விடுமென்று முஸ்லிம் லீக் அறியும். இது முஸ்லிம் லீக் தலைவர்களுக்குச் சகிக்கமுடியாத நிலைமையாகும். அதிலும், அவர்கள் தங்களுடைய பிற்போக்கான கொள்கையை விடாப்பிடியாக மட்டும் பிடித்துக்கொண்டு இருந்தால் மகோன்னதமான பதவிகள் அவர்களை வந்து சேருமென்று களைக் காண்பது கொஞ்ச காலமாக வழக்கமாகி விட்டது. இப் படிப்பட்டவர்களுக்கு மேற்படி நிலைமை சகிக்க முடியாததாய்ப் போய்விடுவதில் என்ன வியப்பு! ஹிந்துக்களுக்கு விரோதமாக அவர்கள் செய்த பிரசாரம் வெகுவாகப் பதிந்துவிட்டதென்று அவர்களுக்குத் தெரியும். அதைச் சுலபத்தில் மாற்ற முடியா தென்றும் அவர்களுக்குத் தெரியும். ஹிந்துக்களை விரோதித்துக் கொள்வதையும், காங்கிரஸை விரோதித்துக் கொள்வதையும் அடிப் படையாகக் கொண்டுதான் தற்போதைய லீகின் கொள்கையும் தலைமைப் பதவியும் நிலைத்திருக்கின்றன. இவை இரண்டும் போய் விட்டால் அது நிற்பதற்குக் கொழுகொம்பு இல்லாமல் போய்விடும். ஆகையால் தேசபக்தியும் முன்னேற்ற நோக்கும் கொண்ட ஒரு கொள்கையை லீக் அனுசரிக்குமென்று எதிர்பார்ப்பது முடியாத காரியமாகும்.

"முக்கியமாக முஸ்லிம்களையே எதிர்க்கச் செய்து முஸ்லிம் லீகிலிருந்து அதன் தற்போதைய தலைவர்களை நீக்கி விடுவது சாத்தியமாகுமா?" என்னும் கேள்வி எழலாம். இக்கேள்விக்குப் பதில் 'சாத்தியமில்லை' என்பதே யாகும். ஏனென்றால், நிலைத்த உரிமை உள்ளவர்களே லீகில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். நிலச்சுவான்தாரர்களும் பட்டதாரிகளுமே அதன் தலைவர்களாய் இருக்கிறார்கள். தங்களுடைய சுயநலங்களைக்

காத்துக் கொள்வது விஷயமாய் இவர்களுக்குள் பூரண ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸில் இருப்பதுபோல் லீகில் வலசாரி, இடசாரி என்பதெல்லாம் இல்லை. ஆகவே, அதன் தலைவர்களிடையே சுயப் பிரயோஜனம் சம்பந்தமாகத் தகராறு எதுவும் ஏற்படுவதற்கு இடமேயில்லை. எந்த ஒரு மனிதனும் உட்புகுந்து அதன் கொள்கைகளை மாற்ற முயற்சி செய்வதற்கு இடம் கொடுக்கக்கூடிய பொதுஜன ஸ்தாபனம் லீக் அல்ல. அதில் ஒருவர் அங்கத்தினராக வேண்டுமானால் ஒரு திட்டத்தின்படிதான் ஆக முடியும். அதாவது அவர் தமது முன்னேற்ற நோக்கத்தைக் கைவிட்டுப் பிளவுக் கொள்கையை ஒப்புக்கொள்ள வேண்டும். அறிவைக் கொலை செய்யும் இந்தத் திட்டத்தினால்தான் லீக் எவ்வளவோ வசீகரமாய் இருந்தாலும் முஸ்லிம் அறிவாளிகளில் பெரும்பான்மையோர் முஸ்லிம் லீகில் சேரவில்லை.

## ஆறும் அத்தியாயம்.

### ஜின்னுவினுடைய நோயின் கூறுபாடு

ரோமாபுரியில் இரண்டாவது மனிதராய் இருப்பதைவிட ஒரு கிராமத்தில் முதல் மனிதராய் இருப்பதிலேயே சீசருக்கு ஆசை: ஜின்னுவின் நிலைமையும் இதுவே. ஒழுக்கத்திலும் அறிவிலும் காங்கிரஸிலுள்ள மிகப் பெருந் தலைவர்களுக்குத் தாம் சமமல்லவென்பது ஜின்னுவுக்குத் தெரியும். இறுமாப்பினுல் அறிவை அறவே இழந்துவிட்ட மனிதனின் கதையே அவருடைய கதை. இந்தியாவிலே பிரசித்தி பெற்ற எந்தத் தலைவரும் அவரைப்போல் உதாசீனமான பாஷையை எப்போதுமே உபயோகித்ததில்லை. தமது பாகிஸ்தான்-கோஷம் விவேகமற்ற அரசியல் கோரிக்கை என்றும் கேலிக்கிடமானதென்றும், நியாயத்திற்கு ஒவ்வாததென்றும், விபரீதமானதென்றும், சரித்திரத்தில் கண்ட உண்மைகளுக்கெல்லாம் மாறுனதென்றும் அவருக்குத் தெரியும். அவரது கோரிக்கையை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால்—அல்லது நன்கு அலசிப் பாகுபாடு செய்து பார்த்தால்—அது நிற்காது என்பதும் அவருக்குத் தெரியும். ஆகையினுல்தான் அதை நன்ருக வரையறுக்க மாட்டேனென்று அவர் பிடிவாதம் செய்கிருர். எனவே வரையறுக்க எத்தனிப்பவர்களிடம் அவர் விரோதபாவம் காட்டுகிருர்!

ஜின்னு மேற்கொண்டுள்ள கொள்கைக்கு ஆதாரமாக மூன்று முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. முதலாவதாக, காங்கிரஸுக்கு விரோதமாகப் பிரிட்டிஷ்-முஸ்லிம் லீகுக் கூட்டுறவு ஏற்பட்டு விடுமோ என்று காங்கிரஸ் அஞ்சுவதாகும். இரண்டாவதாக, 1942 - ஆகஸ்டு கலவரங்களின்போது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்ததுபோல, அவசியமாகும்போது காங்கிரஸை ஒடுக்க ஒரு கருவியாக முஸ்லிம் லீகை உபயோகித்துக் கொள்வது மூலமாகக் காங்கிரஸை அடக்கிவைக்க ஒரு சாதனமாகப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் உபயோகித்து வருவதாகும். மூன்ருவதாக, தமது கொள்கை கொஞ்சமாகிலும் ஆதரிக்கப்படாவிட்டால், காங்கிரஸோடு ஒத்துழைக்கப் போவதாக அவர் குறிப்பாய் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை அச்சுறுத்துவதாகும்.

### திகைக்க வைக்கும் தந்திரங்கள்

ஹிட்லரைப் போலவே ஜின்னுவும் திடுக்கிடும்படிச் செய்யும் தந்திரங்களில் நம்பிக்கை வைத்திருக்கிருர். ஐரோப்பாவிலே ஜெர்மன் சிறுபான்மையோர் கொடுமைப்படுத்தப் படுகிருர்களென்ற

வதந்தியை ஹிட்லர் பரப்பியதைத் தமக்கு உதாரணமாகக் கொண்டு, காங்கிரஸ் மந்திரி சபைகள் ஆட்சிபுரிந்த காங்கிரஸ்-பெரும்பான்மை மாகாணங்களில் முஸ்லிம்கள் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள் என்னும் பொய் வதந்தியை ஜின்னா கிளப்பினார். ஹிட்லருக்குப் பழிதீர்த்துக் கொள்வதற்கு வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை கிடைத்தது. 1937-ம் ஆண்டில் பெருவாரியான ஓட்டுக்களால் சட்டசபைகளைக் கைப்பற்றியதற்காகவும்,லீக் மந்திரி சபை ஒன்றுகூட ஆட்சி புரிவதற்கு இடம் கொடாமல் பதினொரு மாகாணங்களிலே ஏழு மாகாணங்களில் ஜனநாயக மந்திரி சபைகளை அமைத்ததற்காகவும் காங்கிரஸின்மீது ஜின்னா பழி தீர்த்துக் கொள்ளவேண்டியிருந்தது. அவருக்கு அப்போது ஒரு திருப்தி மட்டும் இருந்தது. அதாவது விடுதலைத் தினத்தைத் தகுந்த முறையில் அவர் கொண்டாடினார். சிறுபான்மையோர் கொடுமைப்படுத்தப் படுகிறார்களென்று ஹிட்லர் குற்றம் சாட்டினார் என்றால், அதற்கு அடுத்த டியாகச் சில பிரதேசங்கள் தமக்கு வேண்டுமென்று கேட்பதில் முடியும். ஜின்னாகூட அப்படித்தான் தனிப் பிரதேசத்தைக் கேட்கிறார். ஹிட்லருடைய கோரிக்கைகளைச் செயல் முறையில் ஆதரிப்பதற்கு அவருக்குப் பக்க பலமாக ஆற்றல் வாய்ந்ததும் நன்றியுள்ளதுமான நாடு அவருக்கு இருந்ததென்பதையும், இந்தியா சக்தியற்ற ஒடுக்கப்பட்ட நாடு என்பதையும், அந்நிய ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுத்துக் கொள்ள அது போராடுகிறதென்பதையும் ஜின்னா மறந்து விடுகிறார்.

## ஈடும் எடுப்பும் அற்ற சந்தர்ப்பவாதி

சந்தர்ப்பவாதியாக இருப்பதில் ஜின்னாவைத் தோற்கடிக்க ஒரு சிலரால்தான் முடியும். இந்தியாவின் துரதிர்ஷ்டமே தமது பாக்கியம் என்பது அவருக்குத் தெரியும். பல நூற்றாண்டுகள் அந்நிய ஆட்சியின் கீழ் இருந்ததின் பயனாக இந்தியா ஒழுக்கக் கேட்டிலும் மக்களின் ஆரோக்கியச் சீர்குலைவிலும் படு பாதாளத்தில் ஆழ்ந்திருக்கிறது. ஆகையால் இதை விட அரிய சந்தர்ப்பம் வேறொன்று இருக்க முடியுமா? நாட்டுப் பற்று ஒரு சிறிதாகிலும் அவரிடம் இருக்குமானால், சுதந்திரம் பெற இந்தியா நடத்தும் பெரும் போராட்டத்தில் அவர் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டிருப்பார். அதற்கு மாறாக இந்தியாவின் விடுதலையும் சுதந்திரமும் ஆகிய குறிக்கோளுக்கு மிகப் பெருந் தடையாய் இருந்து, அது காரணமாகச் சுதந்திர இயக்கத்திற்குப் பெருத்த ஆபத்து விளைவிக்கும் தொழிலை அவர் விருப்பத்துடன் மேற்கொண்டார்.

இன்றையதினம் தம்மை விடுவித்துக் கொள்ள முடியாத ஒரு நிலைமையில் அவர் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஹிந்துக்களுக்கு விரோதமாக அவர் செய்த பிரசாரம் மிக ஆழமாகப் பதிந்து விட்டிருக்கிறது. ஹிந்துக்களைக் கோபமூட்டி அவர்களை வெறுப்புக் கொள்ளும்படிச் செய்ததில் வேறு யாரும் கையாண்டிராத முறையை அவர் கையாண்டார். நேரடியான நடவடிக்கையை முஸ்லிம் லீக் நடத்த முடியாதென்று நமக்கெல்லாம் தெரியும். காங்கிரஸின் சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம் லீக் கலந்து ஒத்துழைக்குமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி அதிக நியாயமானதென்று காட்டுவதன் மூலம் அதைத் தாங்குவதை லீக் விட்டுவிட வேண்டுமென்றுதான் நாம் விரும்புகிறோம். லீக் இவ்வாறு நாட்டின் சுதந்திரத்துக்குக் குறுக்கே நிற்காதிருப்பதற்கு அது கேட்கும் பிரதிபலன் மிகப் பயங்கரமாய் இருக்கிறது. இதற்கு ஓர் உவமை சொல்ல வேண்டுமானால், நோயைவிடப் பரிகாரம் மிகவும் கெடுதலாய் இருக்கிறது என்றே கூறவேண்டும்!

ஜின்னாவைப் போன்ற ஒருவருடன் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்வது பயனற்றதும் ஆபத்தானதும்கூட என்பது மிகத் தெளிவாய் விட்டது. அவர் தாமே ஏற்படுத்திக்கொண்ட மயக்கத்துக்குத் தம்மை உள்ளாக்கிக் கொண்டிருக்கிறார். ஒரு பரவா* அல்லது ஒரு ஹிட்லருக்குள்ள இறுமாப்புடன்தான் அவர் விஷயங்களைப் பார்க்கமுடியும். இதனால் அவருக்கு ஒன்றும் நஷ்டமில்லையென்பதும், எல்லாம் லாபம்தான் என்பதும் அவருக்கு நிச்சயமாகத் தெரியும். அப்படியானாலும் இந்தியா பிளவுபட்டுப் போனால் என்ன முழுகிப்போகும்? பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா ஏற்கெனவே சிதறுண்டு போயிற்று. அந்தப் பிடியினின்றும் விடுவித்துக் கொள்வதற்கான போராட்டமே இந்தியாவின் தற்போதைய போராட்டமாகும்.

ஜின்னா கேட்பதெல்லாம் இதுதான்: அதாவது, காங்கிரஸும் ஹிந்துக்களும் அரசியல் துறையில் தற்கொலை புரிந்துகொள்ள வேண்டுமென்பதேயாகும். சுய நிர்ணய பாத்தியதை வேண்டுமென்று அவர் கேட்கிறார். இந்த பாத்தியதையைச் செலுத்துவதானால், முஸ்லிம்கள் பெரும்பான்மையோராய் உள்ள மாகாணங்களில் உள்ளவர்களின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அங்கே பொது ஜனவாக்கு எடுக்கவேண்டியதே: இதைக்கூட அவர் ஆட்சேபிக்கிறார். தமது ஏகாதிபத்திய சுய நிர்ணய பாத்தியதையின் பிரகாரம் அவர் முழு

* இப்பொழுது எகிப்து என வழங்கும் மிச்ர தேசத்தின் பழைய அரசர்.

இந்தியாவைக் கேட்டாலும் நாம் வியப்படைவதற்கில்லை. ஜின்னாவின் கைப் பொம்மைகளாக இருக்க விரும்புகிறவர்களுக்கெல்லாம் நாம் அடியிற் கண்டபடி எச்சரிக்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அதாவது, ஐரோப்பாவிலே ஹிட்லரைத் திருப்தி செய்வதற்கான கொள்கையினால் என்ன பலன் உண்டாயிற்றோ, அதே பலன்தான் இந்தியாவில் ஜின்னாவைத் திருப்தி செய்ய எத்தனிப்பதனால் உண்டாகும்.

ஜின்னாவின் அமைப்புத் திறமை மிகப் பெரிது என்பதில் சந்தேகமில்லை. கேட்பாரற்றுக் கிடந்த செயலற்ற ஓர் அரசியல் கட்சியிலிருந்து, காங்கிரஸுக்கு அடுத்தபடியாக பலமும் ஆற்றலும் பொருந்திய ஒரு ஸ்தாபனமாக அவர் முஸ்லீம் லீகை உருவாக்கிவிட்டார். ஆனால், அதன் முன்னேற்றம் திடீரென்று தடைப்பட்டது. லீகுக்குக் குறிக்கோள் எதும் இல்லாமையினால் அது அசைந்து கொடுத்தது. ஆகவே காங்கிரஸ் விரோதிகள் சேருவதற்குரிய ஸ்தாபனமாக அது மாறிவிட்டது. காங்கிரஸையும் காந்திஜியையும் எப்போதுமே எதிர்ப்பதும் வெறுப்பதும்தான் அதன் அடிப்படையாக இருந்தன. பாகிஸ்தானை முதலில் ஆதரித்தவர்கள் அதை ஒரு தேவலோகமாகத்தான் கனவு கண்டார்கள். அந்தக் கனவைக் கூட இப்போது அவர்கள் காண்பதில்லை. பாகிஸ்தான் உண்மையிலேயே அமலிலிருக்கும் மாகாணங்களில் வாஸ்தவத்தில்என்னசம்பவிக்குமென்று மக்கள் நேருக்கு நேர் கண்டு திகைத்துப் போனார்கள். பல ஆபத்தான தீங்குகள் நேரிடுமென்று சொல்லப்பட்டது. பாகிஸ்தான் அரசியல் ரீதியில் கஷ்ட சாத்தியமானதென்றும், பொருளாதார ரீதியில் மூடத்தனமானதென்றும், மத சம்பந்தமாக ஆபத்தானதென்றும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிட்டது. பஞ்சாபிலே மாலிக் கிஸார் அயத்கான் திவானா அவர்கள் லீக் விஷயமாய் மேற்கொண்ட நேர்மையான போக்குக்கு கவர்னர் ஆதரவளித்ததன் மூலம் பாகிஸ்தானின் சாயம் வெளுத்துவிட்டது. வங்காளத்திலும் வடமேற்கு எல்லைப்புறத்திலும் குருக்ஷேத்திரத்தில் கௌரவர்கள் அடைந்த கதியைத்தான் அது அடைந்தது. ஸிந்துவில் அரசியல் நிலைமை ஒரே குழப்பமாயிருக்கிறது. அஸ்ஸாமிலோ காங்கிரஸ் கட்சியினர் இரங்கி விட்டுக் கொடுப்பதனால்தான் மந்திரி சபை நடந்து வருகிறது.

ஜன நாயகத்தைப் பற்றி அல்லது நியாயத்தைப் பற்றி எந்தச் சோதனை செய்து பார்த்தாலும், பாகிஸ்தான் இந்திய பூமியில் கால்கொள்ள முடியாது. ஆனால் ஆட்சி புரியும் அதிகார வர்க்கமானது பிரசாரக் காரியங்களுக்காக ஜனநாயகத்தைப் பற்றி உதட்டளவில் தேன் சொரிகின்றார்கள்! ஆனால், அவர்கள்

நடத்தையோ மிகவும் அகம்பாவமும் அதிகாரமும் வாய்ந்ததாய் இருக்கிறது. அதே சமயத்தில் ஒருவரை யொருவர் எதிர்க்கும் கட்சியினர்களுக்குச் சிந்தனைசக்தி இல்லையென்று தெரிந்துகொள்ள அதிகார வர்க்கத்தினருக்கு முகாந்திரம் இருக்கும்போது, மிகப் பழைய பரம்பரையான முறைகளைக் கையாண்டு அவர்களைப் போருக்கு அணிவகுத்து நிற்கும்படித் தூண்டவும் செய்கிறார்கள்.

---

## ஏழாம் அத்தியாயம்

### சர்வதேச அரங்கில் சுதந்திர அகண்ட இந்தியா

சர்வதேச அமைப்பு எதிலும் சுதந்திர அகண்ட இந்தியாவுக்குச் செல்வாக்கு இருக்கும். சுதந்திர நாடுகள் கொண்ட ஒரு சமஷ்டியை நோக்கி உலகம் விரைந்து போய்க் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் பல தவறுகளைச் செய்து விட்டிருக்கிறது. அவைகளில் மிகப் பெரிது 1935-ம் வருஷத்திய அரசியலமைப்புச் சட்டப்படி உத்தியோகங்களை ஒப்புக்கொள்ள அது விரும்பினதேயாகும். இதனுடைய நேரடியான பயன் முஸ்லிம் லீக் பலம் பெற்றதேயாகும். கிரிப்ஸ் திட்டங்களைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டிருக்குமேயானால், பாகிஸ்தான் இப்போது உண்மையில் நடந்து கொண்டிருக்கும். அறைகுறை அறிவு ஆபத்தானது. அது போலவே அறைகுறை அதிகாரமும் ஆபத்தானதே. எனவே, மாகாண மந்திரிகளுக்குக் கொடுக்கப் பட்ட வரையறுத்த அதிகாரம், பொதுஜனங்களுக்கு உருப்படியாக எந்த நன்மையும் செய்வதற்குப் போதவே போதாது. ஆனால், எதிர்ப்பையும் பகைமையையும் விளைவிப்பதற்கு வேண்டிய ஆற்றல் அதில் இருந்தது. இதுதான் இந்திய அரசியல் சட்டத்தில் அடிப்படையாய் இருந்த கருத்தாகும். உண்மையான அதிகாரம் பிரிட்டிஷார் கையில் இருக்கும்படிச் செய்வதற்கும் அதிகாரத்தின் நிழல் மாத்திரம் இந்தியர்களிடம் இருக்கும்படிச் செய்வதற்கும், இந்த நிழலைப் பெறுவதற்காக இந்தியர்கள் ஒருவரோடொருவர் சண்டை போடும்படிச் செய்வதற்கும் சாதுரியமாய் வகுக்கப்பட்ட ஒரு சூழ்ச்சியே மேற்படிச் சட்டம்.

அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் ஒவ்வொரு நாட்டிலும் நாட்டு விடுதலைக்கான மகத்தான இயக்கமொன்று தோன்றுவது இன்றியமையாததே. சரித்திரத்தில் இது பற்றிய முடிவான சான்றுகள் நமக்குக்கிடைக்கின்றன. பிரிட்டிஷார் உட்பட, ஆட்சி புரியும் அதிகார வர்க்கம் ஒவ்வொன்றுக்கும் இது தெரிந்ததுதான். போராட்டம் மிகத் துன்பம் தருவதாக வும் நீடித்ததாகவும் இருக்கலாம்; அதன் முன்னேற்றம் தடுக்கப் படலாம்; வேகம் குறைக்கப்படலாம். ஆனால், புரட்சிகரமான குறிக்கோளும் பொது ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்னும் ஆவேசமும் உள்ள எந்த இயக்கத்தையும் நசுக்கவே முடியாது. உண்மையிலேயே அதை அடக்கினால் அதற்கு இன்னும் துணிச்சல் உண்டாகி அதன் உறுதி இன்னும் அதிகமாகும். அப்படிப்பட்ட ஓர் இயக்கத்திற்குப் பூர்

*7

வாங்கமாக இன்றியமையாது இருக்க வேண்டியது எண்ணத்திலும் செயலிலும் நோக்கத்திலும் ஒற்றுமையே யாகும். இக் காலத்தில் அன்னிய ஆதிக்கத்திலுள்ள ஒவ்வொரு நாடும் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. அதைப் பலாத்காரத்தினல் அடக்கிவைக்க ஆட்சி புரியும் ஒரு வர்க்கத்துக்கு ஆற்றல் இருக்கலாம். ஆனல், அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை மறுப்பதற்கு அந்த வர்க்கத்துக்கு நியாயமான உரிமை கிடையாது. மிக்க துன்பம் தரும் ஒரு நிலைமையில் ஒவ்வொரு நாட்டினரும் தங்களுடைய உள்நாட்டு வேற்றுமைகளை மறந்து தங்களுடைய சுதந்திரத்தின் பொருட்டு ஒற்றுமைப் படுகிருர்கள். விசாலமான ராஜ்யமும் ஏராளமான பொருளாதாரமும் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் உள்நாட்டு வேற்றுமைகளை உண்டுபண்ணுவதில் வெற்றிபெற்றிருக்கிறது. இந்த வேற்றுமைகள் அடிப்படையானவை என்று உலக மக்கள் எண்ணுகிருர்கள். ஆனல், இவ்வேற்றுமைகள் ஆட்சி புரியும் வர்க்கத்தினரின் சிருஷ்டிதான் என்றும், இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையில் இவை இருந்துதான் தீருமென்றும், உலகத்திலே முன்னேற்ற நோக்கமுள்ள பெரியார்களுக்குத் தெரிந்துதான் இருக்கிறது. பிரிட்டிஷார் உண்மையாய் நடந்து கொள்கிருர்களா என்பதற்கு ஒரு சோதனை இருக்கிறது. அதாவது, இந்தியாவை இந்தியர்களிடம் கொடுத்துவிடத் தாங்கள் மிக்க ஆவலாய் இருப்பதாக அவர்கள் சொல்வது உண்மையானல், அதிகாரத்தை மாற்றுவதற்குமுன், கட்சிகள் தங்களுக்குள் ஒத்துப் போகவேண்டுமென்பதை அவர்கள் வற்புறுத்தமாட்டார்கள்.

காங்கிரஸ்-லீக் ஒப்பந்தம் ஏற்படுவதற்காகத்தான் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேருமல் காத்துக் கொண்டிருக்கிருர்களென்று நம்புவது வெறும் பிரமையே யாகும். ஹிந்து-முஸ்லிம் வேற்றுமையாகிய சாக்கு நீங்கிவிட்டால் வேறொரு சாக்கைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்குப் பிரிட்டிஷ் ராஜதந்திரம் வரண்டு போய்விடவில்லை. மன்னர்களையும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களையும் இதர சிறுபான்மையோரையும் அவர்கள் அப்போது கிளப்பி விடுவார்கள். இவர்களுடைய பாதுகாப்புக்காகத்தான் தாங்கள் இங்கே இருப்பதாகவும் சொல்லுவார்கள். இச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய விஷயத்தை எடுத்துக் காட்டுவது நல்லது. அதாவது, பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் இந்தியாவைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருந்தபோதிலும், காங்கிரஸும் முஸ்லிம் லீகும் ஒற்றுமைப்பட்டவுடன் இந்தியாவின் பரிபாலனத்தின் முழு அதிகாரத்தையும் பிரிட்டிஷார் இந்தியர்களுக்குக் கொடுத்துவிடுவார்களென்று, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சார்பில் பேசும் எவரும் ஒரு தடவையாவது

அதிகார பூர்வமாய் இதுவரையில் சொன்னதில்லை. தாங்கள் சொல்வதற்கெல்லாம், பின்னால் தாராளமாகவும் பலவாறாகவும் அர்த்தம் கொள்வதற்கு ஏற்றபடி அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகப் பேசுகிறார்களென்பதையும், அவர்களுடைய வாக்குறுதிகள் மனப்பூர்வமாய்க் கொடுக்கப்படவில்லை யென்பதையும் இது தெளிவாகக் காட்டுகிறதல்லவா ?

## நோயிலும் கொடிய மருந்து

ஜின்னா சொல்லுகிறபடி சிறுபான்மைப் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பாகிஸ்தான் ஒரு கருவியாகக் கருதப்படுமானால் அது வியாதியைவிட கொடியதாய் இருக்கும் பரிகாரத்திற்குச் சமமானதென்று நிர்ப்பயமாய்ச் சொல்லலாம். இந்திய அரசியல் அமைப்பில் நபர் ஜாமீன் முறை முதல் தடவையாகப் புகுத்தப்பட வேண்டி யிருக்கும். இதன் விளைவு என்ன வென்பதை ஐரோப்பாவில் நடைபெற்ற பயங்கர நிகழ்ச்சிகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். இதன் முடிவு என்ன வென்பதைப் பாருங்கள். பெருந் தொகுதிகளாய் உள்ள மக்கள் ஹிந்து பெரும்பான்மையோரை விட்டு ஒரு நொடியில் பிய்த்து எறியப்படுவார்கள். ஹிந்து சிறுபான்மையோர் முறையே இரண்டு கோடியே பத்து லக்ஷம் பேராகவும், ஒருகோடியே பத்து லக்ஷம் பேராகவும் உள்ள வங்காளம், பஞ்சாப் போன்ற தங்களுடைய சொந்த பூமியிலேயே சிறுபான்மையோர் என்னும் அந்தஸ்துதான் பெறக்கூடும். ஆஹா! இத்தகைய ஒரு எதிர்காலத்தை முஸ்லிம் லீக் யோசித்துப் பார்த்துப் பெருமை கொள்ளவேண்டியதுதான்!

வங்காளத்திலும் பஞ்சாபிலும் ஏற்பட்டுள்ள முஸ்லிம் பெரும்பான்மையோர், முஸ்லிம்களைச் சமாதானப்படுத்துவதற்காகப் பிரதேச சம்பந்தமான தகிடு தத்தம் செய்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்பட்டவர்களாவார்கள். ஐக்கிய மாகாணத்திலிருந்து ஒரு ஜில்லாவையும், பீஹாரிலிருந்து மற்றொரு ஜில்லாவையும் முறையே பஞ்சாபுடனும் வங்காளத்துடனும் சேர்த்துவிட்டால் இவ்விரண்டு மாகாணங்களிலும் முஸ்லிம் பெரும்பான்மையோர் சிறுபான்மையோராகவும், ஹிந்துக்கள் பெரும்பான்மையோராகவும் ஆய்விடுவார்கள். முஸ்லிம்கள் பெரும்பான்மையோராய் இருக்கும் மாகாணங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் பொருட்டு மற்றொரு மாகாணத்தை முஸ்லிம்களுக்குக் கொடுக்க வேண்டுமென்னும் காரணத்தினாலேயே ஸிந்து பம்பாயிலிருந்து பிரிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள முஸ்லிம் சிறுபான்மையோருக்காக அவர் போராடுகையில், அவருடைய பாகிஸ்தான் திட்டத்திலே ஹிந்து

சிறுபான்மையோருக்கும் சீக்கிய சிறுபான்மையோருக்கும் சுய நிர்ணய பாத்தியதையை அவர் எப்படி மறுக்கக்கூடுமென்று ஜின்னாவைக் கேட்டபொழுது, அவர்கள் உப தேசீயத் தொகுதியினர் என்றும், ஆகவே, சுய நிர்ணய பாத்தியத்தைக்கு உரியவர்கள் அல்லரென்றும் அசம்பாவிதமாக வாதித்தார்! ஜின்னாவின் இந்த வாதத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் டாக்டர் அம்பேத்கார் சொன்னதாவது :*

"ஆனால், பஞ்சாபிலும் வங்காளத்திலும் உள்ள ஹிந்துக்கள் வெறும் தட்டு முட்டுச் சாமான்கள் தானா? பஞ்சாபிலுள்ள முஸ்லிம்களும் வங்காளத்திலுள்ள முஸ்லிம்களும் அவர்களைத் துரத்த விரும்பும் இடத்திற்கெல்லாம் ஓடிக் கொண்டிருக்க வேண்டியதுதானா? இவ்விதமாக வாதிக்கத்தான் ஜின்னா மனப் பூர்வமாய் விரும்புகிறாரா? அப்படிப்பட்ட ஒரு வாதம் நியாய புத்தியுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அசம்பாவிதமாய் இருக்கிறது. அதோடு கூட அது முற்றிலும் தர்க்க விரோதமான வாதமுமாகும். இவ்வளவு பழுத்த அனுபவம் வாய்ந்த நியாயவாதியாகிய ஜின்னாவுக்கு, அந்த வாதத்தின் குதர்க்கம் விளங்காமல் போகாதென்பது நிச்சயம். எண்ணிக்கையில் குறைந்த ஓர் இனத்தார், எண்ணிக்கையில் அதிகமான ஓர் இனத்தாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஓர் உப தேசீயத் தொகுதியாய் இருப்பதால், பிரதேசத்தைப் பிரித்துக்கொண்டு போவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லாவிட்டால் இந்தியாவை முழுமையாக எடுத்துப் பார்க்கும்போது ஹிந்துக்கள் ஓர் இனத்தார் என்றும் முஸ்லிம்கள் ஓர் உப–இனத்தார் என்றும், ஏற்படுமாகையால் அத்தகைய உப-இனத்தார் என்னும் முறையில் சுய நிர்ணய பாத்தியதை அடையவோ பிரதேசத்தைப் பிரித்துக்கொண்டு போகவோ அவர்களுக்கு உரிமையில்லை யென்று ஏன் சொல்லக் கூடாது?"

தேசீய புனருத்தாரணத்தின் கதியைத் தடுப்பதற்கான விரோதமான ஒரு புரட்சி இயக்கமே பாகிஸ்தான் கோஷமாகும். காங்கிரஸின் போக்கு புரட்சி நிறைந்தது. 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இந்திய மஹா ஜனங்கள் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் கலகம் செய்ய எழும்பியதே இதற்குச் சான்றாகும். ஆனால், சமூக வாதமென்னும் பிற்போக்குத் தந்திரங்களினால் தனது அபிவிருத்தி தடைப்படுத்தப் படுவதற்குக் காங்-

*"பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை", பக்கம் 174.

கிரஸ் இடம் கொடுத்துவிட்டது. இது காங்கிரஸ் செய்த தவருகும். பொதுஜனங்களின் உறுதியான எண்ணத்தினுல் தூண்டப்படும் ஒரு புரட்சி இயக்கமானது ஸ்திரமான பாத்தியதை உள்ளவர்களால் நடத்தப்படும் பிரசாரங்களுக்குச் செவி சாய்க்க முடியாது. ருஷ்யப் புரட்சித் தலைவர்கள் குலாக்கர்களுடைய (Kulaks) உரிமைகளைப் பற்றியாவது பாத்தியதைகளைப் பற்றியாவது அவர்களுடன் வாதம் செய்வதற்காக நின்றுவிடவில்லை. ஸார் மன்னருடைய உரிமைகளைப் பற்றியாவது சுதந்திரங்களைப் பற்றியாவது அவருடன் அவர்கள் வாதாடவில்லை.

கல்வியிலும் பொருளாதாரத்திலும் ஹிந்துக்கள் முஸ்லிம்களை விட எவ்வளவோ அபிவிருத்தி அடைந்திருக்கிருர்களென்று ஜின்னுவுக்கும் அவரைப் போன்ற சமூக வாதிகளுக்கும் தெரியும். பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இடைவிடாமல் வந்த பண்பாட்டினுலும் நாகரிகத்தினுலும் அவர்களிடம் சகிப்புத் தன்மையும் மனிதத் தன்மையும் ஏற்பட்டிருக்கின்றன வென்றும், ஆகவே பலாத்காரக் கொள்கையை அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்றுங்கூட அவருக்குத் தெரியும். மகாத்மா காந்தியின் அஹிம்சா தர்மமானது ஜின்னுவுக்கு ஒரு லாகவமான சாதனமாகக் கிடைத்தது. மிருக பலத்திற்குப் பதிலாக ஒழுக்க பலம் அல்லது ஆத்மீக பலத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று காந்திஜி பகிரங்கமாய்ப் பிரசாரம் செய்து வருகிருர். இதற்கு மாருக மிருக பலத்தைப் பிரயோகிப்பதாக அச்சுறுத்தி ஹிந்துக்களைப் பயத்தினுல் சிதற அடித்து, அவர்களுடைய உயிருக்குயிரான நன்மைகளை விட்டுவிட்டு ஓடும்படிச் சுலபமாகச் செய்து விடலாமென்று ஜின்னு நினைத்தார். ஹிந்துக்கள் கோழைகளானபடியால் அவர்களைப் பணிய வைத்துவிடலாமென்று எண்ணினுர். பொறுப்புள்ள சில வட்டாரங்களில் இந்த அம்சம் வளருவதற்கான தீவிர அடையாளங்களையும் அவர் கண்டார். ஹிந்துக்கள் தம்முன் முழந்தாளிட்டு, கைக்கட்டி, வாய்பொத்தி நின்று கருணையும் இரக்கமும் காட்டும்படிக் கெஞ்சுவார்களென்று அவர் எதிர்பார்த்தார்.

## எட்டாம் அத்தியாயம்

### ஏகாதிபத்தியத்திற்கு வெற்றி

பாகிஸ்தான் கோரிக்கையைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு, ஒரு பெரும் இராஜதந்திர வெற்றி என்று சொல்லலாம். "மன்னருடைய மகுடத்திலே உண்மையிலேயே மிக்க ஒளியும் மதிப்பும் வாய்ந்தது" என்று பெருமையுடன் சொல்லப்படும் ஒன்றுக்கு மேற்படி பாகிஸ்தான் கோரிக்கை மீண்டும் நீண்ட காலத்திற்கு உயிர் கொடுத்துவிட்டது. ஏகாதிபத்தியம் நிலைபெறுவதற்கு அதிகார வர்க்கத்தின் "பிரித்து ஆளும்" கொள்கையே அஸ்திவாரமாகும். இக் கொள்கை வெற்றிபெறுமென்பது மறுபடியும் உறுதியாய் விட்டது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை ஏற்படாதென்று இந்தியர்கள் தெரிந்து கொண்டார்கள். பிரிட்டிஷார் அழுத்தமாய் உட்கார்ந்துகொண்டு பின் வருமாறு சொல்லலாம்:— "நீங்கள் சுகமாய் இருக்கிறீர்கள்; நாங்கள் போய்விட்டால் உங்களிடையே சச்சரவும் துன்பமும் தான் ஏற்படும். நாங்கள் இருந்தால் பிரிட்டிஷ் ஆட்சியின் நன்மைகளை அடைவீர்கள்."

### இரண்டு தீமைகளில்

சரித்திரத்தில் ஏற்பட்ட ஒரு கம்பீரமான புரட்சியினால், அமிழ்ந்து கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமானது தனக்குக் கிடைக்கும் எந்த அற்பப் பொருளையாகிலும் பிடித்துக் கொள்ள ஆவலுடையதாகி இந்தியாவில் அநேக நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டது. இந்த நண்பர்கள் ஒரு விசித்திரமான தன்மை வாய்ந்தவர்களென்று இச் சந்தர்ப்பத்தில் சொல்லி வைக்கத்தான் வேண்டும். ஐக்கிய சுதந்திர இந்தியாவைப் பற்றிய சகல நம்பிக்கைகளுக்கும் உலை வைப்பதாகப் பாகிஸ்தான் அச்சுறுத்துகின்றது. இந்தப் பாகிஸ்தான் வந்துவிடப்போகிறதே என்று பீதியடைந்த ஜனங்கள், அதைக் காட்டிலும் குறைந்த தீங்குள்ளது என்னும் முறையில் கொஞ்ச காலத்திற்காயினும் பிரிட்டிஷ் ஆட்சி நடக்கட்டுமே என்று தங்களை விரைவில் சமாதானப் படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

பிரசித்தி பெற்ற "குவிட் இந்தியா" வாய்ப்பாட்டைச் சிகரமாகக் கொண்டு தோன்றிய கம்பீரமான போக்கு, சமூக வெறியர்களின் பிரசாரத்திற்கு முன் நிற்கமாட்டாமல் திடுதிப் என்று கைவிடப்பட்டது.

## பூதத்திற்குப்பலி

இச்சந்தர்ப்பத்தில் நாம் சும்மா இருக்க நினைத்தோமானுல், நாம் நமது அருமைத் தாய்நாட்டைப் பூதத்திற்குப் பலியாகக் கொடுத்தவர்களாவோம்; தேசீயத் தற்கொலை செய்துகொண்டவர்களும் ஆவோம். பாகிஸ்தான் பிரசினையை வைத்துத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, அச்செய்தி பெருவாரியான முஸ்லிம்களுக்குச் சொல்லப்பட்டு வருமானுல், பாகிஸ்தான் வந்து கொண்டிருக்கிறதென்று நாம் நிச்சயமாகக் கொள்ளலாம். கெடுதலுக்கு ஏதுவான ஜாதித் தொகுதி என்னும் தற்போதைய ஏற்பாட்டை அடிப்படையாக வைத்து நடத்தப்படும் ஒரு தேர்தலினுல், சமூகங்கள் தங்களுக்குள் பகையும் கல்மஷமும் கொள்வது இயற்கையே யாகும். ஆகையால் தற்போதைய தேர்தல் ஏற்பாடு மாற்றப்பட்டாலொழிய, விளைவு பாகிஸ்தானே ஆகும். ஏனென்றுல் முஸ்லிம் லீக் கலப்பற்ற சமூக வாதத்தின் பிரதிநிதியாக இருக்கிறது. இந்த அம்சம் காங்கிரஸைவிட அதிகமாக அதற்குள்ள ஓர் அனுகூலம் அல்லவா?

## இருப்பதா, இறப்பதா?

குருட்டு நம்பிக்கையானது தேசீயத் தற்கொலையைத் தவிர வேறு எதற்கும் நம்மைக் கொண்டுபோகாது என்று இச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டுவது அவசியமாகும். நாம் கொஞ்சம் ஆத்ம சோதனை செய்து, "நமது நாட்டின் தலைவிதி நமது தலைவர்களின் கையில் பத்திரமாக இருக்கிறதா?" என்னும் கேள்விக்கு விடை கண்டுபிடிக்கவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. மனிதர்களைப் பற்றியும் விஷயங்களைப் பற்றியுமான எவ்வித தயை தாட்சண்யத்தினுலும் நாம் நமது நிதானபுத்தியை இழந்துவிடக் கூடாது. ஏனென்றுல் நாம் இழக்கப்போகும் பணயம் அவ்வளவு பெரிது. அதை இலேசாகத் தட்டிக் கழித்துவிட முடியாது. "இருப்பதா, இறப்பதா?" என்பதே இப்பொழுது இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள கேள்வியாகும்.

பேராசை பிடித்த அரசியல் சந்தர்ப்பவாதிகள் சிலரால் முஸ்லிம் லீக் நடத்தப்படுகிறது. அந்நிய ஏகாதிபத்தியமாகிய வெறும் சுமையின்கீழ் துன்பமடைந்துகொண்டிருக்கும் ஜனங்களின் பயந்த சுவாவத்தையும் திக்கற்ற நிலைமையையும் இந்தச் சந்தர்ப்பவாதிகள் பழி பாவத்திற்கு அஞ்சாமல் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள்தான் அரசியல் மேடையில் தாம் சுலபமாக முன்னேறுவதற்குப் பாகிஸ்தான் முட்டுக்கட்டையைத் தோற்றுவித்தார்கள். தொடக்கத்திலே இந்தக் கோரிக்கை பைத்தியக்காரத்தனமானதென்றும், பிரமாதமாய்க் கவலை கொள்

வதற்கு லாயக்கற்ற தென்றும் நியாய புத்தியுள்ள எல்லாருமே நினைத்தார்கள். இறந்து பிறக்கும் குழந்தைகளைப்போல், நடைமுறையில் கைக்கொள்ள முடியாத திட்டங்கள் எப்படி மடிந்து போகின்றனவோ அப்படியே பாகிஸ்தான் கோரிக்கையும் இயற்கையாக மரணமடையுமென்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால்,அந்தோ! கேடு விளைப்பதற்கு அதற்குள்ள ஏராளமான ஆற்றல் அப்போது முற்றிலும் அறிந்துகொள்ளப்படவில்லை. ஒரு குடம் பாலில் ஒரு துளி புரை விடுவதற்கு இடம் கொடுக்கப்பட்டுவிட்டது. இன்றைய தினம் அதுவே ரத்த வெறிகொண்ட பெரும் பூதமாக மாறி, ஐக்கிய சுதந்திர இந்திய தேசம் என்னும் கருத்தின் ஆணி வேரையே கல்லி எடுக்கும் நிலைமைக்கு வளர்ந்து விட்டது.

தங்கள் கோரிக்கையை வலியுறுத்துவதில் தாங்கள் கைக்கொள்வதாக நிச்சயித்திருக்கும் யதேச்சாதிகார முறைகளைப் பற்றி முஸ்லிம் லீகும் ஜின்னாவும் ஒளிவு மறைவு ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. முதலில் அது 'சுயநிர்ணய பாத்தியதை' என்னும் போர்வையில் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு, முஸ்லிம்களும் ஹிந்துக்களும் இருவேறு இனங்களையும் சாதிகளையும் சேர்ந்தவர்களென்றும், இந்தியா எப்போதுமே ஒன்றுபட்ட தேசமாக இருந்ததில்லையென்றும், பல இனங்களும் சாதிகளும் சேர்ந்த கலப்புத் தேசந்தான் என்றும், ஆகவே ஜன நாயகம் இந்தியாவிற்குத் தகுதியற்றதென்றும் கஷ்ட சாத்தியமானதென்றும் இன்னும் இப்படிப்பட்ட பல விஷயங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

சுய நிர்ணய பாத்தியதையை வலியுறுத்தும் பொருட்டு முஸ்லிம்கள் ஒரு சமூகம் என்னும் நிலைமையை விட்டுவிட வேண்டியதாயிற்று. ஏனென்றால் மதத்தை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு சுய நிர்ணய பாத்தியதையைக் கேட்க முடியாது. எனவே ஒரு விசித்திரமான இன-தத்துவம் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தத்துவமானது நாஸிகளைப் பற்றி 'ஹெர்ன்வால்க்' (Herenvolk) வெளியிட்ட த்த்துவத்தைப் பின்பற்றி மேற்கொண்டதாகும் என்று சொல்வது குற்றமாகாது.

### பாகிஸ்தான் நியாயமா, அநியாயமா?

சுய நிர்ணய பாத்தியதையை வலியுறுத்துவதானால் பொது ஜன வாக்கு எடுக்கப்பட வேண்டும். இது முஸ்லிம் லீக் தலைவர்களுக்கு மிகவும் அசௌகரியமான தொன்றாகும். ஆகவே இந்தச் சுய நிர்ணய பாத்தியதையாகிய நோக்கத்தைக் கூடப் பிறகு கைவிட வேண்டியதாயிற்று. இப்போது உருவாகி இருக்கும் கோரிக்கை இதுதான்: "நியாயமோ அநியாயமோ, எங்களுக்குப் பாகிஸ்தான் வேண்டும். சுய

நிர்ணய பாத்தியதையோ, பொதுஜன வாக்கோ, விவாதங்களோ, பேச்சு வார்த்தைகளோகூட நுழைவதற்கு இடமில்லை.'' அவர்களை யாரும் கேள்வி கேட்கக் கூடாதாம். அவர்கள் சொல்கிறபடித்தான் நடக்க வேண்டுமாம்!

## ஜன நாயகத்திலோ தேசீயத்திலோ நம்பிக்கையில்லை

ஜன நாயகம் போன்ற விஷயங்களில் தங்களுக்கு நம்பிக்கை யில்லையென்று முஸ்லிம் லீக் தலைவர்கள் தெளிவாய்ச் சொல்லி யிருக்கிறார்கள்.* லீக் மந்திரி சபைகள் ஆட்சி செலுத்திய அல்லது இன்னும் ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கும் "பாகிஸ் தான்" என்று சொல்லப்படும் மாகாணங்களில் சிறுபான்மை யோர் நடத்தப்படும் விதம், எதிர்க்கட்சிக்காரர்களை ஒப்புக்குக் கூட விசாரணை செய்யாமல் சிறையில் அடைத்து வைக்கும் மிகச் சௌகரியமான முறையைக் கையாண்டு அவர்களை அடக்குவது, பிற்போக்கான அரசியல் கூட்டத்தாரு டனும் ஐரோப்பியப் பிரிவு போன்ற நிலையான அக்கறை யுள்ள அந்நியர்களுடன் தகாத நட்பு—ஆகிய இவைகளே வங்காளம், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள் ஆகிய வைகளிலுள்ள முஸ்லிம் லீக் மந்திரி சபைகளின் சாதாரண அம்சங்களாகும்.

அந்தந்தக் கவர்னர்களுடையவும் இதர தேசவிரோதக் கூட் டங்களுடையவுமான ஆதாரவில்லாமல் இந்தப் "பிரதிநிதித்துவ மந்திரிசபைகள்'' ஒரு நாள்கூட வேலை செய்ய முடியாதென்பது பகிரங்கமான ரகசியமாகும்.

பொதுத் தேர்தல்கள் நடந்தபோது, 1937-ம் வருஷத்தில் முஸ்லிம் லீக் ஒரு மந்திரி சபையைக்கூட ஏற்படுத்த முடியவில்லை.

லீகை மக்கள் எவ்வளவு விரும்புகிறார்கள் என்பதையும் அதனுடைய பிரதிநிதித்துவத்தின் லக்ஷணம் என்ன வென் பதையும் இது நன்றாகக் காட்டுகிறதல்லவா? நிலையான நிர்வாகச்

* பாகிஸ்தான் தினத்தன்று (23—3—1943) ஸர் ஆலிமகம் மது தெலாவி பேசுகையில் சொன்னதாவது: "முஸ்லிம்கள் ஒரு தனி இனத்தார். அதற்கு மாறாக, ஜனநாயக அடிப்படையின் பேரில் ஒரு சர்க்காரை அமைக்க காங்கிரஸ் விரும்பியது. அதாவது பத்துக்கோடி முஸ்லிம்களின் பேரில் அது ஆட்சி செலுத்த விரும்பியது. இந்தியா பல இனங்களைக் கொண்ட ஒரு சிறைச்சாலையாகும். ஒரே ஒரு இனம் கொண்ட ஒரு நாட்டில்தான் ஜனநாயக சர்க்கார் முன்னேற்ற மடைய முடியும். ஆனால் இந்தியாவிலோ வென்றால் நிலைமை மாறுபட்டதாய் இருக்கிறது.''

சபைகளின் இஷ்டத்திற் கெல்லாம் இந்த மந்திரிசபைகள் பூர்ணமாய்ப் பணிந்து போய் அதன் பலனாக மாகாண சுய ஆட்சியைக் கேலிக் கூத்தாக ஆக்கினதும்தான் லீகின் அதிகாரிகளுக்கு உதவிய கவசம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். லீக்-மந்திரி சபைகள் நீடித்து நடப்பதற்காகக் கவர்னர்களுக்கு எவ்வளவு பணிந்து போகின்றன என்பது பஞ்சாபில் நடந்த நிகழ்ச்சிகளால் தெரிகிறது. அங்கே யூனியனிஸ்ட் மந்திரி சபையை முஸ்லிம் லீக் மந்திரி சபையாக மாற்ற லீக் கையாண்ட சூழ்ச்சிகள் அந்தக் கவர்னருடைய நேர்மையான போக்கினால் கெட்டுப்போய்விட்டன. அந்தப் "பாகிஸ்தான் கோட்டை"யிலிருந்து துரத்தப்பட்ட ஜின்னாவுக்குக் காஷ்மீரிலும் கூடவா இன்னொரு கல்தா கிடைக்க வேண்டும்?

## அரசியல் சூதாட்டம்

அரசியல் ஒரு சூதாட்டமென்று சொல்லப்படுகிறது. இந்தச் சூதாட்டத்தில் முஸ்லிம் லீக் தாராளமாய் இறங்கி இருக்கிறது. ஏனென்றால், இழப்பதற்கு அதனிடம் ஒன்றுமே கிடையாது. ஆனால், லீகினுடைய பழைய சொந்த வரலாறு மிக்க கேவலமானதாகவும் தேசீய விரோதமானதாகவும் இருக்கையில், இந்த நாட்டின் எதிர்காலத்தை ராஜீயச் சூதாட்டத்திலே பணயமாக வைக்க அதற்கு என்ன உரிமை இருக்கிறது?

கடவுள் அருளால் இந்தியாவிலே ஏராளமான இயற்கைச் செல்வங்களும் கட்டுக்கடங்காத மனித பலமும் இருக்கின்றன. உண்மையிலேயே இவைகளால் பாரதநாடு ஒற்றுமையும் பலமும் அடைய வேண்டுமே யல்லாமல் பிளவுபட்டுச் சிதைந்து போகக் கூடாது. ஆனால் பிளவுக் கொள்கைக்காரர்கள் நம் நாடு பிளவுபட்டுச் சிதறுண்டு போவதற்கு நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

இந்தியாவிலே ஹிந்துக்களின் விஷயத்திலும் முஸ்லிம்களின் விஷயத்திலும் உள்ளதுபோல் அல்லாமல், பாலஸ்தீனத்திலே யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் இடையில் மத சம்பந்தமானதும் பண்பாடு சம்பந்தமானதும் பாஷை சம்பந்தமானதுமான வேறுபாடுகள், மேற்போக்கானவையாகவோ கற்பனையாகவோ இராமல், உண்மையாகவே இருக்கின்றன. இது இப்படி இருக்கும்போது, முஸ்லிம் லீக் இந்தியாவைப் பிரிக்கவேண்டுமென்று வற்புறுத்துகையில் பாலஸ்தீனத்தை யூதர்களுடைய நாடாகவும் அராபியர்களுடைய நாடாகவும் தனித்தனியாகப் பிரிப்பதற்கு ஜின்னா ஏன் ஆட்சேபிக்கிறார் என்று நமக்குக் கேட்கத்

தான் தோன்றுகிறது. ஆனல், இந்தக் கேள்விக்குப் பதில் வராது என்பது நிச்சயம். ஏனென்ருல் தர்க்கத்திற்கோ நியாயத்திற்கோ செவி சாய்ப்பது ஜின்னுவுக்கும் அவருடைய முஸ்லிம் லீகுக்கும் வழக்கமில்லை. இங்கே ஓர் உண்மை கவனிக்கத் தக்கது. அதாவது, பாலஸ்தீனத்திலே யூதர்கள் குடியேறக் கூடாதென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிடமும் அமெரிக்க பிரஸிடெண்டிடமும் ஆக்ஷேபிப்பதானது முஸ்லிம் லீகின் விச்வ-இஸ்லாமியப் பேராசைக்கு ஒரு முடிவான சான்ருக இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் பாலஸ்தீனத்திலுள்ள அராபியர்களைப் பற்றி ஹிந்துக்கள் கவலைப்படாத பொழுது இந்திய முஸ்லிம்கள் மட்டும் ஏன் கவலைப்பட வேண்டும் ?

## எப்போதுமே ஒரு நாடாக இருந்ததில்லையா ?

இந்தியா எப்போதுமே தனிப்பட்ட ஒரு நாடாக இருந்ததில்லை யென்றும் பிரிட்டிஷார்தான் அதை ஒன்ருக்கினுர்களென்றும் பாகிஸ்தான்காரர்கள் நமக்குச் சொல்லுகிருர்கள். இது உண்மையாய் இருந்தால் பிரிட்டன் இந்தியாவுக்குச் செய்த அந்த ஒரு நல்ல மகத்தான காரியத்தை ஏன் கெடுக்க வேண்டும் ? ரோமர்கள் ரோமாபுரியைக் காக்கும் பொருட்டு இங்கிலாந்தை விட்டுப் போகச் சித்தப்படுத்திக் கொண்டிருக்கையில், பிரிட்டானியர்கள் ரோமர்கள் முன்பு கை கட்டி வாய் பொத்தி மண்டியிட்டு நின்று அங்கேயே தங்கித் தங்களைப் பாதுகாக்கும்படி வேண்டிக்கொள்ளும் அளவுக்கு அடிமை மனப்பான்மை வாய்ந்தவர்களாகையால் அவர்கள் சுதந்திரம் பெறத் தகுதியற்றவர்கள் என்று சொல்வது எவ்வளவு அவலட்சணமான வாதமோ அவ்வளவு அவலட்சணம் வாய்ந்ததாகும் இந்தியாவைத் துண்டாட வேண்டும் என்பதும்.

இந்தியாவுக்கு ஒரு பலமான மத்திய சர்க்கார் இருந்தவரை, அது பூரண அமைதியையும் சமாதானத்தையும் பெற்றிருந்ததென்பது சரித்திரம் சொல்லும் உண்மையாகும். மத்திய சர்க்காரின் அதிகாரம் தளர்ந்துபோய் சரியான மேல் விசாரணை செய்ய முடியாமலும் அங்கங்களாய் உள்ள பாகங்களை ஒன்று சேர்த்து வைக்க முடியாமலும் இருந்த போதெல்லாம், இந்தியா அராஜகத்தில் ஆழ்ந்தது. இதனல் அடிக்கடி அன்னிய நாட்டார் தலையிடவேண்டி இருந்தது. இதன் முடிந்த பலனுகத்தான் பிரிட்டிஷார் வெற்றி கொண்டார்கள். மத்திய சர்க்காரிலே முகலாயர்களின் அதிகாரம் தளர்ந்தது காரணமாகவும் அதன் பலனுகச் சுதேசத் தலைவர்களுக்குள் போட்டியும் யுத்தங்களும் கிளம்பியது காரணமாகவுமே, பிரிட்டிஷ் படையெடுப்பு வெற்றி யடைந்தது. உண்மையிலேயே நாட்டைத் துண்டாடக் கூடாதென்பதற்கு இது

ஒரு எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். ஏனென்றால் இந்தியாவுக்கு ஒரு பலமான மத்திய சர்க்கார் இல்லாமல் அமைதியையும் சமாதானத்தையும் காப்பாற்ற முடியாது.

முஸ்லிம் லீக் பிரதிநிதித்துவம் வாய்ந்ததென்று சொல்வது உண்மைக்கு மாறுபட்டதாகும். விரல்களால் எண்ணி விடக் கூடிய சில பிற்போக்கான அரசியல் வாதிகள் அதில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர்களுடைய ஒரே ஒரு யோக்கிய தாம்சம் என்னவென்றால் "பிரித்து ஆளும்" விளையாட்டில் தங்களுடைய பிரிட்டிஷ் எஜமானர்களின் கட்டளைப்படித் தங்களைக் கருவிகள் ஆக்கிக்கொள்ள அவர்கள் விருப்பமுடையவர்களாய் இருப்பதே. இவர்கள் சில உத்தியோக எலும்புகளுக்கும் இதர சலுகைகளுக்கும் அந்தப் பிரிட்டிஷ் எஜமானர்களை அவ்வளவு தூரம் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

"முஸ்லிம் இனம்" என்று சொல்வதிலேயே அபாயம் தொனிக்கிறது. தர்க்க ரீதியாகப் பார்க்கும்போது "முஸ்லிம் இனம்" என்னும் சொற்றொடரில் உலகத்திலுள்ள சகல முஸ்லிம் நாடுகளும் அடங்கவேண்டும். துருக்கி, அரேபியா, இந்திய முஸ்லிம் நாடுகள் என்று வெவ்வேறாக இருக்க முடியாது. இந்துஸ்தானம் நிலைத்திருப்பதற்கே பெரும் ஆபத்தாய் இருக்கும் விச்வ-இஸ்லாமியத்தொகுதி யென்பதே இதன் உண்மைப்பொருளாகும். இத்தகைய ஒரு உலகத்துக்காகவா லட்சக் கணக்கானபேர் தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள்? லட்சக்கணக்கானபேர் இன்றும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்?

## ஒன்பதாம் அத்தியாயம்

### விச்வ-இஸ்லாம்

விச்வ-இஸ்லாமியத்தைப் பற்றிப் பேசும்போது வெறும் வரட்டு வாதத்தில் நான் இறங்கவில்லையென்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். இந்திய முஸ்லிம்களுள் சமூக மனப்பான்மையுள்ள பிரிவினரின் லட்சியந்தான் 'விச்வ-இஸ்லாம்' என்று, கிலாபத் கிளர்ச்சியினால் முற்றிலும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. கலீபாவை நீக்கக்கூடாதென்பதே இந்திய முஸல்மான்களின் ஒரு மனப்பட்ட கோரிக்கையாய் இருந்தது. கிலாபத் கிளர்ச்சியானது முஸ்லிம்களின் 'சாவா, வாழ்வா' என்ற போராட்டக் கிளர்ச்சி என்பதை நன்றாகத் தெரிந்திருந்துங்கூட காந்திஜி அக் கிளர்ச்சியைத் தலைமை தாங்கி நடத்தியது நமது நாட்டின் மிகப் பெரிய துர்பாக்கியங்களில் ஒன்றாகும். (ஹிந்துக் களை வெறுப்பதையே அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் லீக் தோன்றி ஆற்றல் பெற்றமையே இதற்குச் சான்றாகும்). மதப் போரை ஆரம்பித்து நடத்திச் செல்வதாகப் பொறுப்புள்ள முஸ்லிம் வட்டாரங்களில் எவ்வளவோ பேசப்பட்டது. ஆனால், கமால் அடாடர்க் அவர்களின் ஊக்க மூட்டும் தலைமையின் கீழ் துருக்கியே கலீபாப்பதவியை எடுத்துவிட்டது காரணமாக மேற்படி மதப்போர் நடைபெற முடியாமல் போய்விட்டது. ஆப்கானிஸ்தானத்து அமீரைக்கூட அழைப்பதென்று பகிரங்கமாய்ப் பேசப்பட்டது. இந்தியாவின்மீது படையெடுக்க கிலாபத்காரர்கள் அமீரோடு பேரம் பேசினார்களா என்பது இன்னும் தெரியவில்லை. அந்தக்காலத்திலே மக்களின் உணர்ச்சி மலைபோல் எழும்பி இருந்தது. இதன் எதிரொலியைக் காந்திஜியின் வாசகத்தில் காணலாம்:*

"ஆப்கானிஸ்தானத்து அமீர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மீது போர் தொடுத்தால் ஒருவகையில் நான் அவருக்கு நிச்சயமாக உதவி செய்ய முடியும். அதாவது, நாட்டின் நம்பிக்கையை இழந்துவிட்டிருக்கும் ஒரு கவர்ன்மெண்டாருக்கு இன்னும் அரசாண்டு கொண்டிருக்கக்கூடிய அளவுக்கு உதவி செய்வது குற்றமாகுமென்று நான் என்னுடைய நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாய் எடுத்துச் சொல்வேன்."

காந்திஜியே இப்படிச் சொல்ல வேண்டி இருந்ததென்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்.

---

*யங் இந்தியா, 4-5-1921.

முஸல்மான்களிலே கலக உணர்ச்சி கொண்டவர்களும் வாயுள்ளவர்களுமான சிலர் சுயராஜ்ய லட்சியத்திற்கு இணங்கி காந்திஜியின் தலைமையை ஒப்புக்கொண்டார்கள். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை வற்புறுத்தி, கலீபாவை அப்படியே நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் தங்களுடைய ஆவலினால்தான் அவர்கள் காந்திஜியின் தலைமையை ஒப்புக்கொண்டார்களென்பது ஸ்பஷ்டமாய்த் தெரிந்தது. ஆகையினால் சுயராஜ்யமானது சமயத்திற்கேற்ற ஒரு கருவியாகவும், கலீபாப் பதவி அற்றுப் போகாமல் காப்பதற்கு ஒரு சாதனமாகவுமே ஒப்புக்கொள்ளப்பட்டதே யல்லாமல் அடிப்படையான ஒரு கருத்தாக அது ஒப்புக் கொள்ளப் படவில்லை. காந்திஜியே இதை அடியிற் கண்டவாறு ஒப்புக் கொண்டிருக்கிறார்:*

"தங்களுக்குள்ள ஆத்திரத்தினாலும் கோபத்தினாலும், காங்கிரஸும் கிலாபத் ஸ்தாபனங்களும் இன்னும் தீவிரமாகவும் உடனுக்குடனும் காரியம் நடத்தும்படி முஸல்மான்கள் கேட்கிறார்கள். முஸல்மான்களுக்கு, சுயராஜ்யமென்பது, கிலாபத் பிரச்னையைத் திறம்பட விவகரித்து முடிக்க இந்தியாவுக்குள்ள ஆற்றல் என்றுதான் பொருளாகும். அப்படித்தான் அவர்கள் பொருள் கொள்ள வேண்டும். ஆகையினால், சுயராஜ்யம் என்பது வரையறை யில்லாத காலதாமதம் என்று ஏற்படுவதாயிருந்தாலும், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே துருக்கி தேசம் நிர்மூலமாய்ப் போவதை இந்திய முசல்மான்கள் பார்த்துக் கொண்டிருந்தும், ஒன்றும் செய்ய முடியாமலிருக்க வேண்டியிருந்தாலும், முசல்மான்கள் காத்துக்கொண்டிருக்க மறுக்கிறார்கள்."

எனவே, இந்திய முசல்மான் ஒருவருக்கு இந்திய சுயராஜ்யத்தைவிட துருக்கியில் கலிபாப் பதவிக்கு ஆபத்து நேர்ந்திடுமென்பதே அதிக முக்கியமாய் இருந்தது. இந்த நோக்கம்தான் முஸ்லிம் மூர்க்கவாதியைத் தாம் "முதலில் முஸ்லிம், பிறகுதான் இந்தியன்" என்று சொல்லுமாறு செய்கிறது.

ஹிந்துக்களுக்குப் போக்கிடம் எதுவும் இல்லாதிருக்க, இந்திய முஸ்லிம்கள் தங்களை ஆதரிக்கும்படி முஸ்லிம் நாடுகளைக் கேட்கலாம் என்று காலஞ்சென்ற மௌலானா ஷௌகத் அலி பெருமை யடித்துக்கொள்வது வழக்கம். ஹிந்துக்கள் "வந்தே மாதரம்" (தாய் நாட்டுக்குவணக்கம் என்றுதான் இதற்கு

*"பாகிஸ்தான்" என்னும் நூலின் 144 வது பக்கத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டது.

அர்த்தம்) என்று கோஷமிடுவார்களானுல், அதற்கு எதிரிடையாக முஸ்லிம்கள் "அல்லாஹோ அக்பர்" என்று கோஷமிட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினுர். முஸ்லிம் லீக் அங்கத்தினர்கள் முன்பு வந்தேமாதர கீதம் பாடப்படுமானுல் அவர்கள் ஆட்சேபிப்பார்கள் என்பது நிச்சயம். ஆகவே, இந்தியா தங்களுடைய தாய்நாடு என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்படும் ஒரு விபரீதமான நிலைமையில் அவர்கள் இருக்கிருர்கள். இதைக் கவனத்தில் வைத்துக் கொள்வது முக்கியமானதாகும்.

கோர்ட் விசாரணை ஒன்றில் மௌலானு முஹம்மத் அலி அடியிற் கண்டவாறு சொன்னுர்:*

> "ஒரு முஸல்மான், குடிஜனங்களில் ஒருவனு யிருந்தாலும் சரி, போர் வீரனுயிருந்தாலும் சரி, முஸ்லிம் ஆட்சியின் கீழ் வ்சித்து வந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாத ஆட்சியின் கீழ் வசித்து வந்தாலும் சரி, அவனுடைய விசுவாசம் பெறவேண்டியவர்கள் கடவுளும், நபியும் முஸல்மான்களிலே அதிகாரத்தில் இருப்பவர்களுமே யாகும் என்று குர்-ஆன் கட்டளையிடுகிறது. மேற்படி அதிகாரத்திலிருப்பவர்களில் முக்கியமானவர் நபி அவர்களின் வாரிசு அல்லது மதகுரு என்பது சொல்லாமலே விளங்கும்."

ஒரு முஸ்லிமானவர் முஸ்லிம் அரசாங்கம் ஒன்றுடன் கலந்துகொண்டு—தனது சொந்த நாட்டின் பேரிலேயே போர் தொடுத்தாலும், இஸ்லாம் சட்டங்களை அனுசரித்துத் தாம் வசிக்கும் நாட்டின் சட்டங்களை மீறினுலும், அவர் குர்-ஆனின் உபதேசங்களைப் பூரணமாகப் பின்பற்றி நடந்து கொண்டவராவார். இது தான், முஸ்லிம் லீகின் தலைவர்களாயிருக்கும் முஸ்லிம் சமூகவாதிகளின் உண்மை நோக்கங்களைப் பற்றிக் கவலைக்கிடமான சந்தேகங்கள் கொள்ளச் செய்கிறது.

டாக்டர் ரவீந்திரநாத டாகுர் அவர்களைப் பேட்டி கண்ட பிறகு ஒரு வங்காளப் பத்திரிகை எழுதிய விவரம் அடியிற்கண்டதாகும்:†

> "............ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை அடைய முடியாமற் செய்யும் இன்னெரு முக்கியமான காரணம், மகம்மதியர்கள் தங்களுடைய தேச பக்தியை ஏதாவது ஒரு

* "பாகிஸ்தான்" என்னும் நூலில் 268 வது, 269 வது பக்கங்களில் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டது.

† "பாகிஸ்தான்" என்னும் நூலின் 26வது பக்கத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டது.

நாட்டுக்கு மட்டும் வரையறுத்துக் கொள்ள முடியாமலிருப்பதுதான் என்று கவிஞர் கருதுகிறார். உதாரணமாக எந்த மகம்மதிய நாடாவது இந்தியாவின் மீது படையெடுத்து வந்தால், மகம்மதியர்கள் தங்களுடைய பொது நிலத்தைக் காக்கும் பொருட்டு ஹிந்து சகோதரர்களுக்குத் துணையாக நிற்பார்களா என்று அனேக மகம்மதியர்களைத் தாம் பட்டவர்த்தனமாகக் கேட்டதாகக் கவிஞர் சொன்னார். அவர்கள் தெரிவித்த பதிலினால் அவர் திருப்தியடையவில்லை. 'ஒரு மகம்மதியனின் நாடு எதுவாயிருந்தபோதிலும் அவன் எந்தச் சந்தர்ப்பத்திலும் வேறொரு மகம்மதியனுக்கு எதிரிடையாக நிற்கமுடியா'தென்று முஹம்மது அலி போன்றவர்கள் கூட அறுதியிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்று தாம் திட்டமாகக் கூறமுடியு மென்று கவிஞர் சொன்னார்."

1939-ம் வருஷத்திலே ஸில்ஹெட்டில் பேசியபோது மௌலானா அஸார் ஸோபானி அடியிற்கண்டவாறு சொன்னார்* இது கவனிக்கத் தக்கது:

"..........அவர்களை (ஹிந்துக்களை) பலப்படுத்துவதோ, பலவீனமாக்குவதோ ஒன்பது கோடி இந்திய முஸ்லிம்களைப் பொறுத்ததாகும். ஆகவே, ஆங்கிலேயர்கள் போய்விட்டவுடன், இங்கே ஹிந்துக்கள் வேரூன்றாமல் இந்தியாவிலே முஸ்லிம் ஆட்சியே நிலைபெறும்படியாக முஸ்லிம் லீகைச் சேர்ந்து கிளர்ச்சி செய்து கொண்டிருப்பதே உண்மையான முஸ்லிம் ஒவ்வொருவனுடைய இன்றியமையாக் கடமையாகும்.

"ஆங்கிலேயர்கள் முஸ்லிம்களுக்குப் பகைவர்களா யிருந்தபோதிலும் அவர்களோடு நாம் இப்போது போராடுவதற்கில்லை. முதலிலே முஸ்லிம் லீகின் மூலமாக ஹிந்துக்களுடன் நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டும். அப்போது தான் ஆங்கிலேயர்களை வெளியே துரத்திவிட்டு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை நிலைநிறுத்துவது நமக்குச் சுலபமாய் இருக்கும். ஜாக்கிரதையாயிருங்கள்! காங்கிரஸ் மௌல்விகளுடைய வலையில் விழாதீர்கள். 22 கோடி ஹிந்துப் பகைவர்களின் கையில் முஸ்லிம் உலகம் ஒரு போதும் சுகமாயிருக்க முடியாது."

*"பாகிஸ்தான்" என்னும் நூலில் 296 வது பக்கத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் மேற்கோளாகக்காட்டப்பட்டது.

ஒரு தடவை மௌலானு முஹம்மது அலி வெளியிட்ட கருத்து, மிகுந்த பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அவர் சொன்னதாவது :*

"காந்தியின் குணதிசயங்கள் தூயவையாய் இருந்தபோதிலும், மதக்கண்கொண்டு பார்க்கும்பொழுது, ஒழுக்கங் கெட்ட ஒரு முசல்மானுக்குக் கீழ்ப்பட்டவராகத்தான் அவர் எனக்குத் தோற்றுகிறார்."

காந்திஜியின் அத்யந்த சீடராகிய முஹம்மது அலி இப்படிச் சொன்னாரென்று நம்ப முடியவில்லை அல்லவா? ஆமாம். பலர் அப்போது அதை நம்பவில்லைதான். பின்னால், மேற்படி அபிப் ராயம் உண்மையில் அவருடையதுதானு என்று விளக்குமாறு அவரைக் கேட்டபோது, அவர் சிறிதும் தங்கு தடையின்றிச் சொன்னதாவது :

"ஆம், என்னுடைய மதப்படியும், கொள்கைப்படியும், முறைகேடாகப் பிறந்தவனும் சீரழிந்து போனவனு மான ஒரு முஸல்மான் காந்தியை விட மேலானவன் என்பதே எனது உறுதியான கொள்கையாகும்."

ஆகவே, ஒரு ஹிந்து எவ்வளவு உண்மையாளராகவும், மரியாதைக்கு உரியவராகவும் இருந்த போதிலும், அவர் ஹிந்து என்னும் காரணத்தினாலேயே ஒரு முஸல்மானின் கண் ணுக்கு நீசப்பிறவியாகத் தோற்றுகிறார். சில முஸ்லிம் தலைவர்கள் இந்த நீசப்பிறவிகளின் மீது முஸ்லிம் ஆட்சியை நிலை நிறுத்த ஆவலாயிருப்பதில் வியப்பில்லையல்லவா?

முஸ்லிம் லீக் தலைவர்கள் சொல்லியிருப்பதையும் அதன் வரலாற்றையும் நிதானித்துப் பார்க்கும்போது, முஸ்லிம் லீக் தலைவர்களின் அந்தரங்க நோக்கங்களைப் பற்றி உண்மையில் அச்சம் கொள்வதற்குக் காரணமிருக்கிறது என்று சொல்வது மிகையாகாது.

பிரிட்டிஷ் சர்க்கார் கொடுக்கும் ஆதரவினாலும், காங்கிரஸ் முஸ்லிம் லீகிற்கு அளித்திருக்கும் அங்கீகாரத்தினாலும், முஸ்லிம் லீகின் பிற்போக்கான சமூகவாதிகளாயுள்ள தலைவர்கள் இன்றைய தினம் முஸ்லிம் சமூகத்தின் தலையெழுத்தை எழுதவேண்டிய வர்களா யிருக்கிறார்கள். அந்த சமூகத்திலே முன்னேற்ற நோக்கமுள்ள சிலர் எவ்வளவோ கஷ்டங்களுக்கு இடையில், தாங்கள் சொல்வதெல்லாம் விழலுக்கிறைத்த நீராகி வருவதைப்

* "பாகிஸ்தான்" என்னும் நூலில் 296 வது பக்கத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டது.

பார்த்து வருகிறார்கள். அவர்கள் சொல் அம்பலமேறும் நாள் தான் இந்தியாவின் மகோந்நதமான நாளாகும். ஏனென்றால், உலகத்தின் முன்பு இந்தியாவின் பெயருக்கு மிகப் பெரிய களங்கம் விளைவித்தவர்களும் இந்தியாவின் கீர்த்தியைச் சீரழியச் செய்தவர்களுமான ஒரு கும்பலுக்கு அன்றுதான் சாவுமணி அடிக்கப்படும்; அன்றுதான் இந்தியாவுக்கு உண்மையான சுதந்திரமும் பாதுகாப்பும் உதயமாகும். அந்த நாளை விரைவில் காணக் கூடியவர்கள் பிரிட்டிஷ் சர்க்காரும் காங்கிரஸும் தான். என்றைக்காவது ஒரு நாள் அந்த நாள் வந்து தான் தீரவேண்டும். இல்லாவிட்டால் இந்தியாவுக்கு எதிர்காலம் என்பதே கிடையாது. இந்தியாவையும் அதன் சுதந்திரத்தையும் நேசிப்பவர்கள், உண்மையிலேயே அப்படி நேசிப்பவர்களா யிருந்தால், மேற்படி தினத்தைக் கொண்டு வருவதற்கு வேலை செய்ய வேண்டும். மேற்கண்ட உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாமல், சுதந்திரம் அடைய குறுக்கு வழிகளில் போக யத்தனிப்பவர்கள் ஏதோ ஒரு பைத்தியக்கார உலகத்தில் வசிப்பதற்குப் பிடிவாதம் பிடிப்பவர்களே யாவார்கள்; தன்னால் ஒருபோதும் அடைய முடியாத நிலை வேண்டு மென்று அழும் குழந்தையையே ஒப்பார்கள்.

இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் படையெடுப்பவனுடன் சேர்ந்து கொள்ளவேண்டுமென்றாவது, அவனுடைய நாட்டுக்கு எதிரிடையாக யுத்தம் செய்யவேண்டு மென்றாவது, அவனுடைய நாட்டின் சுதந்திரத்துக்கு எதிரிடையாகச் சதியாலோசனை செய்யவேண்டுமென்றாவது, அம்மதக் கொள்கைகள் வற்புறுத்தினால், பிரஸ்தாப நாட்டுச் சர்க்கார் சில சட்டங்களை ஏற்படுத்தக் கடமைப்பட்டதாகும். அதாவது மற்றவர்களைப் போல் முஸ்லிம்களுக்கும் பிரஜா உரிமை இருந்தபோதிலும், அவர்களுடைய மதபோதனைகளுக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் க்ஷேமத்திற்கும் முரண்பாடு இருக்கக் கூடாதென்று மேற்படி சட்டங்கள் விதிக்கவேண்டும். சைமன் கமிஷனின் வாசகத்தில் கண்டுள்ளபடி,

> "ஒருவன் வெடி மருந்துக் கிடங்கில் வசிப்பவனாயிருந்தால், சிகரெட் பிடிப்பதற்கு அவனுக்கு இயற்கையாகவே யுள்ள உரிமையைக் கூடக் கட்டுப்படுத்தித் தான் ஆகவேண்டும்."

நாட்டின் சுதந்திரத்துக்குப் பெருங்கேடு நேரிடச்செய்வதாயிருந்தால்தான், காங்கிரஸ் இவ்வுண்மையைக் கவனிக்கத் தவறும்.

---

Thompson & Co., Ltd., Madras.

PRINTED AT
THOMPSON & CO. LTD., (MINERVA PRESS)
33, BROADWAY
MADRAS